Annamalai University Tamil Series

# பட்டினப்பாலை

## ஆராய்ச்சியும் உரையும்

பாஷா கவிசேகர மகாவித்வான்

**ரா. இராகவையங்கார்**

எழுதியது.

அண்ணாமலைநகர்

1951

Annamalai University Tamil Series

# பட்டினப்பாலை

36272

## ஆராய்ச்சியும் உரையும்

RAJAH'S HIGH SCHOOL

பாஷா கவிசேகர மகாவித்வான்

**ரா. இராகவையங்கார்**

எழுதியது.

அண்ணாமலைநகர்

1951

Tamil Nadu Press, Madurai—51
Copies 500.

O 31,1B 751
3121

# பட்டினப்பாலை

## பதிப்புரை

இவ்வரிய ஆராய்ச்சியும் உரைப்பகுதியும் பாஷாகவிசேகரர் மகாவித்வான் ரா. இராகவையங்கார் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராகவும் நான் அவர்க்குதவியாகவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துப் பணிஆற்றியபோது எழுதப்பட்டவை. நுண்மாணுழை புலம்வாய்ந்த இப்புலவர் பெருமான், இதுகாறும் யாரும் கூறாத பல அரிய செய்திகளை இக்கட்டுரையில் வெளியிட்டுள்ளார். சங்க நூல்களை மாத்திரம்கொண்டு ஆராயுங்கால் பொருநராற்றுப்படைத் தலைவன் கரிகாலனாகவும், பட்டினப்பாலைத்தலைவன் திருமாவளவனாகவும் கொள்ளநேரும் என்றும், இருவரும் ஒருவரல்லர் என்றும், இச்செய்திகள் இவ்விரு நூல்களினுள்ளும் இவ்விருவரைப்பற்றிக் கூறுவனவற்றால் நன்கு விளங்குமென்றும், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனே இத்திருமாவளவன் என்றும், சிலப்பதிகாரத்திற் கூறும் செய்திகளை நம்பி நச்சினார்க்கினியர் முதலிய பலரும் பிறழவுணர்ந்தனர் என்றும், சேரரேயன்றிச் சோழர் தம் கொடியை இமயத்திற் பொறித்ததாக எட்டுத்தொகையில் யாண்டும் கூறப்படவில்லையென்றும், தாய்வயிற்றிலிருந்து தாயமெய்தியது, எழுவர் மன்னரை வெற்றிகொண்டது, பிறர் பிணியகத்திருந்து மீண்டது முதலிய பல செய்திகள் திருமாவளவற்கேயன்றி, கரிகாலற்கெவ்வகையினும் பொருந்துவன அல்ல என்றும், பல அரிய அகச்சான்று புறச்சான்றுகள் காட்டி எழுதிய இக்கட்டுரை தமிழ் மக்கட்குப் பெருமகிழ்வை விளைப்பதோடு இன்னும் பல புதிய ஆராய்ச்சிகட்கும் சிறந்த அடிப்படையாகும் என்பதற்கையமில்லை. உரைப்பகுதியில் நச்சினார்க்கினியர் உரையைச் சில இடங்களில் மறுத்தும், தமது துணிபு கூறியும், ஆசிரியர் வரைந்திருப்பது, அவரது உரை தீட்டும் வன்மையை நன்கு விளக்கும். உரையை எளிதில் அறிந்து மகிழும்படி பட்டினப்பாலை மூலமும் அச்சிடப் பட்டுள்ளது. தமிழ்ப்புலவர்கட்கு இஃது ஓர் அரிய விருந்தாகும்

23—1—51 E. S. வரதராஜய்யர்

## பொருளடக்கம்


| | |
|---|---|
| பட்டினப்பாலை மூலம் | 1—10 |
| ஆராய்ச்சி | 1—34 |
| உரைப்பகுதி | 35-101 |

# கடியலூர் உருத்திரங் கண்ணனார்

இயற்றிய

# பட்டினப்பாலை

---

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்
காய்ச்செந்நெற் கதிரருந்து
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியுங்
கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ்மஞ்ச
ளினமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி
யகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கி
னேரிழை மகளி ருணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழைப்
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டு
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்

விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலைப் புரவியி னணைமுதற் பிணிக்குங்
கழிசூழ் படப்பைக் கலியாணர்
பொழிற்புறவிற் பூந்தண்டலை
மழைநீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீ
னுருகெழுதிற லுயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
யிருகாமத் திணையேரிப்
புலிப்பொறிப் போர்க்கதவிற்
றிருத்துஞ்சுந் திண்காப்பிற்
புகழ்நிலைஇய மொழிவளர
வறநிலைஇய வகனட்டிற்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
யேறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயின் மாசூட்டுந்
தண்கேணித் தகைமுற்றத்துப்
பகட்டெருத்தின் பலசாலைத்
தவப்பள்ளித் தாழ்காவி
னவிர்சடை முனிவ ரங்கி வேட்கு
மாவுதி நறும்புகை முனைஇக் குயிறம்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த்

தூஉதணம் புறவொடு துச்சிற் சேக்கும்
முதுமரத்த முரண்களரி
வரிமணலகன் றிட்டை
யிருங்கிளை யினனொக்கற்
கருந்தொழிற் கலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும்
வறளடும்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியும்
நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாது
இருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்
கல்லெறியுங் கவண்வெரீஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தைப்
பறழ்ப்பன்றிப் பல்கோழி
யுறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாடக்
கிடுகுநிரைத் தெஃகூன்றி
நடுகல்லி னரண்போல
நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய
குறுங்கூரைக் குடிநாப்பண்
நிலவடைந்த விருள்போல
வலையுணங்கு மணன்முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூதாளத்துத் தண்பூங் கோதையர்
சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்
மடற்றாழை மலர்மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்

புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா
துவவுமடிந் துண்டாடியும்
புலவுமணற் பூங்கானன்
மாமலை யணைந்த கொண்மூப் போலவுந்
தாய்முலை தழுவிய குழவி போலவுந்
தேறுநீர்ப் புணரியோ டாறுதலை மணக்கு
மலியோதத் தொலிகூடற்
றீதுநீங்கக் கடலாடியும்
மாசுபோகப் புனல்படிந்து
மலவ னாட்டியு முரவுத்திரை யுழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டு
மகலாக் காதலொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைத்
துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டு நீக்கித் துகிலு டுத்து
மட்டு நீக்கி மதுமகிழ்ந்து
மைந்தர் கண்ணி மகளிர் சூடவு
மகளிர் கோதை மைந்தர் மலையவு
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக்
கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுட ரெண்ணவும்
பாட லோர்த்து நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்றுய்த்தும்
கண்ணடை இய கடைக்கங்குலான்
மாஅகாவிரி மணங்கூட்டுந்
தூஉவெக்கர்த் துயின்மடிந்து
வாலிணர் மடற்றாழை
வேலாழி வியன்றெருவி
னல்லிறைவன் பொருள்காக்குந்
தொல்லிசைத் தொழின்மாக்கள்

காய்சினத்த கதிர்ச்செல்வன்
றேர்பூண்ட மாஅபோல
வைகெறூஉ மசைவின்றி
யுல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவு
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவு
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவு
நிலத்தினின்று நீர்ப்பரப்பவு
மளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை
யேழகத் தகரோ டுகளு முன்றிற்
குறுந்தொடை நெடும்படிக்காற்
கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்துச்
சேவடிச் செறிகுறங்கிற்
பாசிழைப் பகட்டல்குற்
றூசுடைத் துகிர்மேனி
மயிலியன் மானோக்கிற்
கிளிமழலை மென்சாயலோர்
வளிநுழையும் வாய்பொருந்தி
யோங்குவரை மருங்கி னுண்டா துறைக்குங்
காந்தளந் துடுப்பிற் கவிகுலை யன்ன

செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவறா வியலாவணத்து
மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்
வருபுன றந்த வெண்மணற் கான்யாற்
றுருகெழு கரும்பி னொண்பூப் போலக்
கூழுடைக் கொழுமஞ்சிகைத்
தாழுடைத் தண்பணியத்து
வாலரிசிப் பலிசிதறிப்
பாகுகுத்த பசுமெழுக்கிற்
காழூன்றிய கவிகிடுகின்
மேலூன்றிய துகிற்கொடியும்
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரிய
ருறழ்குறித் தெடுத்த வுருகெழு கொடியும்
வெளிலிளக்குங் களிறுபோலத்
தீம்புகார்த் திரைமுன்றுறைத்
தூங்குநாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பி னசைக்கொடியும்
மீன்றடிந்து விடக்கறுத்
தூன்பொரிக்கு மொலிமுன்றின்
மணற்குவைஇ மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதவி
னறவுநொடைக் கொடியோடு
பிறபிறவு நனிவிரைஇப்
பல்வே றுருவிற் பதாகை நீழற்
செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பிற்
செல்லா நல்லிசை யமரர் காப்பி
னீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்

காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமு
மரியவும் பெரியவு நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகி
னீர்நாப் பண்ணு நிலத்தின் மேலு
மேமாப்ப வினிது துஞ்சிக்
கிளைகலித்துப் பகைபேணாது
வலைஞர் முன்றின் மீன்பிறழவும்
விலைஞர் குரம்பை மாவீண்டவுங்
கொலைகடிந்துங் களவு நீக்கியு
மமரர்ப் பேணியு மாவுதி யருத்தியு
நல்லானொடு பகடோம்பியு
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறை
[கொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசுந்
தொல்கொண்டித் துவன்றிருக்கைப்
பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையு

முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர்,பிணி யகத்திருந்து பீடுகாழ் முற்றி
யருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாய மூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்
கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றா
ளுகிருடை யடிய வோங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு
வேறுபல் பூளையோ டுழிஞை சூடிப்
பேய்க்க ணன்ன பிளிறுகடி முரச
மாக்க ணகலறை யதிர்வன முழங்க
முனைகெடச் சென்று முன்சம முருக்கித்
தலைதவச் சென்று தண்பணை யெடுப்பி
வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்
கராஅங் கலித்த கண்ணகன் பொய்கைக்
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்
செறுவும் வாவியு மயங்கி நீரற்
றறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவுங்
கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி
யந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியிற்

பருநிலை நெடுந்தூ ணொல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையு
மருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்
முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் றீந்தொடை யோர்க்கும்
பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்துச்
சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி
யழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவு
மழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவுங்
கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇப்
பிணந்தின் யாக்கைப் பேய்மகள் துவன்றவுங்
கொடுங்கால் மாடத்து நெடுங்கடைத் துவன்றி
விருந்துண் டானாப் பெருஞ்சோற் றட்டி
லொண்சுவர் நல்லி லுயர்திணை யிருந்து
பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்த்
தொடுதோ லடியர் துடிபடக் குழீஇக்
கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட
வுணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவு
மருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற
மலையகழ்க் குவனே கடறூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலிற்
பல்லொளியர் பணிபொடுங்கத்
தொல்லருவாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் றிறல்கெடச் சீறி மன்னர்
மன்னெயில் கதுவு மதனுடை நோன்றாண்
மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணாற் செயிர்த்து நோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற

விருங்கோவேண் மருங்குசாய்க்
காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயிற்றொறும் புதைநிறீஇப்
பொருவேமெனப் பெயர்கொடுத்
தொருவேமெனப் புறக்கொடாது
திருநிலைஇய பெருமன்னெயின்
மின்னொளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி
விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்காற்
பொற்றொடிப் புதல்வ ரோடி யாடவு
முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவுஞ்
செஞ்சாந்து சிதைந்த மார்பி னொண்பூ
ணரிமா வன்ன வணங்குடைத் துப்பிற்
றிருமா வளவன் றெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே.

# பட்டினப்பாலை.

இப்பாட்டுடைத்தலைவன் திருமாவளவன் என்னும் பெயரால் ஈண்டுக் கூறப்பட்டோன். இவன் கரிகாற் பெருவளத்தான் என்பது நச்சினார்க்கினியர் முதலிய உரைகாரர் பலர் கொள்கையாம். அவர் அங்ஙனந் துணிதற்குக் காரணம் சிலப்பதிகாரத்து இந்திர விழவூர் எடுத்த காதைக்கண்,

"இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலிற் றிருமா வளவன்
புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையுஞ் சிமயப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு"

என வருமிடத்து இமயப் பிடர்த்தலையிற் கொடுவரிக் கொடியடையாளத்தைப் பொறித்தவனைத் திருமாவளவன் என்னும் பெயரான் இளங்கோவடிகள் கூறியதே பற்றி யாமென்று உய்த்துணரலாம். சோழர் குடியிற் சான்றோர் புகழ்ந்த பேரரசர் பலர், பெருந் திருமாவளவன் (புறம். 58, 60, 197) எனவும், மாவளத்தான் (ஷை 43) எனவும், நெடுமாவளவன் (ஷை. 228) எனவும், திருமாவளவன் (பட்டினப்பாலை, சிலப்பதிகாரம்) எனவும் வழங்கப்பட்டுள்ளனர். பெருந் திருமாவளவன் என்னும் பெயர் குராப்பள்ளித் துஞ்சிய சோழன் பெயராம். மாவளத்தான் என்பது சோழன் நலங்கிள்ளியின் தம்பி பெயராம். நெடுமாவளவன் என்பது சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவற்கு வழங்கப்பட்டது. திருமாவளவன் சிலப்பதிகாரத்து வடநாடு சென்று இமயத்துப் புலிக்கொடி பொறித்த செய்தி கலிங்கத்துப் பரணியிற்,

"செண்டு கொண்டுகரி காலனொரு நாளிலிமையச்
சிமைய மால்வரை திரித்தருளி மீளவதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்றுமுதுகிற்
பாய் புலிக்கொடி பொறித்தது மறித்தபொழுதே."

என வருந்தாழிசை யானும், சிலப்பதிகாரத்து இந்திர விழவூ ரெடுத்த காதை யுரையில் அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டிய

"கச்சி வளைக்கச்சிக் காமக்கோட் டங்காவன்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன் —கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு"

என வரும் வெண்பா வானும் கரிகாலற்குக் கேட்கப் படுகின்ற திருமாவளவன் அக்கரிகாலனே யாவன் என்று துணிந்தனர் என்பது நன்கு தெரியலாம். ஈண்டும் பின்னர்க் காட்டிய வெண்பாவினும் கரிகாலனுக்குப் பெருவளத்தான் என்பதும் பெயரெனத் தெரியக் கிடப்பது. சிலப்பதிகாரப் புகார்க்காண்ட மங்கலவாழ்த்துப் பாடலி னிறுதியில்,

"இப்பா லிமயத் திருத்திய வாள்வேங்கை
யுப்பாலைப் பொற்கோட் டுழையதா —வெப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒருதனி யாழி யுருட்டுவோ னெனவே"

என வருவதன்கண் இமயத்து வேங்கை யிருத்தியவன் செம்பியன் என்னுஞ் சோழர் குடிப்பொதுப் பெயராற் கூறப் பட்டான். ஈண்டு அடியார்க்குநல்லார் செம்பியன் என்பதற்குக் கரிகாலன் எனவுரை கூறினர். மேலே காட்டிய "கச்சிவளைக் கச்சி" என்னும் வெண்பாவினுற் கரிகாலனுக்குக் கச்சிமாநகருடன் ஒரு தொடர்பு கூறப்பெற்றுள்ளது. இத்தொடர்பு "கரிகாலனை நண்ணு யாரெழில் கொள் கச்சி" (கச்சியே கம்பம். ஆளுடைய பிள்ளை) எனவருந் தேவாரத் திருப்பாட்டடியானும் உணரப்படுவது. பட்டினப்பாலை ஆசிரியர் தாம்பாடிய பெரும்பாணாற்றுப்படையாற் றொண்டை நாட்டையும் அதன் தலைநகராகிய கச்சி வெஃகாவையும்,

இளந்திரையனுக் குரியவாக்கிக் கூறலான் இவர் காலத்துக் கரிகாலனுக்குரிய தாகாமை இனிதுணரலாம். பட்டினப்பாலைத் திருமாவளவனும் கச்சியிற் சாத்தனை வழிபட்டுச் செண்டு கொண்டு செம்பொற் கிரிதிரித்த கரிகாலனும் ஒருவனே என்பார்க்கு, இவ்வாசிரியர் கச்சியை வேறொருவர்க் குரிமையாக்குதலும், பட்டினப்பாலையுள்ளும், பொருநராற்றுப்படையுள்ளும் இவரும் பிறரும் கச்சியையே கூறாமையும் பெரிய விரோதங்களாமென்க. கரிகாலன் இமையத்தில் வேங்கைக் கொடியைப் பொறித்த செய்தியும் அவன் கச்சிமாநகருடைமையும், அக் கரிகாலனைப் பற்றிப் பல வரலாறுகளை இனிது வெளிப்படுக்கும் புறப்பாட்டினும், அகப்பாட்டினுஞ் சிறிது மில்லாமை நினையத்தகும். சேரர் தம் விற்கொடியை இமயமலையிற் பொறித்த செய்தி யல்லது மற்றைச் சோழரும் பாண்டியரும் முறையே தம் புலிக்கொடியையும் கயற் கொடியையும் அம்மலையிற் பொறித்தனர் என்பது எட்டுத்தொகை நூல்களிற் கேட்கப்படாத தொன்றாகும். தொல்காப்பியத்து "அமரர் கண்முடியு மறுவகை யானும்" (புறத்திணை. 26) என்னுஞ் சூத்திர வுரையில் நச்சினார்க்கினியர் காட்டிய,

"புயல்சூடி நிவந்த பொற்கோட் டிமயத்து,
வியலறைத் தவிசின் வேங்கைவீற் றிருந்தாங்
கரிமான் பீடத் தரசுதொழ விருந்து,
பெருநிலச் செல்வியொடு திருவீழ் மார்பம்
புதல்வரும் தாமு மிகலின்று பெறூஉம்
திகளில் கற்பின் மகளிரொடு விளங்கி
முழுமதிக் குடையி னமுதுபொதி நீழல்,
எழுபொழில் வளர்க்கும் புகழ்சால் வளவன்,
பிறந்துபா ரகத்துப் பிறர்வாய் பரவநின்,
னறங்கெழு சேவடி காப்ப, வுறந்தையோ
டூழி யூழி வாழி,
யாழி மாநில மாழியிற் புரந்தே" *

---

* இப்புறப்பாட்டுக் கிள்ளி வளவனையே பாடிய தென்பது 'வளவ' என்னும் பெயரான் உணரப்படும். முதற்பதிப்புப் பார்க்க.

என்னும் பாட்டினுள்ளும் இமயத்துப் பாறையின் வீற்றிருந்த வேங்கையை அரிமான் பீடத்தரசு தொழவிருந்த வளவனுக்கு உவமையாகக் கூறுதலான் அது கொடியாகிய உயிரில்லாத சித்திர வேங்கை யாகாமை இனிதுணர்ந்து கொள்க.

"புலிபுறங் காக்குங் குருளை போல
மெலிவில் செங்கோ னீபுறங் காப்ப" (புறம். 42)

என இவனுக்குப் புலியை உவமித்தலானும் இவ்வுண்மை யுணரப்படும்.

இளங்கோவடிகள் தமிழ் மூவேந்தரும் தங்கொடிகளை இமய மலையிற் பொறித்த செய்தி கூறினர்.

"வில்லெழுதிய விமயத்தொடு
கொல்லி யாண்ட குடவர்கோ" (குன்றக் குரவை)

எனவும்,

"கயலெழுதிய விமயநெற்றி
யயலெழுதிய புலியும் வில்லும்" (ஆய்ச்சியர் குரவை)

எனவும்,

"இமையவ ருறையுஞ் சிமயப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு"
(இந்திர விழா. 97 – 98)

எனவும்,

அவர் கூறுதலானுணர்க. அதுபோல் வெற்றிமையின்றி இமயத்தில் அவர்தங் கொடிகளைப் பொறித்த செய்தியை முன்னோர்க்கும் கூறுவதுபோல எட்டுத்தொகை நூல்கள் கூறாது; சேரர்க்கே அச்சிறப்புக் கூறுவதை அறிஞர் ஆராய்ந்து கொள்வாராக. செய்யா கூறாத பொய்யா நாவிற் சான்றோர் எனச் சிறப்பித்துக் கொண்டாடப்பட்ட சங்கத்து நல்லிசைப் புலவர் நான்முறை யாராய்ச்சியில் உண்மை யுணர்தற்கு அச்சங்கத்து எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்களன்றி, அவற்றிற் பிற்பட்ட பிற, துணை யாகாமை நன்கறிந்து கொள்க.

சிலப்பதிகார முடையார் கரிகாலன் எனப்பெயர் குறித்த இடம் இரண்டேயாகும்.

அவற்றுள்,

"விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்,
தண்பதங் கொள்ளுந் தலைநாட் போல" (கடலாடு. 159-60)

என்பதொன்று. இதன்கட் கடலாடிய நீர் விழவுக்குக் கரிகாலன் தண்பதங்கொள்ளுந் தலை நாள் விழவை உவமை கூறியது நன்கறியலாம். அடியார்க்குநல்லார் கோவலன் மாதவியுடன் கடலாடும் போதும், புகாரிலிருந்த சோழன் கரிகாலனென்றே கொண்டு இக்கரிகாலன் நீர் விழவு கொள்ளும் முதல் நாள் சிறப்பு நிகழ்ச்சி போல இக்கடலாடுஞ் சிறப்பும் விளங்கிற்றெனக் கொண்டார். கரிகாலன் நீர் விழவு புகாரில் நடந்ததன்றில்லை யென்றும் அது கழாஅர்க் காவிரி முன்துறையிற் றன்பெருஞ் சுற்றத்தோடு நிகழ்த்தியதொ மென்றும்,

"ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த வின்னிசை
யொண்பொறிப் புனைகழல் சேவடி புரளப்
புனலயந் தாடு மத்தியணி நயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு" (அகம். 376)

என வரும் அகப்பாட்டடிகளான் நன்கறியலாம். இவ் வரலாறே சிலப்பதிகார வழக்குரை காதையிலும்,

"மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் [illegible]"

என்பவற்றாற் கூறப்பட்டதாகும். வழக்குரை [illegible]
"பலர் நற்புடைப் பெண்டிரைப் புகார்ப்பட்டினத்து [illegible]
இம்பட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்"

என அவர் கூறுவதை நோக்கின் அக்கூற்றுடையார் பெண்டி ரெல்லாம், அவர் காலத்தவர் என்று கொள்ளற்கில்லாது மிகப் பழங் காலத்தவராகவே கருதற்கு ஆதல் உய்த்துணர்ந்து கொள்க. கரி

காலன் பெயர் பொருந்த வரிடமும் சிலப்பதிகாரத்தி [illegible]
வரலாறு குறித்தல் நோக்கிக் கொள்க.

பற்றாச் சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடல் [illegible] கண்டு அவட்குப் பெரும் பரிசிலும் மாலையும் வழங்கியவன் கரிகால னென்று பாடத்திற் காணப்படாவிடினும், அடியார்க்குநல்லார் கரிகாலன் என்றே உரை கூறினர். மாதவியின் பிற்பகுதி வாழ்நாளிற் புகாரை யாண்டவன் கரிகாலன் அல்லன் என்பதும், கரிகாலன் வழித் தோன்றலே யாவன் என்பதும் இவன் மகன் மணிமேகலையை விழைந்து உயிர் துறந்த உதயகுமரனென்பதும் பிறவும், மணிமேகலை துறவுள்,

"கிளர் மணி நெடுமுடிக் கிள்ளி"
(24. ஆபுத்திரனாடு. 29)

"மதிமருள் வெண்குடை மன்னவன் சிறுவன் உதயகுமரன்"
(4. பளிக்கறை. 27—28)

"இளமை நாணி முதுமை யெய்தி
யுரைமுடிவு காட்டிய வுரவோன் மருக"
(ஷை ஷை 107—108)

என வருவனவற்றால் நன்கறியலாம். இவற்றுள்,

"இளமை நாணி முதுமை யெய்தி
யுரை முடிவு காட்டிய வுரவோன்"

கரிகாலனே யென்பது அக்கரிகாலன் பெயர்குறித்த பொருநராற்றுப்படையுள்,

"முதியோரவைபுகு பொழுதிற்
பகைமுரண் செலவும்"

என வருதலானும்,

—நரைமுடித்துச் சொல்லால் முறைசெய்தான் சோழன்

என்னும் பழமொழியானும் உய்த்துணரலாவது. நெடுமுடிக் கிள்ளியைக் கரிகாலற்கு மகனென யாண்டுங் கூறுமையானும், அவன் மகனாகிய உதயகுமாரனை,

"உரவோன் மருக"

எனக் கரிகாலன் வழித்தோன்றலாகவே கூறுதலானும், கரிகாலன் நெடுமுடிக்கிள்ளிக்கு நெடிது முற்பட்டவனே யாமென்று துணியலாம். மாதவியினிளமையிற் பரிசிலீந்தானாக உரைகாரர் கொண்ட கரிகாலன் அவன் முதுமையில் இல்லாது போகிய செய்தியே சிலப்பதிகாரமும் மணிமேகலையுங்கூறாமல் ஒழிவன. ஒரு பெருங்கோவேந்தன் இறந்த செய்தியை இந்நூல்கள் கூறாமை வியப்பைத்தருவது. கரிகாலன் இறந்த செய்தி புறப்பாட்டில் (224) நல்லிசைப் புலவர் கருங்குழலாதனாராற் கூறப்பட்டுள்ளது கண்டுகொள்க.

"அஃறிவுடையாள னிறந்தோன் மன்ற"

என்று கூறுதல் காண்க. சங்க நூல்கட்குஞ் சிலப்பதிகாரத்திற்கும் ஒத்த கரிகாலன் செய்தி "கழாஅர் முன்றுறைத் தண் பத விழவு" ஒன்றேயாம். சிலப்பதிகாரத்திற் காணாது சங்க நூல்களிற் கண்ட கரிகாலன் பெருஞ் செய்திகள்

"தாய் வயிற்றிருந்து தாயமெய்தலும்"

(பொருந. 146—48)

"வெண்ணிப் போர் வென்றியும் (புறம். 66 அகம். )
வாகைப் போர் வென்றியும் (அகம். 125 )
செல் குடி நிறுத்தலும் (அகம். )
பல் வேள்வி வேட்டலும் (புறம். 397 )

என ஆகும் இச்செயல்கள் பட்டினப்பாலைத் தலைவற்குக் கூறப்படாமை நன்கு நினைக. இனிச் சிலப்பதிகாரத்து மனையறம் படுத்த காதை முகத்து அரும்பதவுரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் உடன்பாடொழிந்த ஒரேட்டின் பாடத்தில் "திருவின் செல்வியோடு பெருவளவனைப் பாலை பாடிய பரிசிலன் நெடுந்த மாலைத்தாகிய வளங்கெழு செல்வத்து"

என்புழிக் கண்ட அடிகளிற் கரிகாலே திருமாவளவன் எனக் கூறியிருத்தல் காணப்படுவது. நல்லுரையாளர் இருவரும் உடன்

படாத இப்பாடம் உண்டு பண்ணியவர் கருத்துப்படி பட்டினப்பாலை கொண்டவனும் கரிகாலன் ஆதல் தெளியலாம். உரைகாரர் திருமாவளவன் எனவருமிடங்களிற் கரிகாலன் என வுரைசெய்யுமிடத் தேற்கு, நாலிடைச் செருகிய பாடமோ, இவ்வாறு கேட்கப்பட்ட வழக்கோ காரணமென்றுய்த்துணரலாகும். பெருந் திருமாவளவனை இப்பெயர் வரக் குறிக்காதென்னும் வினவிற்கு விடைதருதல் அரிதாதல் இங்கே நினைக்கத்தகும்.

இனித் திருவென்பதனைச் சிறப்படையாகக் கொண்டு மாவளவன், மாவளத்தான் என்பனவே பெயராமென்று தெளியின் அந்நிலையிற் சோழநலங்கிள்ளிக்கும் பின்னே அரசெய்திய [illegible] முற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் நெடுமாவளவன் (புறம். 228) என வழங்கப்படுதலும், சோழநலங்கிள்ளி தம்பி மாவளத் தான்" (ஒ. 13) என வழங்கப்படுதலும் [illegible] இவ்விருவருள் ஒருவனைவிட்டு இவரின் [illegible] குறிப்பதென்று கொள்ளுதற்குத் [illegible] புலனும் [illegible], நெடுமையும் மாவளவன் [illegible] வந்த அடைமொழி என்று துணிவிக்கின்ற [illegible] கிள்ளிவளவனும், நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும், மாவளவன் என்ற பெயர் பெற்றவராதல் தெளியலாம். மாவளத்தான் என்பது பெருவளத்தான் என்ற பொருளுடைப் பெயரெனின், நலங்கிள்ளி தம்பிக்கும் கரிகாலனுக்கும் அப்பெயருண்மை துணியலாம். சோழ நலங்கிள்ளி என்பவன் "சேட்சென்னி" எனப்பெயர் சிறத்தல் புறப் பாட்டால் (225) அறியப்படுவது; அவன் தம்பி பிறனொருவன் "இளஞ்சேட்சென்னி" என்பது (27 ) ஆம் புறப்பாட்டால் அறியலாவது. இவ்விளஞ் சென்னியின் புதல்வன் கரிகாலன் என்பது,

> "உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்
> கண்ணார் கண்ணிக் கரிகாலன் வளவன்"
>
> (பொருநா. 130, 148)

என்னும் அடிகளான் அறியலாம். நலங்கிள்ளியைப் பாடிய கோவூர் கிழார் என்னும் புலவரே (புறம். 31, 32, 33, 45, 400) கிள்ளி

வளவனைப் பாடுதலானும், நலங்கிள்ளி பாட்டின் பின்னே கிள்ளி வளவன் பாட்டினைப் புறத்திற் பல்லிடத்துங்கோத்தலானும், அவ்விருவரும் அந்நலங்கிள்ளி தம்பிமாராகிய மாவளத்தானும், இளஞ்சேட்சென்னியும், அவ்விளையோன் சிறுவனான கரிகாலனும் ஒரு காலத்தவர் என்பதில் ஐயமெழுதற்கில்லை. இவருட் கரிகாலன் காலம் பழையதாதல் சிலப்பதிகாரக் கடலாடு காதையில்,

"விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்,
தண்பதங் கொள்ளுந் தலைநாட் போல"

எனவும்,

மணிமேகலை விழாவறை காதையுள்,

"மன்னன் கரிகால் வளவனீங் கியநாள்
இந்நகர் போல்வதோ ரியல்பின தாகிப்
பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது
தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலின்"

எனவுங் கூறுதலான் அறியலாம். இவற்றுள், "தலை நாள் முன்னாள் என வருதலும்" "தொன்னிலையுணர்ந்தோர் துணிபு" என வருதலு நோக்கி, இவ்விருநூற்கும் கரிகாலன் பழையனாதல் துணிக. இவன் பழையனாயின் இவனோடொருகாலத்தவரான நலங்கிள்ளி, இளஞ்சேட்சென்னி, கிள்ளிவளவன் இவரும் பழையரேயாதல் தெளியலாம்.

இனி உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியும், நெய்தலங்கானலிளஞ்சேட் சென்னியும் வேறெனக் கொண்டு கரிகாற்சோழன் "உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்" (பொருநாறு) எனப்படுதலானும், கரிகாற் சோழன் பாடல்கள் கிள்ளிவளவன் பாடல்கட்கு நெடிதுமுன்னரே புறப்பாட்டிற் கோக்கப்பட்டிருத்தலானும், கரிகாலனும் கிள்ளிவளவனும் ஒருகாலத்தவராகா ரென்றும், இருவரும் வேறு வேறு காலத்துக் காவிரிப்பூம்பட்டினம் உடையவராயினர் எனக் கூறினாலென்னையெனிற் கூறுவேன். கரிகாலனையுங் கிள்ளிவளவனையும் பாடிய நக்கீரராகிய ஒரு புலவரே இரு

வேந்தர்க்கும் இடையாறும் புகார்ப்பட்டினமுமாகிய வேறு வேறு ஊர் கூறுதலான், இந்நக்கீரர் காலத்தே இவ்விரு வேந்தரும் இவ் வேறு வேறு ஊர்களிலிருந்தது நன்கு புலனும். இவ்வூர்கள் நக்கீரர் காலத்தே,

> "இடையாற் றன்ன நல்லிசை வெறுக்கை" (அகம். 141)

எனவும்,

> "காவிரிப் படப்பைப் பட்டினத்தன்ன......விழுநிதி" (ஷை 205)

எனவும் கூறலாம்படி அத்துணைப் பெருஞ்செல்வ நிலையிலிருந்ததும் நன்கு அறியலாகும். இறந்த காலத்துப் பெருநிதியைக் கூறிய இடங்களிற் பல்லிடத்தும்,

> "மரந்தை முற்றத்து.........
> நிலந்தினத் துறந்த நிதியத் தன்ன.........
> .........வெறுக்கை." (அகம். 127)
> "வாணன் வைத்த விழுநிதி பெறினும்"
> (மதுரைக்காஞ்சி. 202—204)

எனப்பாடுதல் கண்டு இப்புலவர் தாமுள்ள காலத்து அரசர் பெருமக்கள் வதியும் ஊர்களையே கூறினரென்று துணியலாம்.

இஃதன்றி "உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி" பரணரால் பாடப்பட்டோன்(புறம். 4) ஆதலான் அப்பரணர் காலத்தில் அவரின் இளையராகக் கருதப்பட்ட நக்கீரர் அச்சென்னியின் மகனாகிய கரி காலனைப் பாடுதல் பொருத்தமுடைத்தேயாகும். பேகனைக் கண்ணகி காரணமாகப் பாடிய பலருட் கபிலரும் பரணரும் உள்ளனர். இவர் தம்முள் வாதுசெய்தனர் என்பதும் உண்டு.

> "இன்றும் பரணன் பாடினன் மற்கொல்" (புறம். 99)

என ஔவையார் பாடுதலாற் பரணரும் ஔவையாரும் ஒரு காலத்தவராவர். ஔவையார் உக்கிரப் பெருவழுதியைப் பாடியவர். (புறம். 367) இவற்றால் கபிலர், பரணர், ஔவையார், உக்கிரப் பெருவழுதி இவர் ஒரு காலத்தவராவர். இவருட் பரணர் கரிகாற்

பெருவளத்தானையும் (அகம். 125) வில்கெழுதானைப் பசும்பூட் பாண்டியனையும் (அகம். 162) பாடியவர். நக்கீரனாரும் மேற்குறித்த இருவரையும் அகப்பாட்டில்,

"கரிகால் இடையாற் றன்ன" (அகம். 141)

எனவும்,

"நாடு பலதந்த பசும்பூட் பாண்டியன்" (அகம். 253) எனவும், பாடுதல் காண்க. இவற்றால் நக்கீரர் பரணர் முதலிய இப்புலவர் காலத்தவனான கரிகால் ஒருவனேயாதல் நன்குணர்ந்து கொள்ளலாம். இளஞ்சேட் சென்னி உருவப்பஃறேருடைமையால் உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னியெனவும், நெய்தலங்கானல் என்னும் ஊரில் (புறம். 10 பார்க்க) வதிந்தமையால் நெய்தலங்கான லிளஞ் சேட்சென்னி என்வும், இவனே சேரமான் பாமுளூரெறிதலாற் பாமுளூரெறிந்த இளஞ்சேட்சென்னி எனவும், இவனே செருப்பாழி யெறிதலாற் செருப்பாழி யெறிந்த இளஞ்சேட் சென்னி எனவும் (புறம். 370—378) பெயர் வழங்கப்பட்டனன் என்று துணிவதே நூலோடு பொருந்துவதாகும். இளஞ்சேட் சென்னியை இளம்பெருஞ் சென்னி யெனவுங் கூறுவர். (அகம். 375) பெருநாடுடைய கோவேந்தற்கு ஊர்ப்பெயரடை கொடாமையும் அவன் தம்பியர்க்கே ஊர்ப்பெயரடைகொடுத்து வழங்குவதும் நுனித்துநோக்கியறிக. நலங்கிள்ளிசேட் சென்னிக்கு இவ்வூரடை வாராமையின் இது துணியலாம். இதுபோல ஒரூ ரடையே பெற்றுப் "பெருவளக்கரிகால்" என்று வழங்கியதே தக்கது நன்கு பொருந்தும். பெருவளம்—பெருவளநல்லூர். இது நக்கீரர் கரிகாலனுடையதாகக் கூறிய இடையாற்றிற் கணித்தாதல் கண்டு கொள்க. இவ்வாறே இச் சோழர் வழித்தோன்றி வல்லம் என்னும் ஊரிலிருந்த அக் குடியினன் ஒருவனைக்,

"கடும்பகட் டியானைச் சோழர் மருகன்
நெடுங்கதிர் நெல்லின் வல்லங் கிழவோன் (அகம். 356)

என ஒரூர்க் குரியவனாகக் கூறுதலுங் காண்க. மற்றுக் கரிகாலனைப் பொருநராற்றுப்படையுட், "காவிரி புரக்கு நாடு கிழவோனே"

எனக் கூறினாரால் எனிற் கூறுவேன்: இவன், நலங்கிள்ளி சேட் சென்னிக்குக் கிள்ளிவளவன் மகனாகத் தோன்றுதற்கு முன்னே இளஞ்சேட்சென்னி மனைவி கருவிலேயிருந்து தாயமெய்திப் பிறத்தலான் இவன் கிள்ளிவளவனுக்குச் சிற்றப்பன் மகனாய் மூத்தவனான காரணத்தால் இவன் சோணாட்டுக் குரியவனாகி அந்நாட்டையாண்டது உண்மையாதல் பற்றி இவனது பழைய வுரிமையைக் குறித்து "நாடுகிழவோன்" எனக் கூறினரெனக் கொள்ளல் தகும். பொருநராற்றுப்படையை முடத்தாமக்கண்ணியார் பாடும் போது கரிகாலன் அவ்வரசுடையனாதலில்லை யென்பது,

"மண் மருங்கினான் மறுவின்றி
ஒருகுடையா னென்று கூறப்
பெரிதாண்ட பெருங் கேண்மை
அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்
அன்னோன் வாழி"

என அவர் கூறுதலான் இனிதறியலாகும். இதனுட் "பெரிதாண்ட அன்னோன்" என அவனாட்சியை இறந்தகாலத்தாற் கூறுதல் காண்க. இவன் அந்நாற் காலத்தே ஆள்பவனாயின், "பெரிதாளு மன்னோன்" எனக் கூறுவரென்க. பரிசில்பெற்ற பொருநன் பரிசில் பெறவேண்டிய பொருநனை ஆற்றுப்படுத்தல் இஃதாதலின் இந்நாதுள் ஆண்ட அன்னோன் என்று அரசாளும் பேரரசனை ஒருபோதுங் கூறற் காகாமை உய்த்தறிக. இவ்வுண்மையானன்றே சோழர் நல்ல நகராகிய உறந்தையையேனும், அவர்க்குச் சிறந்த கடற்றுறைப்பட்டினமாகிய புகாரையேனும் அவற்குரிமை கூறாது வாளாது ஒழிந்தார் என்பது நன்கறியலாம். இவற்றால் இக் கரிகால் அரசிலிருந்து அரசுநீங்கிய சமயம் ஒன்றுண்டென்பது நன்கு துணியலாம். இவ்வரசு நீங்கிய நிலையையே மணிமேகலை,

"மன்னன் கரிகாலன் வளவ நீங்கிய நாள்"

எனக் கூறிற்றென்பது நன்கு பொருந்தும். "உடை வரைப்பு" என்பதை "இடை வரைப்பு" என்று கொண்டவிடத்தும் இடை

யாற்றிற்குப் பொருந்துவதல்லது உறையூர் புகார் இவற்றிற்குப் பொருந்தாமை நோக்குக.

இனிமேற் கூறப்பட்ட பல் பெயருள் திருமாவளவன் எனப் பட்டினப்பாலையுட் குறிக்கப்பட்டவன் இவன் என்பதேயாம் ஆராய வேண்டுவதாகும்.

கோவலன் காலத்துச் சோழனுடன் இச் சோழர்குடியில் ஆயிரத்தெட்டுச் சோழர்கள் காவிரி நீரால், திருவபிஷேக மஞ்சன மாடினரென்று இளங்கோவடிகள் இந்திர விழவூரெடுத்த காதையில்.

"மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கு
மாயிரத் தோரெட் டரசுதலைக் கொண்ட
தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறை"

என்பதனாற் கூறினர். இவ்வாயிரத் தெண்மருள் ஒவ்வொரு வற்கு இருபத்தைந்தாண்டாயுளாகக் கொண்டாலும் இச் சோழர் காலம் 25200 ஆண்டுகளாகும். இதனால் இளங்கோவடிகள் கோவலன் காலத்துச் சோழனுக்கு முன்னே இச் சோழர்குடி எவ்வளவாகப் பழையதாயிற் றென்று கருதியது புலனாம். பேரெண்ணிற் கண்ட இச் சோழர் அளவையையும், சங்க நூல்களிற் கண்ட ஒரு சில இருபத்திரண்டு சோழர் அளவையையும் நோக்கின் இவர் வரலாறு ஒன்றுமில்லாததுபோல அறவுஞ்சிறியதாதல் காணலாம். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் சேரனுடைய கருவூரை முற்றியபோது மாறோகத்து நப்பசலையார்,

"இமயஞ் சூட்டிய வேம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் றொலைய
வாடா வஞ்சி வாட்டுநின்
பீடு கெழு நோன்றாள் பாடுங்காலே" (புறம். 39)

எனப் பாடுதல் கொண்டு இமயம் விற்பொறித்த புகழ் சேரர்க்கே உரியதாதல் எளிதில் உணரலாம். சோழர் தம் விற் கொடியை இமயத்திற் பொறித்த சிறப்பு அக் காலத்தே உடைய

ராயின் இவ்வாறு ஒரு பேரறிஞர் சேரனைச் சிறப்பித்து வெல்லுஞ் சோழன் முன்னர்ப்பாடல் தொடுக்காரென்று நன்குணர்க. இக் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனையே ஆலத்தூர்கிழார் பாடிய புறப்பாட்டில் (34),

> "இமயத் தீண்டி யின்குரற் பயிற்றிக்
> கொண்டன் மாமழை பொழிந்த
> நுண்பஃ றுளியினும் வாழிய பலவே"

என வருதலானும் இவ் வுண்மை யுணரலாம். புலிக்கொடி பொறித்த செய்தி சோழர் உடையராயின் இமயத்தைப் புலி பொறித்தலால் விசேடியாது ஒழியாரென்க. சங்க காலத்து இல்லாதது அதன் பிற்காலத்துச் சோழராற் செய்யப்பட்டுப் புலவரால் இசை சிறக்கப் பாடப்பட்டதிஃதென்று நன்கு துணியலாம். இளங் கோவடிகள் தம் அருமைத் தாய் பிறந்த சோழர் குலத்துச் சிறப்புக் கூறவேண்டியே புகார்க் காண்டத்துச் சோழர் வென்றியைச் சிறப்பித்துக் கூறினரோ என்று நினைத்தற்கும் இஃதிடந்தருவது. இதனாற் சங்கநூல்களோடு இயைபுடைய பகுதிகளை சோழர் குடி வரலாற்றிற்குச் சிலப்பதிகாரத்தினின்று கொள்ளத்தகுமல்லது சங்க நூற்கு மாறாக வுள்ளவற்றைச் சிலப்பதிகாரநூல் ஒன்றே கொண்டு உணர்வதன் கண் இடர்ப்பாடு பலவாம் என்றவாறும்.

இனிச் சங்கநூல் மட்டும் வைத்து இச் சோழர் வரலாறு துணியின் பொருநராற்றுப்படைத் தலைவன் கரிகால் வளவனும், பட்டினப்பாலைத் தலைவனாகிய திருமாவளவனும் வேறுதல் இனிது புலனும். இரு பாட்டின் றலைவரும் இன்ன இன்ன வகையான் வேற்றுமைப்படுவரெனப் பொருநராற்றுப்படை முகத்து நன்கு விளக்கினேன். இதனையே ஈண்டு விரித்துரைப்பேன்.

பட்டினப்பாலைத் தலைவற்கும் ஆற்றுப்படைத் தலைவற்கும் உள்ள வேற்றுமைகளை அடியிற் காண்க. பொருநராற்றுப் படைத் தலைவனாகிய கரிகாலன்

(1) "உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்"

எனத் தந்தை பெயர் கூறப்பட்டவன். இத் திருமாவளவன் தந்தை பெயர் கூறப்படாதவன்.

(2) "தாய்வயிற் றிருந்து தாய மெய்தி"

என்பதனாற் கரிகாலன் இளமையிலே தந்தையை யிழக்கக் கருவிலே அரசெய்தினனாகக் கருதிப் பெற்றுப்பிறந்த போதே அரசுரிமை யெய்தியவன். இதற்கேற்பவே,

'பிறந்து தவழ்கற்ற தற்றொட்டுச்
சிறந்த நன்னாடு செகிற்கொண்டு"

எனப்பாடப்பட்டவன்.

இவன்; பிறர்,

"பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
....................திண் காப்பேறி
வாள்கழித்து....................
ஊழி னாகிய தாய மெய்தி"

என்பதனாற் பிறராற் சிறையிலிடப்பட்டிருந்து அந்திண்ணிய சிறைக்காவலைத்தான் கடந்து பின் தன் வாள் வலியானே தனக்கு முறைமையாகிய அரசெய்தியவன்.

3. கரிகாலன் பொருநராற்றுப்படையுள் ஊர் கூறப்படாதவன். இவன் "பட்டினம் பெறினும்" என்பதனாற் காவிரிப்பூம் பட்டினமென்னும், கடற்றுறைமுகப் புகாரும், "பிறங்கு நிலை மாடத் துறந்தை போக்கி" என்பதனால் உறையூரும் உடையனாகக் கூறப்படுவான்.

(4) கரிகாலன் இளமையிலே சேரர் பாண்டியரிருவரையும் வெண்ணிப்போரில் வென்றதாகக் கூறப்பட்டவன். இவன், தென்னவர், குடவர், வடவர், இருங்கோவேள், பொதுவர், அருவாளர், ஒளியர் என்னும் எழுவரை அடக்கியதாகக் கூறப்படுவான்.

(5) அவன் கரிகாலன் என்று பெயர் கூறப்பட்டான். இவன் திருமாவளவன் எனப்படுவான்.

(6) கரிகாலன்,

> " கூடு கெழீஇய குடிவயினாற்
> ...............
> தண் வைப்பி னாடு குழீஇ
> மண் மருங்கினான் மறுவின்றி
> ஒருகுடையா னென்று கூறப்
> பெரிதாண்ட பெருங்கேண்மை
> அன்னோன்......... குருசில் "

என்று புகழப்பட்டவன்.

பட்டினப்பாலைத் தலைவன்,

> " காடுகொன்று நாடாக்கிக்
> குளந்தொட்டு வளம்பெருக்கிப்
> பிறங்குநிலை மாடத் துறந்தைபோக்கி
> வாயிலொடு புழையமைத்துக்
> கோயிலொடு குடிநிறீஇ "

எனச் சிறப்பிக்கப் படுவான்.

(7) கரிகாலன் பெண்டிர் பிள்ளைகளாற் சிறப்பிக்கப் பட்டாதவன். இவன்,

> " விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
> பசுமணி பொருத பரேரெறுழ் கழற்காற்
> பொற்றொடிப் புதல்வ ரோடி யாடவும்
> முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவும்
> செஞ்சாந்து சிதைந்த மார்பின் "

என,

மக்களானு மனைவியானுஞ் சிறப்பிக்கப்படுவான். எண்டியாவொடுத்துக்காட்டிய வேற்றுமைச் செய்திகள் பலவற்றுள் பட்டினப்பாலை கொண்ட திருமாவளவன்,

> " பிறர் பிணியகத் திருந்த செய்தி "

மிகவும் ஆராயத்தக்க தொன்றாம். இவ் வரிய செய்தி கரிகாலன்கண் நிகழ்ந்ததா வேறொரு சோழன்கணிகழ்ந்ததா என்று வினவி ஆராயப்புகின் உண்மை யுணர வல்லதாகும். சோழருட் பிறர் பிணியகத்திருந்தவனாக ஒருவன் 174-ஆம் புறப்பாட்டிற் கூறப்பட்டுள்ளான். அவனை விடுவித்தற்கு இனிது உதவியவன் திருக்கண்ணன் என்பது அப்புறப்பாட்டான் அறியக்கிடப்பது.

அப்பாட்டில்,

"அணங்குடை யவுணர் கணங்கொண் டொளித்தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணா
திருள்கண் கெடுத்த பருதி ஞாலத்
திடும்பைகொள் பருவர றீரக் கடுந்திற
லஞ்சன வண்ணன் றந்து திறத்தாங்
கரசிழந் திருந்த வல்லற் காலை
............................காவிரி
மல்ல னன்னாட் டல்ல றீர
...........................
எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை
யருவழி யிருந்த பெருவிறல் வளவன்
மதிமருள் வெண்குடை காட்டி யக்குடை
புதுமையி னிறுத்த புகழ்மேம் படுந"

என வருமடிகளான், ஒரு சோழன் பகையரசரோடு பொருது உடைந்துபோக அவனை யப்பகைவேந்தர் பிறராற் காண்டற்கரிய முள்ளூர் மலைக்காட்டில் ஓரிடத்து ஒளித்து வைத்தனரென்றும், காவிரி நாட்டு வருத்தந் தீர அவனை விடுவித்து அவன் குடையைத் தோற்றுவித்த பேருதவி திருக்கண்ணன் (அல்லது திருக்கிள்ளி) உடையதென்றும் விளங்கக்கூறி அதனால் அவனை விடுத்து விளித்தலான் நன்கறியலாகும். இச்சோழன் யாவன் என வினவின் இப் பாடல் பாடிய மாறோகத்து நப்பசலையார் காலத்தவனாதலல்லது அவர்க்கிறப்ப முந்தியவன் ஆகானென்றுய்த்துணர்தல் தகும்.

இந் நப்பசலையாரே சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பல பாடல்களாற் (புறம். 37, 39, 226) பாடுதலானும்

இவர் காலம் அச்சோழன் காலமேயென எளிதிற்றுணியலாம். இவர் காலத்துச் சூரியன் அவுணர் கரந்தால் ஒளிக்கப்பட்டதுபோலப் பகைவேந்தரான் ஒளிக்கப்பட்டு,

"முள்ளூர் மீமிசை
யருவழி யிருந்த பெருவிறல் வளவன்"

அக்கிள்ளிவளவனாதல் தெளியப் படின், இந்த 174-ஆம் புறப்பாட்டின்கண் அப்புலவர் குறித்த வளவன் அக்கிள்ளிவளவனின் வேறாகாமை நன்கு துணியலாம் என்க. இவனுக்கடுத்து முன்னரரசிருந்த சேட்சென்னி நலங்கிள்ளி காலத்தே, தாய வழக்காலோ பிறவேதுவாலோ இச் சோழர் குலத்துப் பகைமை பெரிதாகிப் பல படியாகக் கலகப்பட்டு நின்ற செய்தி நெடுங்கிள்ளி வரலாற்றானும் நலங்கிள்ளி வரலாற்றானும் நன்கறியலாம். (புறம். 44, 45). அவ்விருவருள் நலங்கிள்ளி மகனோ அல்லது அவன் அரசிற்குரிமை யுடையவனோ இக் கிள்ளிவளவனாவன்; இவன் இக் கலகத்திற் பகைவர் கையிலகப்பட்டு முள்ளூர் மலைக்காட்டில் அருவழியிலடைக்கப்பட்டவனாயினன் என்று கொள்ளத்தகும். முள்ளூர்க் கானத்தைக் குறித்ததும் இக்கிள்ளிவளவன் அம்மலையை யுடைய மலையமான் மக்களை யானைக்கிடப்புக் கவனாதலான் (புறம்.46) அம்மலையரசர் வழியினர் இவனுக்கு உதவார் என்று பகைவர் கருதியதனாலாகும். அன்றியும் நெடுங்கிள்ளிக்குத் துப்பாகி அப்போது முள்ளூருடைய காரி முதலியோரிருந்தது கருதி அவன் மக்களகப்பட்டபோது இக்கிள்ளிவளவன் கொல்லப் புக்கவனாவன் எனினும் அமையும். இவ்வாறு கொள்ளாது கிள்ளிவளவன் தன் பகைவர்க்குத் துப்பாயினனென்று மலையமான்பாற் பகைமை பூண்டு அவன் மக்களை யானைக்கிடப்புக்கனன் என்றும் அச்செய்தியால் அபயம் வாய்த்தபோது இவன் காரியால் முள்ளூரிலடைத்து வைக்கப்பட்டன னென்றும் அவன் வழியின் மலையமானால் விடுவிக்கப்பட்டன னென்றுங் கூறினும் பொருந்தும். ஆண்டுச் சிலகாலத்து அக்காரி வழியினன் இச்சோழன் தன்னையுந் தன்னுடன் பிறந்தானையும் கோவூர்கிழார் பாடற்கிசைந்து கொல்லாது விடுத்த நன்றியே பாராட்டியும், சோழர்குடிக்குந் தமக்குமுள்ள தொடர்பு

நினைந்தும் இவனை விடுவித்து இவன் குடையைத் திருக்கண்ணன் (திருக்கிள்ளி) விளக்கினன் என்பது நன்கு பொருந்துமெனக் கொள்க. 174-ஆம் புறப்பாட்டிற்,

"பொய்யா நாவிற் கபிலன் பாடிய
..........................முள்ளூர்"

என்றதனால் இவன் ஈண்டு அருவழியிருந்தகாலம் கபிலர் காலத்திற்குப் பிந்தியதாதல் நினைந்து கொள்க. ஈண்டு,

"முள்ளூர் மீமிசை யருவழி"

என்றது முள்ளூர் மலைமேற் பிறரொருவரும் புகற்கரிய காடுசூழ் எயிலென்று நினையத்தகும். இதுவே பட்டினப்பாலையுள்,

"...னர் செறிவுடைத்திண்காப்பு"

என்று கூறப்பட்டதாகும். இச்சோழன் முதற்கட்பிணியிலிருந்து பின்னர்த்திண்காப்பேறி வாள் கழித்துத் தன்றாய மெய்தியவன் ஆதலால் முன்பிணியிருந்தபோது,

" இகழ் பாடுவோ ரெருத்த மடங்கப்
புகழ் பாடுவோர் பொலிவு தோன்ற " (புறம். 40)

என்று கூறியவாறு இகழ் பாடுவோரும் தாயமெய்தியபோது புகழ்பாடுவோரும் உளராணரென் றுய்த்துணரலாம். பட்டினப் பாலையுட்கூறிய பலவும் இக்கிள்ளிவளவற்கு நன்கு பொருந்துமாறு காட்டுவல். ஈண்டுப் பட்டினம் பெறினும் என்றார். அகப்பாட்டில் (205) நக்கீரர்,

"நிலங்கொண்டு வெஃகிய பொலம்பூண் கிள்ளி
பூவிரி நெடுங்கழி நாப்பட் பெரும்பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத் தன்ன "

என வந்தது காணலாம். இவற்றால் இவன் காலத்துக் காவிரிப் பட்டினங் கடல் கொள்ளப்படாமலிருந்திருத்தல் புலனும். இப்பட்டினம் கடல் கோளால் அழிந்தது மாதவியின் வயது முதிர்ந்த நிலையிலென்று துணியலாம்.

"வருந்தா தேகி வஞ்சியுட் புக்கனம்"

என மணிமேகலையுள் வருதலான் இஃதுணரலாம். புகார்க்கு "ஒடுக்கங்கூறார்" என்று இளங்கோவடிகள் கூறுதலான் அவர் சிலப்பதிகாரம் தொடங்கியபோது பட்டினம் நன்னிலையிலிருந்த தென்றும் பாடி முடித்தற்கு முன்னே அஃதழிந்ததென்றும் நினைத்துக் கொள்ளலாம். துறைமுகத்தைச் சிறப்பித்துப்

"பட்டினம் பெறினும் வாரேன்"

என்று கூறியபோது அவ்வூர் இனிதிருத்தல் வேண்டுவதென்பது என் கருத்து. இங்குப்,

"பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கி"

என வருதற் கியையவே
கிள்ளிவளவன்,

"பிறங்குநிலை மாடத் துறந்தை யோனே" (புறம். 69)
எனக் கூறப்படுதல் காண்க.

இந்நூலுள்,

"தெவ்வர்க் கோக்கிய வேலினும்"

என்பதற்குப் பொருந்தப்

"பொருநர்க் கோக்கும் வேலன்" (ஷை. 59)
என இவன் பாடப்படுதல் நோக்கிக் கொள்க. ஈண்டுரைகாரரும்,
"பொருவோர் பொருட் டெடுக்கப்பட்ட வேலினை யுடையனாய்"
என்றது கண்டுகொள்க.
இவன் கரிகால் வளவனின் வேறுதல் பொருநராற்றுப் படையுட்

"கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்"

எனக் கூறியதுபோலக் கூறாமல் இவனைப் புறப்பாட்டில் (39)
"கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ"

எனக் கூறுதலா னறியப்படுவது. இவன் பட்டினப்பாலைக்குப் பெரும் பொருள் நல்கிய வண்மைக்கியையவே புறம் 397--ஆம் பாட்டில்,

"மாரி யன்ன வண்மையிற் சொரிந்து"

எனச் சிறப்பித்தல் காணலாம். கலிங்கத்துப்பரணியிலும்

"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறு நூறு யிரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"

என்றதன்றிச் சோழன் பெயர் கூறாமை நினைக்க. இதன்கட் பண்டு என்றதனாற் காலப்பழமை குறித்ததன்றி வேறு விளக்காமையு நோக்குக.

இனி இவன்,

"வேந்தர் சூடிய
பசுமணி பொருத பரேரெறுழ் கழற்கால்"

உடையவனாக இந்நூலுட் கூறப்பட்டான். இதன்கண் வேந்தர் சூடிய பசுமணி என்றது அவ்வரசர் சூடிய பொன்முடியிலழுத்திய மணி எ-று. பொருத கழல் அவர் முடிப்பொன்னையும் மணியையுமே கழலாகச் செய்த காலணி. இதனை யணிந்துள்ள அடிகளையுடையவன் எ-று. இக் கருத்திற்கியையவே இக்கிள்ளிவளவனைப் பாடிய

புறப்பாட்டில்,

"நீயே பிறரோம் புற்ற மன்னெயி
லோம்பாது கடந்தட் டவர்முடி புனைந்த
பசும்பொன்னினடிபொலியக்
கழறைஇய வல்லாளனை"

எனச் சிறப்பித்தல் கண்டு உண்மை யுணர்ந்து கொள்க. இந்நூலுள்,

"தண்ணிதி ணுணரநாடி"

என்றதற்கியையவே இவன் நல்லிசைப் புலவனாதல்

"யான்வாழு நாளும் பண்ணன் வாழிய" (புறம். 173)

என இவன் பாடிய பாட்டுப் புறத்திற் கோக்கப்பட்ட வாற்றா னறியலாம். இப்புலமைச் சிறப்புக் கரிகாலனுக்குக் கூறப்படாமையு நினைக்க. இவன்,

"வாளுறை கழித்துத் தாய மெய்தி"

என்றதற் கியையவும்,

"தாள்முன்னிய துறை போகலின்"

என்றதற் கியையவும்,

"நீ
உடன்று நோக்குவா யெரிதவிழ
.......................................
வேண்டியது விளக்கு மாற்றலை" (புறம். 38)

என இக்கிள்ளிவளவன் பாடப்படுதல் காண்க.

இனி, இங்குக் கூறிய

"செற்றோர் கடியரண் தொலைத்தல்"

இவனையே,

"செருமிகு வளவநிற் சினைஇயோர் நாடே" (புறம். 41)

என வருதலானுணர்க.

நிற்கத் திருமாவளவன் என்றிந் நூலுட் கூறியதற்கு இயைய இக்கிள்ளிவளவன்

"கொடிநுடங் கியானை நெடுமாவளவன்" (புறம். 228)

எனப்பாடப்படுதல் காண்க. நெடுநகர், திருநகர் என்றாற்போல நெடுமையுந் திருவும் சிறந்த அடைகளெனின் இனிது பொருந்தும். வேள்பாரியை "நெடுமாப்பாரி" (புறம். 201) என்பது காண்க. பலவிடத்தும் கிள்ளி என்றும் வளவன் என்றும் வழங்குதல் நோக்கியுணர்க.

இனி, இந்நூலுள் இவன்,

"தென்னவன் றிறல்கெடக் குடவர் கூம்ப"

வீரத்தாற் சிறந்தனன் என்பதற்கியைய,

"முரசு முழங்குதானை மூவ ருள்ளும்
அரசெனப் படுவது நினதே" (புறம். 35)

என்பதனாற் கிள்ளிவளவன் கூறப்படுதல் காணலாம். அகப் பாட்டில் (346),

பழையன் மாறன்,
மாடமலி மறுகிற் கூட லாங்கண்
வெள்ளத் தானையொடு வேண்டு புலத்திறுத்த
கிள்ளி வளவ னல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
யேதின் மன்ன ரூர்கொளக்
கோதை மார்ப னுவகையிற் பெரிதே"

என்றதனால், கிள்ளிவளவன் பாண்டியற்குப் பகைவனாதல் அறியலாம்.

இனி, "வடவர் வாட" என இந்நூலுட் கூறியது அகத்தில்,

"நிலங்கொள வெஃகிய பொலம்பூட் கிள்ளி" (205)

என்பதனால் உய்த்துணரலாம். இக்கிள்ளிவளவனைப் புறப்பாட்டில்,

"இமயத் தீண்டி யின்குரற் பயிற்றிக்
கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும் வாழிய பலவே" (புறம். 34)

எனப்பாடுதலானும் இவன் வடநாடு சென்று பழகியவன் என்பது ஊகிக்கலாம். இவ்வாறே பரணர் தாம் பாடிய குட்டுவனை 369-ஆம் புறப்பாட்டில்,

"இமயத் தன்ன வேழ முகவை
நல்குமதி"

என்று கூறுதல் கண்டு உண்மை தெளிக. இமயந் தெரிந்த வேந்தன் கிள்ளிவளவன் என்பது மட்டில் இஃது உணர்த்தாநிற்கின்றது.

இருங்கோவேள் மருங்குசாய என்றது இவ்வேள் இவ்வளவனிருந்த உறந்தைக்குச் சிறிதடுத்துக்குன்றுபிடவூரிலிருந்தவனாய

குறும்பு செய்தவனாதல் பற்றி அவனைச் சாயவென்று நின்றது குறித்ததாம். மற்று ஒளியர், அருவாளர், பொதுவர் மூவரையும் வென்றது இவன் வரலாறு கூறிய சங்கப் பாடல்களிற் காண்டற் கில்லை. இங்ஙனங் காணப்படாமை கரிகாலற்கும் ஒத்தலான் பட்டினப்பாலைத் திருமாவளவன் கரிகாலன் என்று வாதிப்பார்க்கு இவ்வென்றி துணையாகாமை கண்டு தெளிக. பெருவளத்தானல்லா மல் மாவளவன் என்னும் பெயர் கரிகாலற்கு யாண்டும் வழங்காமைப் நினைக்க. கிள்ளிவளவனை நெடுமாவளவன் என்பது புறப்பாட்டிற் (228) காண்க. "பெருவளக் கரிகால்" என அகப்பாட்டும் (125) கரிகாற் பெருவளத்தான் எனப் புறப்பாட்டுக் கொளுவும் (65) வழங்கிக் காட்டலான் இக்கரிகாலற்குப் பெருவளம் என்பது ஓர் நல்லடையா மென்று துணியலாம். பெயர்க்கு முன்னும் பின்னும் வழங்கலான் இவன் முதலிலிருந்த ஊர்ப்பெயரோ என ஊகித்தலுமாகும்.

பெருவள நல்லூர் என்பது இவனது இடையாற்றிற்கு அணித் தாகிய தோர் ஊர் ஆதல் நினைக்க. இவ்விரண்டூர்களும் உறை யூர்க்குச் சேய்மையவாகாமைகண்டு கொள்க. இவன் தந்தையை,

"நெய்தலங் கானல் நெடியோய்" என்றாற்போல (புறம். 10)

என ஊர்ப்பெயரிட்டு வழங்கியதுபோல இவனையும் வழங்கிய தென்று நினைத்தல் தகும். பட்டினப்பாலைக் கியைந்த பெரும்போர்ச் சிறப்பு இக்கிள்ளி வளவனே யுடையனாதல் அவனைப்பற்றிப் புற நானூற்றிற் சோழர் பலரினும் அதிகமாகக் காணப்படும் பாடல்க ளோறுங்கண்டு கொள்ளலாம். இவன் வெள்ளைக்குடி நாகனாரால்,

"குடிபுறந் தருகுவை யாயின்
அடிபுறந் தருகுவ ரடங்கா தோரே" (புறம். 35)

என்று அறிவுறுத்தப்பட்டதற்கியையப் பட்டினப்பாலையுட்,

"கோயிலொடு குடிநிறீஇ"

என்று சிறப்பிக்கப்பட்டான் என்றலும் ஒன்று.

இனித் தாய் வயிற்றிருந்து தாய மெய்திப்பிறந்து தவம் கற்றதற்றொட்டு நாடு செகிற் கொண்டவனும் (பொருநாறு) ஆகிய கரிகாலன்,

“பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ்முற்றி
யருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாய மூழி னெய்தி”

என்ற திருமாவளவனைப் பாடிய பட்டினப்பாலையடிகளும்,

“குழிகொன்று, பெருங்கை யானை பிடிபுக் காங்கு”

என இவன் திண்காப்பேறிச் சென்று கூடியதற்கு உவமை கூறலான் இவன் மணந்த பின்னரே பிணியகத்திருந்தான் என்றும் பிணியைக் கடந்து யானை பிடிபுக்காற்போலத் தன் மனைவியொடு கூடினன் என்றும் கொள்ளவைத்தவாற்று னுணரலாம். இங்ஙனங் கொள்ளாக்காற் “பிடிபுக் காங்கு” எனக் கூறியது நயமில்லையாய் முடியும். பிணியிருந்து பின்னர்க் கடந்து தம்மொடு கூடிய மாந்தரஞ் சேரலிரும்பொறைக்கும் புறப்பாட்டில்,

“கொல்களிறு,
நிலைகலங்கக் குழிகொன்று
கிளைபுகலத் தலைக்கூடி யாங்கு” ம். 17)

என இவ்வாறே உவமித்தலும் ஆண்டு பிடிபுக்காங்கு எனக் கூறாமையும், பொதுப்படக்,

“கிளைபுகலத் தலைக்கூடி யாங்கு”

எனவே கூறியொழிதலுங் கண்டு அதனோடு இதற்குள்ள வேற்றுமை உய்த்துணர்க.

மற்றும்,

“கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்கு”

என்றது பற்றி இவன் இளமையிலே பிணியகத்திருந்தான் என்று துணியின்,

"பெருங்கை யானை பிடிபுக் காங்கு"

என்பதற்கு ஓராண் யானை தன் தாய்ப்பிடியை யடைந்தாற்போல என்று பொருள் கூறிக்கொள்க. கூட்டுள் வளர்தற்கு மட்டும் கொடுவரிக் குருளை புவமமாயிற்றெனின் முன்னுரையே பொருந்தும். இனிச் சிறைகடந்தவுடன் மணந்தான் என்று கொண்டு இங்ஙனங் கூறினுரென்றலும் ஒன்று. ஏற்பது கொள்க. இத் துணையுங் கூறியவாற்றுற் றிருமாவளவன் என்னும் பெயரொன்றே கொண்டு கரிகாலன் எனக் கூறப்படாமையும் கரிகாலனுக்கும் இப் பட்டினப்பாலைத் தலைவற்கும் வரலாற்று முறைமையினுள்ள வேற்றுமையும் பட்டினப்பாலையிற் குறித்த பலசெய்தியும் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவற்கே பெயருடனியைதலும் பிறவுங் கண்டுகொள்க.

இனி இப்பாட்டு "நெஞ்சே திருமாவளவன் வேலினும் வெய்ய கானம், அவன் கோலினுந் தண்ணிய இவள் தடமென்றோள் ஆதலான் பட்டினம் பெறினும் வயங்கிழையொழிய நின்னுடன் வாரேன்" என்று தலைவன் பொருள் கருதிச் செலவுவலித்த நெஞ்சினை நோக்கிச் செலவழுங்கிக் கூறியது இப்பாலைப் பாட்டு என அறிக. இப்பாட்டின் முதற்கணுள்ள 218 அடிகளும் பட்டினத்தை விசேடித்து எழுந்தனவாம். 220ஆம் அடியின் இறுதிச்சீர் முதலாக 298 ஆம் அடியிறுகவுள்ளன திருமாவளவனை விசேடித்தனவாம். மணிமேகலை யுடையார்,

"மன்னன் கரிகால் வளவனீங் கியநாள்
இந்நகர் போல்வதோ ரியல்பின தாகி" (விழாவறை)

எனக் கூறுதலாற் கரிகாலன் புகாரை விட்டு நீங்கிப் பெருநல்லூரிலும் இடையாற்றிலும் தங்கிய காலம் உண்டென்று தெளிதல் தகும். நக்கீரர் இச்சோழனையே கருதி இவன் பட்டினத்தையே செல்வத்திற் சிறந்ததற்கு எடுத்துரைத்தது,

கோக்கிய வேல் என்று வெம்மைக் கெடுத்துக் கொண்டார். அவன் கோனிழல் அடைந்தார் பிரிதற் கரிதான தட்பமுடைமை தெரிய அவன் கோலினுந் தண்ணிய தடமென் றோளே என்றார். அவன் கோலாட்சியின் விசாலமும் மென்மையுந் தோன்றவும் தடமென் றோளே என்றாரென்க. பட்டினம் பெறினும் என்றதனால் அதன் பெறுதற்கரிய சிறப்புரைத்தவாறும். ஒரு பேரரசர்க்குச் செல்வவளனும், அதனையாள்வதிற் செங்கோலும் இனங்காத்தலின் வேலும் இன்றியமையாதன என்று கருதி இம் மூன்றனுந் திருமாவளவன் சிறப்புக் கூறினார். வேல்போற் றுன்பமுங் கோல்போ லின்பமுங் கொள்க. கோலினுந் தண்ணிய வென்றதனால் இவன் அறம் புரி செங்கோல் என்றதாதல் உணர்க. வேலினும் வெய்யகானம் என மறத்தை முற்கூறினார், அரசற்கு சிறந்ததுபற்றி. இது பொருள் வலித்துக் காலிற் செல்ல நினைத்த நெஞ்சிற்குக் கூறியது. அப் பாட்டுக்களிலுங் கலித்தொகையிலும் இன்பப் பகுதிகள் மிகுத்து வரச்செய்யப்படும் பாலைப்பாட்டுக்கள் போலாது அகத்திணை சுருங்கிப் பாட்டுடைத் தலைவனையும் அவனூரையும் விசேடித்த புறத்திணைப்பகுதிகள் மிகுத்துச் செய்யப்பட்டபாடல் இஃதாகும். இதனாலிவ்வாசிரியர் உருத்திரங் கண்ணனார் திருமாவளவனையும் அவனூரினையுமே புகழ்வான் புகுந்து புலத்துறைக்கேற்ப அகத்திணைப் பகுதியைச் சிறிதுகூறி நயப்படுத்தினாரென்று நினையலாம். பட்டினத்தை விசேடித்தன பெரும்பாலும் அந்நகர்ச் செல்வச் செருக்கைக் குறித்தெழுந்தனவாம். திருமாவளவனை விசேடித்தன பெரும்பாலும் அவன் தறுகட் பெருமிதத்தைக் குறித்தெழுந்தனவாம்.

கரிகாலன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியின் புதல்வன் "உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்" என்பது பொருநராற்றுப் படை. இளஞ்சேட்சென்னியை,

"நெய்தலங் கான நெடியோய்" (புறம். 10)

எனப்பாடுதலான் இவன் நெய்தலங்கானல் என்னும் ஊரிலிருந்தவன் என்று தெரிகிறது. 'நெய்தல்' என்னும் ஊர் குழித்தலைப்பற்றில்

இன்றும் உண்டு. இதுவே இப்பெயரான் வழங்கப்பட்டதென தெரிகிலேம்.

"கைதை வேலி நெய்தலங் கானல்"

எனச் சிலப்பதிகாரத்துப் புகார் பட்டினப்பாக்கத்துப் பகுதியைக் கூறுதலான் இவன் அப்பட்டினத்துக் கடற்றுறைப் புறத்து அரண்மனை யமைத்து வதிந்தது பற்றி இங்ஙனங் கூறப்பட்டானோ என்று நினைத்தற்கும் இடனுண்டு. புறப்பாட்டுரைகாரர்,

"நெய்தலங் கானல் என்னுமூர்"

என்று பொருள் கூறியுள்ளார். இவ்விளஞ்சேட்சென்னி கரிகாலன் தாய்வயிற்றிற் கருவி லிருக்கும்போதே இறந்தவனாதல் வேண்டு மென்பது இவனைப் பொருநராற்றுப் படையுள்,

"தாய்வயிற் றிருந்து தாய மெய்தி"

எனப்பாடுதலான் அறியப்படுவது. இக்கரிகாலன்,

"சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக் — கடைக்காற்
செயிராறு செங்கோல் செலீஇயினான்"

என்பதனால் இம்மையிற் பகைவராற் றீயாற் சுடப்பட்டுயிர் உய்ந்தனன் என்றும் பின்னர் இரும்பிடர்த்தலையார் உதவியாற் செங்கோல் செலுத்தினன் என்றும் தெரிகிற்பது. தீயிற் சுடப் பட்டதனாற் கரிந்தகாலுடையனாதல் பற்றிக் கரிகால் எனவும் கரி காலன் எனவும் வழங்கப்பட்டனன் என்று தெரியலாம்.

"கரிகாலன் கானெருப் புற்று"

என்பதும் இதனை ஆதரிப்பது. இவ்விளஞ்சேட்சென்னிக்கு மூத்தவனான சேட்சென்னி நலங்கிள்ளி என்பவன்,

"கூம்பொடு
மீப்பாய் களையாது
மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅ,
ரிடைப்புலப் பெருவழிச் சொரியுங்
கடற்பஃ றாரத்த நாடுகிழ வோயே" (புறம். 30)

எனப் பாடப்படுதலான் இவன் புகார் நகருடையனாதல் நன்கறியலாம். இவனுக்குச் சேட்சென்னி யென்பதும் பெயரென்பது

"சேட்சென்னி நலங்கிள்ளி" (புறம். 27)

என்பதனாலறிக. இவன் தம்பி இளஞ்சேட்சென்னி அவ்வூரிலே ஒரு புறத்தில் தனி அரண்மனையிலிருந்தவனாவன். இவன் இறந்த பின்னர் இவன் மனைவி வயிற்றிற் றோன்றிய கரிகாலன் இவ்வூரில் வதிதற்கேற்ற துணையின்மையாலோ வேறுபகையாலோ இவ்வூரை விட்டு நீங்கிப் பிறவூர்களில் வதிய வேண்டிய நிலையுண்டாயிற்றென் றுணரப்படுவது. சுடப்பட்டுயிருய்ந்து கருவூரிற் சென்று வதிந்தனன் என்று கூறுவர்.

"கழுமலத் தியாத்த களிறு கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனால்" (பழமொழி)

என்னும் பாடல் இதற்கு ஆதாரம் என்பர். இக்கரிகாலன் இவ்வூரை விட்டு நீங்கிய செய்தியையே மணிமேகலை,

"மன்னன் கரிகால் வளவனீங் கியநாள்
இந்நகர் போல்வதோ ரியல்பின தாகிப்
பொன்னகர் வறிதாப் போதுவர்"

என்பதனாற் கூறிற்றென்று நினைத்தல் பொருந்தும். இவன் மிக விளமையிலே அரசனாதல்,

"இளமை நாணி முதுமை யெய்தி"

எனவரும் மணிமேகலையானும் அறியலாம்.

இங்ஙனமன்றிக் கரிகாலன் வடநாட்டுப் படையெடுப்பை இது குறித்ததென்பதற்கு ஓரடையாளமும் ஈண்டில்லாமை நன்கு ஆராய்ந்து தெளிக. அன்றியும் ஒரு பேரரசன் படையெடுத்துப் பிறநாடு செல்லும்போது அவனிருந்த ஊர் காப்பின்றி வறிதாகப் போயிற்றென்று பாடுதல் உசிதமா என்று அறிஞரே விளவியறிக. ஒருவர்க்கும் இப்படியென்று தெரியாமல் அரசுக்குரியவன் ஊரை

விட்டு நீங்கி மறைந்தது கண்டு அவ்வூர் அவனைத் தேடித் திரள் திரளாகச் சென்றதனால் ஊர் வறிதாயிற்றென்றுற் பொருந்து மென்க. படையெடுப்புக் கூறிய சிலப்பதிகாரத்துச்,

"செருவெங் காதலிற் றிருமா வளவன்
புண்ணியத் திசைமுகம் போகியவந்நாள்" (இந்திர 89-94)

என விளங்கப்பாடுதல் கண்டுகொள்க. இங்ஙனம் விளங்க வையாது நீங்கிய நாள் என்றே ஒழிவது அவன் சாவினையேனும் அல்லது அவனுக்குற்ற பெருங்கேட்டையேனும் குறிக்காமற் படையெடுப்பையே குறிக்குமென்பது அத்துணைப் பொருத்தமாதலில்லை. செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்புக் கூறிய கால்கோட் காதையினும்,

"தானவர் தம்மேற் றன்பதி நீங்கும்
வானவன் போல வஞ்சி நீங்கி"

என விளங்கக் கூறுதல் காண்க. தேவர் ஊர் வறிதாதற்கு உவமை கூறியது இஃதாதல் கண்டு கொள்க. தேவர், ஊரில் ஆணும் பெண்ணும் இவ்வூர் விழாக்காண வருவதால் அவ்வூர் வறிதாதல் கூறத்தகும். கரிகாலன் படையெடுப்பில் ஆண் மக்களுள்ளும் படைப் பொருநரேயன்றி எல்லாப் பெண் மக்களுஞ் செல்லுதலில்லாமையாற் புகார் ஊர் வறிதாதல் யாங்ஙனமென்று வினவுக. ஆணும் பெண்ணும் அரசனைக்காணாது துயருற்றுத் தேடிச்சென்றனர் என்றேனும் அவன்பாலன்புபூண்டு அவனைப் பின்பற்றிச் சென்றனர் என்றேனும் கொள்க. அவ்வாறு வறிதாயிற் றென்பதே இனிது பொருந்துமென்க. இவ்வாறெல்லாம் கூறுபால்,

"மன்னன் கரிகால் வளவனீங் கியனாள்"

என்று பாடங்கொண்டு கரிகால் வளவன் ஈங்கு இயல நாள்- கரிகால் வளவன் இவ்வுலகில் இயன்ற காலத்து எனவுரைத்தாலும் நன்கு பொருந்துமென்க. கரிகாலன் ஆண்டகாலத்து இந்நகர் சிறப்புற்றது போன்ற இயல்பினை இப்பதி இப்போதுடைத்தாக என்று பொருள் கூறிக்கொள்க. ஆகி என்பதை ஆகவென்று திரித்துக்கொள்க.

"செருவெங் காதலிற் றிருமா வளவன்
புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்"
(சிலப், இந்திர 90-94)

என்பது பட்டினப்பாலை கொண்ட திருமாவளவற்கு இனிது பொருந்தும். "வடவர் வாட" என அவன் சிறப்புக்கூறிய பட்டினப் பாலை கூறுதலான் இதனை அறியலாம். செருவெங் காதலிற் புண்ணியத் திசைமுகம் போகிய செய்தியும், மன்னன் கரிகால் வளவன் புகார் நீங்கிய செய்தியும் ஒன்றெனத் துணிதற்கு ஏற்ற சொல்லோ வேறு மேற்கொளோ இன்மைகாண்க. கரிகாலன்றான் திருமாவளவன் என்பதற்குப் பிறர் காட்டக் கூடிய மேற்கோள் இஃதொன்றேயாம். இம்மேற்கோள் நீங்கிய என்னுஞ் சொல் ஒன்றே கொண்டு படையெழுச்சியில் அவன் வடநாடு சென்ற நீக்கத்தைக் குறிப்பதென்று ஒருதலையாகத் துணிதற்குரிய தாகாமையின் இஃதொன்றே கொண்டு சிறந்த மேற்கோள்களாற் பலவகையானுந் தெளியப்படும் வேற்றுமையை ஒற்றுமைப் படுத்தல் இயலாமை நோக்கிக் கொள்க. சங்கத்து நூல்கள் பலவற்றினுங் கரிகாலனுக்குப் புகார் நகர் கூறாமை கற்றார்க்கு வியப்பைத்தருவதாகும். இம் மணிமேகலை மட்டும் தனக்கு முந்தியவும் ஒத்தவுமாகிய சங்கநூல்களிற் காணப் படாத தொன்றைக் கூறுவது. கரிகாலனை நேரிற் கண்டு பாடிய முடத்தாமக் கண்ணியார் தாம் பாடிய பொருநராற்றுப் படையுள் இவன் ஊரே குறியாமல் ஒழிதலும் நோக்கிக்கொள்க. இக் கரிகாலன் வெண்ணிப் போர் வென்றபோது ஆண்டு இவனுக்குத் தோற்றுப்புறப் புண்ணாணி வடக்கிருந் துயிர்துறந்த சேரலாதன் மனநிலையையும் அவனுடன் இறந்த போர் வீரராகிய சான்றோர் உள்ளப் பாங்கையும், அப்போர்க்களத்தே இவன் நேரிற்கண்டு தன் மனம் வேறுபட்டு அரசு கிள்ளிவளவனை ஆளவிட்டுத் தான் இடையாற்றிலோ பெருவளநல்லூரிலோ வதிந்து இனிது துய்த்து அறிந்த அந்தணரோடு ஆராய்ந்து கற்புடை மகளோடு வேள்வி பல வேட்டு அறிவிலே பொழுது போக்கினன் என்று நினைத்தற்கே இவன் சாவிற்பாடிய கருங்குழலாதனார் பாட்டு இடந்தருகிறது. இப்பாட்டு வருமாறு, (புறம். 224)

"அருப்பம் பேணா தமர்கடந் ததூஉம்"

இதன்கண் அருப்பம் பேணுதமர் கடந்தது இவன் இளமையிற் செய்த வெண்ணி வாயிற்போர் வாகைப் போரிரண்டையுங் குறிக்கும். மற்றவை யெல்லாம் அப்போர்ப்பின் னிகழ்ந்தனவென்று கொள்ளலாம். வாகைப் பறந்தலையில் ஒன்பது குடை மன்னர் இவன் முன்னிலைச் சென்று பின் போர்புரிய மாட்டாரா யோடினர் என்று (அகம். 125) கூறுதலான் இவன் படை, படையெடுத்து வந்த பிறரை அழியாமல் ஓடச்செய்த வெற்றியையுமே குறித்தல் காண்க. கலிங்கப்போரின் பின் அசோகன் மனநிலை மாறியது போல வெண்ணிப் போரிற் சேரலாதன் வடக்கிருந் துயிர்நீக்க அவனோடு பன்னூறு சான்றோர் மடிந்ததன் பின் இவனுக்கு மனமாறியது பொருந்துமென்க. வெண்ணிக் குயத்தியார் பாடிய புறப்பாட்டினும்,

"வென்றோய் நின்னினு நல்ல னன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே" (புறம். 66)

என அறிவுறுத்தியதனானும் இந்நிலை யிவற் குண்டாதல் ஒருதலையென்க. இங்ஙனமில்லாது உளவரையும்படையெடுத்துச்சென்று நாளும் விடாது போர்செய்து தன் வீரத்தையே பெரும்பாலும் உலகினிறுத்திய கிள்ளிவளவன் சாவிற் பலர் பாடிய பாடல்களை ஈண்டைக்கேற்ப நோக்கியுங்கொள்க. இம்முறையான் ஆராயின்,

"மன்னன் கரிகால் வளவனீங் கியநாள்
இந்நகர் போல்வதோ ரியல்பின தாகி"

(மணிமே—விழாவறை)

என்பதற்குக் கரிகாலன் அரசு நீங்கிய நாளில் இந்நகர் போல்வதோரியல்பினதாய் என்று பொருள் கூறுவதும் பொருந்தும். இதுவே சங்க நூல்கள் இவனுக்குப் புகாருடைமை கூறாமைக்குக் காரணமென்று துணியத்தகும். ஏற்பது கொள்க.

இக்கரிகாலற்குப் பின் சங்கமில்லாத காலத்து ஓர் கரிகாலன் இச்சோழர் வழியிற் சேர்க்கப்படுவன். அவன் வரலாறு பலவற்றை யிவனுக்கேற்றி யிடர்ப்படாதொழிக. பொருநராற்றுப்படையுள்,

"நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்
செல்லென விடுக்குவ னல்லன்"

என வருவதும் இவனுக்குள்ள மன நிலைமையை நன்குணர்த்துதல் காண்க. அந்நூலிற்,

"பெரிதாண்ட பெருங்கேண்மை
யறனொடு புணர்ந்த திறனறி செங்கோ
லன்னோன்"

என்புழிப் பெரிதாளும் என்று கூறவேண்டியவன் அங்ஙனங் கூறாது "பெரிதாண்ட" என இறந்தகாலத்தாற் கூறுதலால் நன்குய்த்துணர்க.

"இளையோன் சிறுவன்,
பெரிதாண்ட வன்னோன்"

என்று கூறியதுகொண்டு சிறுவனாயினும் பெரிதென்று சொல்ல ஆண்ட அன்னோன் என்று கூறினும் ஈண்டைக்கியையும்.

# பட்டினப்பாலை உரைப்பகுதி

1—5 வசையில் புகழ் என்பது காவிரிக்கு அடையென்று கொள்வர் நச்சினார்க்கினியர். வசையில் புகழ் வயங்கு வெண்மீன் எனக்கிடந்தபடியே வெண் மீனாகிய சுக்கிரனுக்கியையாமை அவன் மழைக்கோளாகியும் பெய்விக்காது கெடுப்பதுஞ் செய்து வசையுடையனாதல் கருதியென்று நினையலாம். வெண்மீன்—வெள்ளி. கோள்களையும் மீனென வழங்குதல் "நாண் மீன் விராய கோண்மீன் போல" (பட்டினப். 68) என வருதலா னறியலாம். தற்பாடிய புள் வானம்பாடி. இது வானம் வாழ்த்தி என வழங்கப்படும். "வானம் வாழ்த்தி பாடவும், அருளா துறைதுறந்தெழிலி நீங்கலின்" என அகப்பாட்டினும் (67) வந்தது. தற்பாடியதற்கே வழங்கல் வேண்டும். அது வேண்டுவதுந் துளியேயாகும்; அத்துளிதான் அதற்குணவாம். அத்துளி மழையுமாறி வான் பெய்யாமையாற் பொய்ப்பினும் எ—று. இது பாடினார்க்குச் சிறிதும் உதவாது பொய்க்கும் உலோபியரைக் குறிப்பானினைப்பிப்பதாகும். வான் புயன்மாறிப் பொய்ப்பினுமென்க. வெண்மீன் தெற்கேகினும், வான் பொய்ப்பினும் என்றது காரணக் காரணங் கூறினாரென வுரைத்தது காண்க. இதனை விந்நாட்டார் வானத்துக் கோணிலைக்குத் தக்கவாறு உலகு நடைபெறுதல் கருதியது புலனும். வெள்ளி வடக்கணுள்ளபோது மழை பெய்வதும் இவன் தெற்கட்புகின் மழை பெய்யாமையும் பல்காற்கண்டு தெளிந்தனராதல் தெரியலாம். தேம்ப—வாட; வானின்று கீழ்வீழ்ந்த நீர் நிலைகளில் இப்புள் உண்ணாது என்னும் மரபு பற்றித் துளியுணவிற் புள்ளென்றார். இதனையே பல்லடகவி,

> "பான நீர்நிறைந் தின்சுவை தந்துந்தன்
> பாடு சென்னி வணங்கரு கோன்பினால்
> வானம் பாடியுண் ணாமலண் ணாந்துகார்
> வாராதொல்லென மேலெதிர் பார்க்குமே"

(பல்லட சதக மொழிபெயர்ப்பு)

6—10. என அழகாக வருணித்தார். வான் பொய்ப்பினுந் தான் பொய்யாக் காவிரி யென்றது தான் நீர் பெருகுதற்குக் காரண

மாகிய வானம் இந்நாட்டுப் பெய்யாது பொய்த்தழியும் தான் நீர் உதவற்கட் பொய்யாத காவிரி என்றவாறும்.

மலைத்தலைய காவிரி கடற்காவிரி என்க. மலைத் தலைய காவிரி தலைக்காவிரி என இன்றும் வழங்குதல் நினைக்க. கடற்காவிரி-கோவின்கட்புக்க மகன் கோமகன் என்பதுபோல இத்தொடரைக் கொள்க. கோவை மணந்த மகள் கோமகளாதல்போலக் கடலை மணர்த காவிரியெனினு மமையும்.

மலையிலே தலையுடையதாகியும் கடலிற் புகாது பிறயாறுகளிலே கலக்கும் உபநதிகளை விலக்கிக் கடற்காவிரி என்றார். சேரர் ஆன்பொருநை கடலிற் புகாமை நூல்களினோக்கிக் கொள்க. யாறுகளைப் பெண்ணாகவுங் கடலை ஆணாகவுங் கூறுதல் வடமொழியாளர்க்குந் தமிழர்க்கும் ஒக்கும். இதனாற் கடல் கணவன் என்றுரைகாரர் கூறிக்காட்டினார். காவிரி பொன் கொழிக்குஞ் சோணாடு என்பர். காவிரி பொன் கொழிக்கும் விளைவறு வியன் கழனியென வியைப்பினும் பொருந்தும்.

பொன் கொழிக்கும் விளைவு—காவிரி பொன் கொழித்தற்குக் காரணமான விளைவு.

புனல் பரந்து-புனல் பரத்தலான் என்க. புனலாகப் பரந்து பொன்னைக் கொழிக்கும் என்ற நயத்தையு நினைக்க.

புனலே பொன்னையாக்குதல் கருதுக. கோடையிலுங் கூலம் விளைத்தலின் "விளைவறாக் கழனி"- என்றதாம்.

கார்க்கரும்பு-பசிய கரும்பு என்றார் உரைகாரர். கார் நீர் பெய்தல் போல சாறு பெய்தலையுடைய கரும்பு என்பது பொருந்தும். கார்வண்மை யென்பதனானுணர்க.

11--15. நீர்ச்செறுவினீ ணெய்தற் பூச்சாம்புதற்குக் கார்க் கரும்பின் கமழாலைத் தீயை ஏதுவாக வைத்தார். நீர்ச் செறுவினீளுதலால் வாடாத அப்பூச் சாம்புதற்கு நயமான ஒரேது காட்டியது சிந்திக்க. "நீருட் குவளை வெந்தற்று" (குறிஞ்சிக் கலி. 5)

என்பது வியப்பாதல் காண்க. மிக்க பயன்படுவதொன்றனே அங்ஙனம் பயன்படாது செறுவிற் களையாயதொன்று வாடுதல் காட்டினர்;

"நெடுநீர்ச் செறுவிற்
களைஞர் தந்த கணைக்கா னெய்தல்"

என்பது பெரும்பாண். (212—13)

தெறுவு—தெறல்,

பாகு காய்தலில் நெய்தற்பூ கவின் வாடியது கூறியதனால் நெற் செய்யப் புற்றேய்வது போன்று தன்னடைவே நிகழ்ந்தது என்பதன்றி அதன் வாட்டம் கருதாமை குறித்ததாம். ஆலைப்பாகிற்கு இனிமை இயல்பாதலின் அதனினும் மிகுத்துக் கமழ்தல் வேண்டினர். எவ்வுணவிற்கு மினிமை யூட்டுதலாற் கரும்பை முதற்கண் எடுத்தார். "கரும்பொடு செங்நெனீடி" எனப் பின்னும் ஒடுக்கொடுத்து இதன் உயர்பு தோன்றக் கூறுதல் காண்க. கரும்பு ஆதிதொட்டு இந்நாட்டிலில்லாமல் இருந்து பின்னே சேரமாற் குறவினனாகிய அதியன் வழிமுன் ஒருவனாற் றேவருலகினின்று கொணரப்பட்ட தென்பது நந்தமிழ்க் கொள்கை. இதனைக்

"கரும்பி வட்டந்தோன் பெரும்பிறக் கடையே"

என்னும் புறப்பாட்டடியான் (392) அறிக. இது சோணாட்டு விளைவிற் றலைசிறந்ததாதல்,

"சோழன், உறந்தைக் கரும்பளிது"

என்பதனால் அறியலாம். கரும்பையடுத்து இன்றியமையாத உணவாதல் பற்றிக் "காய்ச்செந்நெல்" வேண்டினர். 'காய்ச்செந்நெல்' என்பதனைக் காய்த்த செந்நெல் என வுரைகாரர் விளக்கினர் பதிற்றுப்பத்துள் வைத்தலை ( 44 ) என்பது வைத்த இடம் என்று பொருள் கூறப்படுதலும் ஆண்டு விகாரமென்று நல்லுரையாளர் கூறியதுங் காண்க. இதனாற் காய்ச்செந்நெல் என்பதும் விகாரமெனக் கொள்க. செந்நெற் கதிரை எருமை மாந்துதல்

கூறி அக்கதிரின் மிகுதியும் நிலச்செருக்குங் குறித்தார். கரும்பும் நெல்லும் அடுத்து எருமையைக் கூறியது மக்கட்குப் பாலுந் தயிரும் நெய்யும் உதவலானும் விளைவயற்கெருவும் உழவிற்குக் கடாவும் நல்குதலானும் என நினைக்க. முழுக்குழவி முற்பட்ட கன்று என்றார்; இளமை முழுவதும் உள்ளது என்பதுபற்றி. இக்குழவி நெற்கூட்டு நிழலில் உறங்குமென்றார் பால் நிறையக் குடித்தலான் வேறு புரியாமல் வதிதல் கருதி; கரும்பும் நெல்லும் விளையுங் கழனியும் பிறவுங் குறும்பல்லூர்க்கு அடைகளாம். ஊர் குடியோடாது நிலைத்தற்கு இவை இன்றியமையாதன என்பது கருத்தாம்.

இனிக் கழனி விளைவு கூறிக் குறும்பல்லூர் அகநகர் முற்றத்தைச் சூழ்ந்த தோட்டங்களின் விளைவு கூறுகின்றார் என்க. இவ்விளைவையுங் கழனிக்கேற்றுவர் நச்சினார்க்கினியர். நல்லது கண்டுகொள்க. தெங்கு, வாழை, மா, பெண்ணை, கமுகு, மஞ்சள், சேம்பு, இஞ்சி இவை கூறுதலாற் றெரிந்துணர்க. இங்குக் காட்டிய எண்வகை விளைபொருள்களையும் அவ்வவற்றின் பயனால் அடைகொடுத்துரைப்பது காண்க.

16—20. கோள் - தெங்கங்குலை, குலைவாழை - தாறுடைய வாழை. காய்க் கமுகு அடைக்காயையுடைய கமுகு மரம். கமழ் மஞ்சள் - மஞ்சள் என்னும் பெயரான் நிறமறியப்படுதலின் அதனின் மிகுத்துக் கமழ்தலான் விசேடித்தார்.

காய்ச்செந்நெற்கும் காய்க்கமுகிற்கும் வேற்றுமை தெரிந்துகொள்க.

இனமா - இனமாமரங்கள் என்றார் உரைகாரர். கனியால் இனிமையையுடைய மாமரம் என்க. மற்றை ஏழு பொருட்கும் பயன்கொள்ளக் கூறியவர் ஈண்டு மட்டும் எடுத்துக்கொண்ட நெறியிற் பிறழ்ந்து வேறு கூறினாரெனலாகாது. "இன்வளரிளம்பிறை" (1008) என்னுஞ் சிந்தாமணியுள் இன் இனிமைக்குரிய பெயராகவே கொண்டார் இவ்வுரையாளர். மாமரங்களிற் புளிப்பன பல

வாதலின் அவற்றை விலக்கற்கினிமை வேண்டினர். "இன்மாவி னிணர்ப் பெண்ணை" எனப்‌பாடங் கொள்ளலும் ஆகும். இவ்வடி யைக் "கோட்டெங்கிற் குலைவாழை" என்றாற் போலக் கொள்க.

இனி உண்ணுநர் திரள்கொள்ளுதற்குக் காரணமான மாமரம் இனமா என்பதும் ஒன்று.

"உண்ணுநர்த் தடுத்தன தேமா" (மலைபடு. 138)

என்பது மலைபடுகடாம்.

ஓரின மென்றாற் புளிப்பானும் ஓரினமாதல் குறிப்பதல்லது இனிமை குறிக்காமை காண்க. ஈண்டு ஏற்பது கொள்க.

முதற்சேம்பு - அடிபரந்த சேம்பு என்பர்; முதல் — வேர்; வேரே கிழங்காகவுடையது. வடநூலார் கிழங்கினை மூலம் என்ப தனானுமுணர்க.

"வாடிய வள்ளி முதலரிந் தற்று" (குறள், 1304

என்றார் திருவள்ளுவனாரும். சேம்பு அதன் கிழங்காற் பயன்படு தல் அறிந்தது.

"சேம்பின் முளைப்புற முதிர்கிழங் கார்குவிர்" (362)

என இவ்வாசிரியரே பெரும்பாணாற்றுப் படையிற் கூறுதல் கண்டுகொள்க. சேம்பு முதலுதற்குக் காரணமாதலான் முதல் எனினுமமையும். குலமுதல் குலத்திற்கு மூலம் என்பதனலறிக. (புறப். வெண். பொதுவியல். 6)

முளையிஞ்சி - முளையினாற் பயன்படும் இஞ்சி (எ—று)

இணர்ப்பெண்ணை - நுங்குக்கொத்தை யுடைய பனைமரம். புறத்தே கரும்பும் நெல்லும் விளையுங் கழனியும் அதனை யடுத்து இவ்வெண் பொருள்களுமுள்ள தடவையுஞ் சூழ்ந்து, கதிராருந்து மோட்டெருமை முழுக்குழவி கூட்டு நிழற்றுயிலும், அகநகருடைய நாம்பல்லூருண்ட்ய சோறுடு என்க. அகநகர்-அகமனை. இவ்வாறு

மனையைச்சூழ இவை இருத்தலாகக் கொள்வதே பொருத்த மென்பது, பெரும்பாணாற்றில் இவ்வுருத்திரங் கண்ணனாரே,

> "மஞ்சண் முன்றில் மணநாறு படைப்பைத்
> தண்டலை யுழவர் தனிமனை"

(பெரும்பாண். 344—45)

எனக் கூறுதலானுணர்க.

21--25. இனி அம்மனையை அழகுபட வருணிக்கின்றார்.

> மனைக்கு விளக்க மடவாள்"

என்பது பற்றியும்,

> "மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
> னன்கல னன்மக்கட் பேறு"

என்பது பற்றியும் இங்கினிது வாழ்தற்கு நிறை செல்வமின்றி யமையாமைபற்றியும், மனைவி மக்கள் செல்வம் என்னுமிவற்றால் அவ்வக மனையை விசேடிக்கின்றார். "அகநகர் வியன் முற்றத்து" என்பதனால் இவ்வக மனைகள் அகன்ற முற்றங்களுடனிருத்தல் காணலாம். வியன்முற்றமென்றதனால் இடுக்கும் முடுக்கும் இல்லாமையறியலாம்.

சுடர்நுதன் மடநோக்கின் நேரிழை மகளிர்--சுடர் நுதலா னியற்கையழகினையும், மடநோக்கின் என்பதனால் உள்ளத்தியல்பினை யும், நேரிழை யென்பதனாற் செயற்கை யழகினையுங் குறித்தார்.

சுடர்நுதல்-பிறர் பார்த்தறிவது. மடநோக்கு - மகளிர் பார்த் தலான் அவருள்ளத்து மாசற்ற மடமை காணநிற்பது.

நேரிழை - இயற்கைக்கு நேரான செயற்கை யணி.

> "சில்கல னணிந்த மெல்லென் யாக்கையர்"

என்றார் பெருங் கதையினும். இனி இவர் செல்வச் செருக்கினை

எனப் பெரும்பாணாற்றில் இவரே விளக்கிக் கூறுதலான் அறிக. பெரும்பாணாற்றுப்படையும் பட்டினப்பாலையும் பாடியவர் ஒருவரே யாதலின் இவ்விருநூற்கும் ஒற்றுமைகள் மிகப் பலவாகும். ஆங்காங்கே காட்டிச் செல்வேன்.

எறிந்த கொடுங்காற் கனங்குழை — எறிதலிற் கொடிய காற்றை யெழுப்பிய கனவிய குண்டலம், கொடுங்கால் — காதில் மாட்டுதற்குரிய பொன்னால் வளைவாகச்செய்யப்பட்ட கோக்கியுமாம்.

26-30 விலக்கும் விலங்கு பகை — விலக்குதலான் வழி விலங்கிச் செல்லுதற்குரிய பகையல்லது வேறு மனங்கலங்குதற்குக் காரணமான பகை தெரியாத கொழும்பல்குடி என்க. அகமனைகளும், பலவாய், அவ்வகமனைகளில் வாழும் கொழுமையுடைய குடியும் பல என்பது கருதக் கொழும்பல்குடி என்றார். இக் குடிகளையுடைய குறும்பல்லூர் நெடுஞ்சோணாடு என்க. குறும் பல்லூர் — சேய்மையவாகாது அடுத்தடுத்துள்ள பல ஊர்களை யெங்கு முடைய நெடிய சோணாட்டின்கண் என்று. சோணாட்டுப் பட்டினம் பெறினும் என வியைக்க. சோழன் நாடு சோணாடு என மரீஇயிற்றென்ப. குறும்பல்லூர் நெடுஞ்சோணாடெனத் தொடை முரண்வைத்துப் பொருள் சிறப்பித்தல் கண்டு கொள்க.

இத்துணையும் யாறும் அதன் விளைவளுக் கழனியும் பல பயனுந் தருந்துடவைகளும் சூழ்ந்த மனைகளின் மகளிருஞ் சிறுவரும் செல்வத்தினிறைந்து கலங்கு பகையில்லாது வாழும் கொழும்பல் குடிகள் நிறைந்த பல்லூர்களையுடைமையே நாட்டிற்குச் சிறப் பென்பது கருதி வைத்தவாறு காணலாம். கலங்கு பகையறியாது என்பதனால் இந்நாட்டிற்குத் திருமாவளவன் வேலியாய் நின்று காத்தல் குறித்தனர். சோணாட்டுத் தொண்டி முதலிய பட்டினங்க ளுளவேனும் அவற்றுள் எல்லாம் தலை சிறந்து காவிரி கடலொடு கலக்கு மிடத்துள்ளதனால், வாணிகத்துறையான் மேம்பட்டுப் பல் வேன் மன்னரும் பரதவரும் வேறு பல தேயத்துப் பன்மொழி யாளரும் வதியப் பெற்றுச் சம்புத்தீவங்காக்கும் அணங்கே இவ் வூரிற் போந்து தங்கிய சிறப்பாற் சம்பாபதியென்ற சிறப்புப்பெயர்

பெற்று, இந்நாட்டையே புகார் நன்னாடு என்று சொல்லும் வண்ணம் (அகம் 181.) புலவர் பாடும் புகழானிறைந்த புகார் நகரம் ஒன்றே பட்டினம் என்னும் பொதுப் பெயரே தனக்குப் பெயராகக்கொண்டு விளங்கிய காலம் அஃதாதலின் அங்ஙனங்கூறினார். ஊரெனப் படுவது உறையூர் என்பது போலப் பட்டினம் எனப்படுவது புகார்ப் பட்டினம் என்றவாறும். இக்கடற்கரை யூர்க்கியைய நெய்தலையே முதற்கட்கொண்டு அதற்குத் தலையாய உப்பு விளைவைக் குறித்தார். உப்பு என்ற பெயரானே அதன் சுவை அறியப்படுதலின் அதன் தூய்மை வேண்டி வெள்ளையுப்பு என்றார். தமிழில் 'வெண்கலமிழ்தம்' எனப் பெயரிட்டு இதனை வழங்குவர். இதனால் இதன் உயர்வு குறித்தல் காணலாம்.

உப்பின் கொள்ளை— உப்பு விலையாகக் கொள்ளற்குரிய விலை,

"உப்பு விலையாக நெல்லொடு வந்தபஃறி"

என்றதனால் அக்காலத்து விலைக்குக் காசு வழங்கலினும் மிக்குப் பண்டங்களே மாறு வழங்குதல் புலனாம். இந் நெல்லொடு வந்த வல்வாயோடங்கள் பந்தியிற் பிணித்த குதிரைகள்போல அணை முதலிற் பிணிக்கப்பட்டு வரிசையிலிருக்குங் கழிசூழ்ந்த தோட்டங் களையுடைய "காவிரிப்படப்பை நன்னாடு" என்ப. இன்காப்பிற் கடிநகர் என்க.—31—35

அணை முதல் — அணைக்குந்தறி. மதிசேர்ந்த மகவெண்மீன் உருகெழு பொய்கையாகிய இணையேரி என்க. மதி, நீர்வடிவனுதலா னும் மகம் வளைவுடைய வாய்க்காலாதலானும் பொய்கையாகிய ஏரி கட்குவமித்தார்.

36-41 திறனுயர் கோட்டம்—வலியானுயர்ந்த தேவாலயம் என்றது எல்லாத் தேவரையுந் தன்கணையான் மோகிப்பிக்குங் காமதேவன் கோட்டம் எ. று. இக் கோட்டமும் இவ்விணையேரியும் காவிரி கடலொடு கலக்குமிடத்துண்மை, சிலப்பதிகாரத்துக் கனாத்திற முரைத்த காதையில்,

"கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றின்
மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள
சோமகுண்டஞ் சூரியகுண்டந் துறை மூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்"

என வருதலா னறிந்துகொள்க. இறலுயர் கோட்டத்தை யடுத்து முருகமர் பொய்கையிணையேரி என்க. முருகு அமர் பொய்கை — தெய்வத்தன்மை யமைந்த பொய்கை எ. று. மூழ்கினார் கணவரொடு இன்புறச் செய்தலாற் றெய்வத்தன்மை கூறினார். முருகு தெய்வத்தன்மைக் காதல் "முருகுறழப் பகைத்தலைச் சென்று" என்புழி நச்சினார்க்கினியர் கூறியது கொண்டுணர்க. இந் நிலம் வெள்ளையுப்பின் கொள்ளை சாற்றி நெல்லொடு வந்த பஃறி பிணித்தலான் நெய்தலாயும், கழிசூழ்படப்பைப் பொழிற்புறவால் முல்லையாயும், உயர்கோட்டத்தான் மலையாயும், பூமுரண் கிடக்கை யிணையேரியால் மருதமாயும், நானிலங்குழீஇயதாய தோற்ற முடைமை தெளிய இங்ஙனங் கூறினார் என்க. காமவேள் கோட்டம் குறிஞ்சியாதல் உயர்த்தியாலும், புணர்ச்சியாகிய சேர்க்கையை ஆண்டு நிகழ்த்தலானும் உய்த்துணர்க.

இருகாமம் — இருவகைக் காமக் கூட்டம். எ. று. நாமே கூடுங் கூட்டமும், கொடுப்பக்கொண்டு கூடுங் கூட்டமும் என்க. இரு காமத்தினுந் தலைவன் தலைவியை யிணைவிக்கும் முருகமர் [illegible] எ. று. பொய்கை ஏரி என்றது மக்களான் ஆக்கப்படாத [illegible] யென்பது குறித்தது. ஏரியைப் புறத்தேயுடைய [illegible] வெண்கோயில் மாசூட்டும் பூதங்காக்கும் புகலருங்கடிநகர் எனவும் ஒஇ நகர்க்கட்டுச்சிற் சேக்கும் பட்டினம் பெறினுமெனவும் [illegible] நச்சினார்க்கினியர்க்குக் கோட்டம் கோயில் என்பதூஉம் உடன்பா டென்பது அவர் "உயர் கோட்டத்தை எல்லாரும் மதியைச் சேர்ந்த மகமென வெண்ணுதலுமாம்" எனக் கூறுதலானறிக. இப் பொருட்குக் கோட்டத்து என்புழி அத்து "இமயத்து" "பௌவத்து" எனப் பதிற்றுப்பத்துள் வந்துழிப்போல அசைநிலையாகக் கொள்க. அவ்வுரையாளர் இக்கோயிலை யாருடைய

தென்று கருதினாரோ தெரிகிலேன். இணையேரி என்பதற்கு வேறு வேறு கூறுவாரும் உண்டு. ஏற்பது கொள்க. இனிக் கோட்டத்தையும் ஏரியையுமடுத்துள்ள திண்காப்பின் வெண்கோயிலுள்ள கடிநகர் கூறுவான் புகுகின்றார்.

புலிப் பொறிப் போர்க்கதவிற் றிருத்துஞ்சுந்திண் காப்பின் — சோழர்க்குரியது தெளியப் புலியடையாளமிடப்பட்டுத் தம்முட் பொருது சேரும் இணைக்கதவங்களையும் நிதி துஞ்சுதலாற் றிண்ணிய காவலையுமுடைய வெண்கோயில் மாசூட்டும் என்க. மிருதியான செலவிட்டும் அழியாதிருத்தல் குறித்துத் திருத்துஞ்சும் என்றார். அந்நிதிக்கேற்பத் திண்ணிய காவல் வேண்டினார். திண்காப்பின் வெண்கோயில் — கோயில் அரச மாளிகை.

போர்க்கதவின் மேலும் திண்காப்பு என்றது வீரர் காவலை. "போரமை கதவப்புரை தொறும்" (நற். 132) என்றது காண்க. சோழர் பாண்டியனை வென்ற விடத்தும் அவன் எயிற் கதவங்களிற் புலி பொறித்தல் கேட்கப்படுதலான் இவர் கதவிற் றங்கொடி யடையாளமிடுதல் வழக்கென்று துணியலாம்,

"தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டு
பேழ்வா யுழுவை பொறிக்கு மாற்றலை"

எனப் புறப்பாட்டினும் (33) வந்தது. திண்காப்பின் வெண் கோயில் மாசூட்டுங் கடிநகரென்க. வெண்கோயில் என்று வெண் சுதை தீற்றிய ராஜகிருகத்தைக் குறித்தார். அது திண்காப்புடைத் தாயும் மாசு ஊட்டப்படுதற்கு ஓரினிய அரிய ஏதுக் கூறுகின்றார். இது நீர்ச்செறுவி னீணெய்தற் பூச்சாம்ப வைத்தவாறு போன்ற தொன்று.

42–45 புகழ் நிலை இய மொழிவளர — இம்மையிற் புகழ் நிலைத்த சொல் பிற நாட்டும் பரக்க.

அறனிலை இய அகன் அட்டில் — மறுமைக்கு அற நிலைத்த அகன்ற சோறடுஞ் சாலை. இம்மை மறுமைக்குறுதியாய புகழும்

அறமுங் கூறியவற்றால் இது தமக்கென்றடப்படும் அடுக்கலை யாகாமை யுணர்த்தினார்.

"தமக்கென் றலை யேற்றார்"

என்பது எளியார்க்கே கூறியதாகவும் செல்வர்க்கு வேறு கூறியதாகவும் நினைய வொண்ணாதென்க. சோறடுஞ்சாலையே யென்பது அட்டில் என்னுஞ் சொல்லானும் மேல்,

"சோறு வாக்கிய கொழுங் கஞ்சி
யாறு போலப் பரந் தொழுகி
யேறு பொரச் சேறாகி"

எனப்பாடுதலானும் அறியலாம். யாறுபோல என்று மிக அடுதல் கூறியதனால் மிகவுண்ணுதல் குறித்தனர். 'குழூஉமூராங்கண், உதிய னட்டில் போல வொலியெழுந்து.' (அகம். 168)

என்ச் சேரன் அட்டில் சிறப்பித்துக் கூறப்படுதலுங்காண்க. கொழுங்கஞ்சி யாறுபோலப் பரந்தொழுகல் கூறி அடப்பட்ட அடிசில் அளவைப் பெருக்கிக் காட்டலே நோக்கு; யாறுபோல நிலனிறந்ததன்று. கொழுங்கஞ்சி என்றது அதுவே உண்டால் உடற்குக் கொழுமை செய்யும் என்பதுபற்றி. இக்கருத்தின் றுயிற்றள்ளப்பட்ட தொன்றற்குக் கொழுமை கூறுதல் அவர் பெருமதிக் கேற்காதென்க.

46–50 ஏறு பொரச் சேறாகி என்றது ஆன் விடைகள் நிலத்தொடு பொருது கோட்டுமண் கொள்ளும் வண்ணம் சேறாகி என்றதாம்.

"நீறெடுப்பவை, நிலஞ் சாடுபவை" (முல்லைக்கலி. 106)

என்புழி இவ்வுரையாளரே "முன்பு காலாலே நிலத்தை வெட்டி நீற்றையெழுப்புமவை இப்பொழுது மழை பெய்தமையிற் கோட்டு மண் கொள்ளுமவை"

என்றெழுதிய வுரை நோக்கி யுண்மையறிக. நனைந்த நிலத்தை மோந்து பொருது கோட்டு மண் கொள்ளல் செருக்கிய ஆனேற்

றினியல்பென்க. கஞ்சி யொழுகிப் பொரச்சேறுகித் தேரோடத்து கள் கெழுமி என்க. தேர்கள் மிக்கோடுதலாற் றாளியாய்க் கிளம்பி வேறுபட்ட வினைபோவத்து வெண்கோயில் மாசூட்டும் எ. று.

வேறுபட்ட வினையோவம் வினையொன்றுன் நிஜ வடிவி னின்று வேறுபடுத்துணர்த்தப்பட்ட சித்திரம் என்று சித்திரத் திற்கும் அதன் நிஜவடிவிற்கும் உரு முதலியன வேற்றுமையில்லை யென்றும் வினையே வேற்றுமையென்றுங் குறித்ததாம். இவ் வோவியம் வினையுஞ் செய்யுமாயின் இது நிஜவடிவென்றும் இது சித்திரவடிவென்றும் வேற்றுமை புலப்படாதென்பது கருத்து. இவ்வாசிரியர் இனிதுவைத்த, இவ்வரிய கருத்து உரைகாரராற் றெளியப்படாமலொழிந்தது இரங்கத்தக்கது. நீறுடியகளிற்றை உவமித்தது அம் மாசால் ஊறுபடாமையும் மழையினனைந்தால் எளிதின் மாசு நீங்கி விளங்குதலும் கருதி. பல்லாயிரவர் பசிநீங்க உண்ணுதற்குக் காரணமாயதொன்றுன் அழகிற்கமைக்கப்பட்ட சித்திரங்களையுடைய வெண் சுதை மாடக்கோயில் மாசூட்டப் படுதல் கூறியதனல் இவர் தாரகபோஷகங்களையே போக்கியங்களி னும் மிகுத்து உலகிற்குப் பயனுக வுணர்த்தல் கருதியது தெரிய லாம். கோயில் மாசூட்டுங் தண்கேணித் தகைமுற்றத்துக் கடிநகர் என்க. தண் கேணியான். நிரைக்குத் தாரகங் கூறினர்.—51—55

தகை முற்றம் — அவை தங்கற்கேற்ற தகுதியையுடைய முற்றத்துக் குடித்துத் தங்குதற்குரிய முற்றத்துச் சாலை என்க. முற்றத்தையும் பகட்டெருத்தின் பலசாலையையும் உடைய கடிநகர். பகட்டெருது—பெரிய எருதென்பர். பகட்டுப்பலசாலை யெனவும் எருத்தின் பலசாலை எனவும் கொள்ளினுமமையும். பகடும் எருதும் மக்கள் போலக் காப்பது கருதிப் பலருண்ணுமிடத்தையடுத்து வைத்தனர், உழவிற்கும், கடாவிடுதற்கும், சகடமூர்தற்கும், பொதி சுமத்தற்கும், நிரை பல்குதற்கும் வேண்டினவாதலின் இவை கூறினர். தவப்பள்ளித்தாழ்கா என்பது எயிற்புறத்துத் தவச் சாலைகளையடுத்து ஓரறிவுயிர்க்கும் அங்கு ஊறு செய்வாரில்லாமை யாற்றழைத்துத் தரையிற்றாழ்ந்த சோலை எ. று. அக்காவிற்குயில் காயின் என்றார்; அச் சோலையைக் குயில் வெறுத்தற்கு ஒரேது

கூறினர், தவப்பள்ளி—முனிவர் அங்கு வேட்டலான் மேற்கூறிய வெல்லாம் வளம்பட நிகழ்வன என்பது தெரியக் கூறினர். தவப் பள்ளித் தாழ்காவின் முனிவர் அங்கி வேட்கும் புகை யென்றியை தலான் அடுக்களைப் புகையை விலக்கற்கு ஆவுதிநறும் புகை என்றார். தேவர்க்கு விருப்பஞ் செய்தலான் நறும் புகை என்க. இப்புகை மிகுதியால் ஆண்டுள்ள குயிற்கு அவ்வழி வெறுக்கப்பட்டது.

56–60 அதை வெறுத்துக் குயில்கள் தம் பெடையொடு கடிநகர்த் தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கும் பட்டினம் என்க. துச்சில்—ஒதுக்கிடம். புறவொடு குயில் பெடையொடு சேக்கும் என்றதனாற் புள்ளினும் பகையின்மை குறித்தனர். முனிவரோடு ஒரு காவின் வதிந்தகுயில் புறவொடு ஒரு துச்சிற் சேக்கும் என்றனர் புறவுஞ் சாந்தவியல்புடையன என்று நினைந்தனர் போலும். முனிவரை ஒத்த தியாகம் புறவிடைக் கேட்டனுமுண்மை சிராமாயணத்திற் கண்டது. பசித்தடைந்த வேடனுக்குத் தன்னைத் தழலிற் சுட்டளித்த புறவின் கதையானுணர்க.

> "பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந் தடைந்த பேதை
> வேடனுக் குதவி செய்வான் விறகிடை வெந்தீ மூட்டிப்
> பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் படுத்த பைம்புள் *
> வீடுபெற் றுயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமி தன்றோ"
>
> (கம்பரா. வீடணன். 112)

என்றார் கம்பநாடர்.

இரியல் போகி—குடியோடிப் போகிக் கடிநகர்ச் சேக்கு மென்க.

> "மாடத்
> திறையுறை புறவின் செங்காற் சேவல்
> இன்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர்

எனப் பெரும் பாணாற்றில் (438—440) இவ்வாசிரியரே கூறுதலான் இந்நகர் காளிகோயிலாகாமை யுணர்க.

> "மணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடத்து"

---

* 'தன்னுயிர் கொடுத்த பைம்புள்' என்னும் பாடம்.

என அகப்பாட்டில் இவரே கூறுதல் காண்க. (அகம். 167)

தூதுணும் புறவு—கல்லுண்ணும் அழகிய புறு, ஒவ்வொரு நன்மையானும் ஒரோர் தீங்கு விளைதலாக இவ்வாசிரியர் கூறி அந்நன்மைகளின் இன்றியமையாமையைக் காட்டுதல் காண்க. கடிநகர்ச் சேக்கும் பட்டின மென்க.

பூதங்காக்கும் புகலருங்கடிநகர்—பூதங்காத்தலால் தீங்கு நினைப்பாரும் புகற்கரிய காவலையுடைய புகார் நகரம். எ. று. நகர் என்றது "புகார் நகரம்" எ. று. (சிலப். வாழ்த்து) என்னும் வழக்குப்பற்றி. குயில் பெடையொடு நகர்த்துச்சிற் சேக்கும் என்றதனால் பிறர்க்கு அடைக்கலம் புகற்கெளிமையும் பூதங்காத்தலாற் பகைத்த நெஞ்சினர் புகற்கருமையுங் குறித்தார். இந்நகரம் இந்திரன் ஏவலான் ஓர் பூதத்தாற் காக்கப்பட்ட செய்தி,

"தேவர் கோமா னேவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை"
(இந்திர விழவு. 66—67)

எனவும்,

"கோநகர் காத்த மாபெரும் பூதம்"
இருந்தபலி யுண்ணு மிடனுங் காண்கும்"
(ஷை கடலாடு. 8—11)

எனவும் வருவன கொண்டு தெரிக. உரைகாரர், கடிநகர் காவலை யுடைய கோயில் என்று கொண்டு இதனைக் காளிகோட்டம் என்றார். அவர் பூதங்காக்குமென்ற அடையான் அது காளி கோயிலாமென்று நினைந்தனர். புலிப்பொறிப் போர்க்கதவிற்றிண் காப்பின், வெண்கோயின் மாசூட்டும் பூதங்காக்கும் புகலருங் கடிநகர் என்றியைதலான் ஆசிரியர் கருத்து அஃதன்மை எளிதின் அறியலாம்.

"உதியனட்டில் போல வொலி யெழுந்தன்று (அகம். 169)

என்பதனாற் சேரன் அட்டில் போல இவ் வெண்கோயிலட்டில் புகழப்படுதலான் இவ்வுண்மை யறியலாம்.

இவ்வூர் கடற்கரை யடுத்து நெடிதிலிருந்து ஒருபுறம் பட்டினப் பாக்கம் எனவும் ஒரு பக்கம் மருவூர்ப்பாக்கம் எனவும் இரு பிரிவாக வழங்கப்பட்டதெனச் சிலப்பதிகாரத் திந்திரவிழாவால் அறியப் படுவது. இவ்வுருத்திரங் கண்ணனார் அவ்வாறே இவ்வூரைப் பகுத்துக் கொண்டு கூறுதொழியினும், இளங்கோவடிகள் ஆண்டு வகுத்தோதியன பலவற்றுட் சில இந்நூற்குமொத்தலான், இந்த இன்ன பாக்கத்ததென்று கருதிக்கொள்ளுதற் கிடனுண்டு. அரசன் கோயிலுள்ள பிரிவு, அடிகள் கருத்துப்படிப் பட்டினப்பாக்கத்ததாக லின் இவ்வாசிரியர் கோயில் கூறிய இடமும் அப்பாக்கத்ததென்றே துணியலாம். அடிகள் பட்டினப்பாக்கத்திற்கும் மருவூர்ப்பாக்கத் திற்கும் இடையே ஒரு பெரிய மரச்சோலையுள்ள தென்றும் அதன் கண் நாளங்காடி நிகழுமென்றுங் கூறுவர். இதனை,

"இருபெரு வேந்தர் முனையிடம் போல
இருபாற் பகுதியி னிடைநில மாகிய
கடைகால் யாத்த மிடைமரச் சோலை"

(இந்திர விழவு. 59—61)

எனக் கூறுதலானறிக. இவ்விருபகுதிக்கு மிடை நிலத்திலே இவ்வுருத்திரங் கண்ணனார் "முதுமரத்த முரண்களரி" உள்ள தென்று கொள்வர். இது 'முனையிடம்' என்றதற்குப் பெரிதும் ஒத்தல் காண்க. இவ்விடை நிலத்தினிரண்டு புறத்தும் பட்டினத்து எயில் வாயிலிற் பூதமுள்ள தென்றும், அப்பூதத்தின் பலி பீடிகை அதன் முன்னுள்ள தென்றும், அதன் முற்றம் முதுமரத்த முரண் களரியாமென்றும், அங்கே பல மறவரும் வீரச்செயல் புரிவரென் றும் கருதிக்கொள்க. இதுவே அடிகட்குக் கருத்தாதல்,

"இருபாற் பகுதியி னிடைநில மாகிய
கடைகால் யாத்த மிடைமரச் சோலை
கடுக்கின்றி நிலைஇய நாளங் காடியிற்
தேவர் கோமா னேவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை
..............................................;

பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து
மூதிற் பெண்டி ரோதையிற் பெயர
மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழுப்பலி பீடிகை
பலிக்கொடை புரிந்தோர் வலிக்குவரம் பாவென'

(சிலப். இந்திரவிழவு. 60—80)

எனவரும் அடிகளோடு இந்நூலின் வரும் அடிகளையுமொப்பு நோக்கி உண்மையுணர்க. பூதங்களை வணங்குதல் சிகிச்சையினுங் கண்டது. இப்பூதப்பலி பீடிகையன்றி காளி கோயிற்பலி பீடிகை என ஒன்றுகூறப்படாமை இந்நூலினுஞ் சிலப்பதிகாரத்தும் நோக்கிக் கொள்க.

முதுமரம் - தொன்மரம், ஆல் என்க. முரண்களரி—வலியறிதற் குரிய விறற்களம்.

உடம்பின் முறையின்றி ஊறு படாமைக்கு "வரி மணைக்கல் றிட்டை" வேண்டினர்.

61-65 இருங்கிளை—முதுமரத்த இருங்கிளையினையுயில் [illegible]

இனைஞெக்கல்—ஒரினப் பற்றாம்.

கருங்தொழில்—தம் வன்மையைக் காட்டுந்தொழில்.

கலிமாக்கள்—அவ்வன்மையாற் கலிக்கின்ற மருவூர் வீரரும் பட்டின மறவரும். அடிகள் இருவரையுங் கூறுதலானறிக. இவ் விருவரையுமே இவ்வாசிரியர் கருதினரென்பது அவ்வவற்குரிய உணவும் மாலையுங் கூறுதலானறியலாம். கடலிறவின் சூடுதின் றும் என்றது மருவூர்ப்பாக்க வீரர் உண்டதைக்குறித்தது. கடலி னுள்ள இறமீனைச் சுட்டதைத்தின்றும். எ. று. வயலாமைப் புழுக்குண்டும் என்பது பட்டின மறவர் உண்டதைக் குறித்தது. ஆமையை நீரிலிட்டுப் புழுக்கியது ஆமைப்புழுக்கு. வயலாமை என்றார் மருதம் ஆகலின். வறளடும்பின் மலர் மலைந்தும் என்றது

மருவூர் வீரர் சூடியது குறித்தது. வறண்ட அடும்பின் மலர்க் கண்ணியைச் சூடியும் எ. று.

66—70. புனலாம்பற் பூச்சூடியும்—நன்னீரிலுண்டாகிய ஆம்பற்பூக் கண்ணியைச் சூடியும். எ. று. இவர் இங்ஙனம் பூவானும் உணவானும் இரு வகைப்படுத்தவரையே அடிகள் மருவூர் வீரரும், பட்டின மறவரும் என வகுத்தனர் என்றுணர்க.

> "நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரும்
> நாண்மீன் விராஅய கோண்மீன் போல
> மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇ"

என்றது, கடலும் அதனையடுத்துப் பன்மலர் மலிந்து திரியும் பலருஞ் சிலருமாகிய இவ்வீரர், மலர்தலை விறன் மன்றத்து வென்றி தோல்விகள் காண ஈண்டினர் பலருடன் தொக்கு. எ. று. நாண் மீன் மலர்க்கும், கோண் மீன் அவரினும் வலியர் எளியராகிய சிலர்க்கும் உவமையாம்.

மலர்தலை மன்றம்—அவரவர் தலைமை மலர்தற்குரிய முரண் களரி.

> "ஆடாடென்ப வொரு சாரோரே யாடன்றென்ப வொரு
> சாரோரே"

என்னும் புறப்பாட்டிற் போலத் தமக்குவப்பார்பாலே வென்றி கூறினராகாமல், உண்மையாய் அவரவர் தலைமை தோற்றஞ் செய்யும் பூதபீடிகை முற்றத் தள்ள முரண்களரி யாதலின் இங்ஙனங் கூறினர். பரந்த இடம் என்றும், வீரரும் வீரங்காண்பாரும் தங்கு தற்குப் பரந்தகன்ற நிலனென்றலும் ஒன்று. நாண் மீனிற்பரணியுங் கோண் மீனிற் செவ்வாயும்போல் வீர முடைமை கூறுதலான் ஈண்டு அவ்விரண்டுமே குறித்தாரெனினுமமையும். இவற்றிற்கு அவ்வீரக்கிழமை தள்ளப்படாத இயல்பாயினாற்போல விறற் கிழமையுடையார் என்பது கருத்தாகக் கொள்க. இவ்வகையான அரிய பெரிய வுரிமையையே "கோளுடைக்கிழமை" யெனச் சிந்தாமணியுட் கூறினர். அதனானுணர்க. ஈண்டுப்போல என்றது

தாராகணப் போரைக் குறிப்பதெனினுமமையும். தாராகணப் போர் என்பது கிரகயுத்தம். நச்சினார்க்கினியர் "கோள்களினுரிமை யோடொத்தவுரிமை" என்று உரை கூறியதனையுங் காண்க. கையினும் என்றது மருவூர் மறங்கொள் வீரரை நினைந்து; கலத்தினும் என்றது பட்டின மருங்கிற் படைகெழுமாக்களை நினைந்து. கைக்குக் கையுங் கலத்திற்குக் கலமும் உடம்பிலழுந்தத் தீண்டி யெனினு மமையும்.

"இருஞ்செருவிற் புறக்கொடாது
பெருஞ்சினத்தா லிகன்மொய்ம்பினோர்"

என்க. புறக்கொடைவேண்டி நெருக்கலாற் பெருஞ் சின முண்டாதல் காட்டினார். கல்லெறியுங் கவண்வெரீஇப் புள்ளிரியும் புகர்ப்போந்தை என்க. ஈண்டு இவர் கல்லெறியுங் கவண் கூறிய வாறே அடிகளுங் கல்லுமிழ்கவணினர் என்று கூறியுள்ளார். இவர் பனையில் ஓர் குறிவைத்துக் கல்லெறிந்து தம் வீறு காட்டுவாராவர். போந்தை—பனை. அதன்கட் புகர்புகுதல் கூறியதனால் இவ் வுண்மையுணர்க. புள்ளையெறிதலில்லை என்க. இவர் போந்தையிற் குறிவைத்து அது புகர்படவெறிதலால் அதன்கண்ணும் பிறமரங் களினுமுள்ள புட்கள் அஞ்சியிரிதல் இயல்பென்க. கவண்வெரீஇ யென்றதுங்காண்க. கவண்வெரீஇ மேலேயுள்ள புள்ளுடனிரியும் பன்றியுங் கோழியுமுடைய புறச்சேரி என்க.

பறழ்ப்பன்றி—குட்டிகளையுடைய இளம் பன்றி.

76—80. அடுத்தூரும் நன்னீருடைமையால் உறைக்கிணற்று கூறினார். ஈண்டுப் புறச்சேரி முதலாக வளர்த்தலை மயங்கிய நெய்தலை மறுகு இறுதியாக மருவூர்ப்பாக்கமே இவர் கூறுகின்றார். உறைக் கிணறு கூறியதனால் இப்புறச்சேரியுள்ள மருவூர்ப்பாக்கத்து என் களின்மை குறித்தார். மேழகத்தகர்—ஆட்டுக்கிடாய். மேழம் மேழகம் இரண்டற்குமுள்ள ஒற்றுமை கண்டு ஏழகம் என்பது பாடமன்றென்க. பாகதச்சிதைவான பாலி மொழியில் "ஏழகம்" என்பதும் உண்டு.

சிவல்—ஓர் பறவை; கவுதாரியுமாம்; பொரற்குரியது. பன்றி, கோழி, தகர், சிவல் இவை நான்கும் தம்முட் போர் புரிதற்குரியன வாதலின் இவை மறவர் முரண்களரியடுத்த புறச்சேரிப் பொருளவாகக் கூறினர். ஈண்டுப்பறழ்ப்பன்றி குட்டிப்பன்றி. குட்டிப் பன்றிகள் தம்முட்பொருவது இன்றுங் காண்பது. "குப்பைக் கோழித் தனிப்போர் போல (குறுந். 305) என்பதனானும், கோழி வென்றி யென்பதனானும் கோழி பொருதல் காண்க. பொருதகர் (குறள். 486). தகர் வென்றி என்றதனால் ஆட்டுக்கிடாய் பொருதல் உணர்க. "சிவல் வென்றி" (புறப். வெண். :மா) யால் இப் பறவை பொருதல் தெரிக. இனிப் பறழ்ப்பன்றியும் பல் கோழியு மாகப் போர்த்தையிற் குறியாகச் செய்துதைத்தன இவ்விரண்டு மெனினும் ஈண்டைக்கு நன்கு பொருந்தும். தகருஞ் சிவலும் வென்றிக்கு வளர்ப்பராதலின் அவைவிளையாட வென்றார். விலங்கும் புள்ளும் இகலின்றி ஓரிடத்தே விளையாடல் கூறினர். பிறப்பால் வேறுபட்டாரும் ஓரிடத்தே கலந்து வாழ்தல் விரும்பினராவர். மேலும் "புலம் பெயர் மாக்கள் கலந்தினிதுறைதல்" கூறுதல் காண்க. கிடுகு—எறிபடை தாங்குந் தோற்கிடுகு. நிரைத்து—வரிசைப்படவைத்து. ஏ ஓங்கு—வேல்களையூன்றி நட்டகல்லின் அரணெடுப்புப் போல என்க. ஈண்டு நடுகல் உரைத்தது இம்முரண் களரிக்கு முன்னுள்ள பூதபலிப் பீடிகையிற்,

> "பலிக் கொடைபுரிந்தோர் வலிக்கு வரம்பாகென (சிலப். இந்திர
> சொல்லிச் விழவு 80)
> "குர்த்தக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை"
> ....................................................
> கற்பலி பீடிகை நலங் கொள வைத்து" (ஷை ஷை 84—86.)

என்றபடி தலையறுத்துப் பலிக்கொடை புரியும் பெருவீரர்க்கு நட்டகல்லைக் குறித்தது. அதனை வேலானுங் கிடுகானும் அரண் செய்தல் மரபென்க; நிப் பாய்ந்த கபிலர்க்கு நட்டகல் உண்டென்பது கேட்கப்படுதலானும் இவ்வுண்மையுணரலாம்; "கபிலக்கல்லது" என்பது வீரட்டானச் சாசனம்.

"நடுகல் வேலூன்று பலகை"

என்பது அகம். (67)

81—85. தூண்டிலுடன் கூடிய காம்பு வேலாகவும், அது சாத்திய குறுங்கூரை தோற் கிடுகாகவுங் கொள்க. புறச்சேரிக் குடிநாப்பண் என்க. நிலவு வெண்மணலுக்கும் இருள் வலைக்கு முவமை. "பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லாது" என்றலால் வலை ஈரம் புலர்தல் கூறினார். வீழ்த்தாழை என்றது வீழ்த் தாழையாகிய தெங்கை விலக்கற்கு. தாழ்ந்த—தங்கி வளர்ந்த.

வெண்கூதாளம்—வெண்தாளி. தண் பூங் கோதையர்—தண்ணிய பூவாலாகிய மாலையினர்; இவர் பரதவர். தடம்பும் மண மும் பெருகுதற்குத் தாழை தாளிற்றங்கி வளர்தல் வேண்டினார்.

86—90. சினைச் சுறவின் கோடு நட்டு—சினையுடைய சுறவின் கோடு நாட்டி. மனைச் சேர்த்திய வல்லணங்கினோன்—அக்கோட்டை இருப்பிடமாய்ச் சேர்த்தியதனால் விளங்கும் வலிய வருண தேவதை யால். மனை—ஈண்டுத் தெய்வமுறையுமிடம். கோட்டை நட்டு, அந் நட்ட கோட்டையே அத்தெய்வத்திற் கிருப்பிடமாக வேற்று தலான், இவ்வாறு கடவிடங் கொண்ட வருணனை மனைச்சேர்த்திய வருமை குறித்து மனைச்சேர்த்திய வல்லணங்கினோன் என்றார். இதனை வல்லணங்காகிய வருணனைக் கோடு நட்டு மனைச்சேர்த்தியத னோன் என்றதாகக் கொள்க.

மடற்றாழை மலர் மலைந்தும்—தாழையின் மடன் மலர் சூடி யும். பிணர்ப் பெண்ணைப் பிழி மாந்தியும்—சருச்சரைப் பனையின் கள்ளைக் குடித்தும். மடன் மலரும் பிழியும் அணங்கிற்குச் சூட்டி யனவும் படைத்தனவுமாகும். எண்ணெயாடாமையிற் புல்லென்ற தலைமயிரினையுடைய பரதவர்.

91—95. பைந்தழைமாமகளிரொடு—பசிய நெய்தற்றழையுடையை யுடைய மாமை நிற மகளிருடன் உண்டு ஆடியும் என்க.

பாயிரும் பனிக்கடல்—பரந்த கரிய நடுக்கஞ் செய்யுங்கடலில்; வேட்டஞ் செல்லாது—மீன் வேட்டஞ் செல்லாது.

உவவு மடிந்து—உவாப்பொழுதில் வினை புரியாதிருந்து. உவாவிற் கடல் மிகப் பொங்குமாதலின் பாயிரும் பனிக்கடல் என்றார். செல்லாமைக்குக் காரணமும் உடன் கூறினாராவர். புலவு நாறு மணலையும் பூ நாறச் செய்யுங்கழிக்கானல் என்க. புலவிற்கு மேற்பூக்கூறியதனால் இதுவே கருத்தென்க. பரதவரும் மகளிரும் மலிந்து மாந்தி உண்டாடுதலானும் புலவு நாறுது பூ நாறுதல் கருதலாம் என்க. உரைகாரர் கொண்மூப் போலவும், குழவி போலவும் எனக் கூறியவற்றைக் காவிரி கடலொடு கலத்தற்கே உவமையாக்கினார். அவர் கருத்துப்படி கடல் மலையாகவும் தாய் முலையாகவும் அதனையணைந்து தழுவிய கொண்மூவும் குழவியுங் காவிரியாறாகவுங் கொள்ள நிற்றல் காண்க. மாமலை யணைந்த கொண்மூ—இது கரிய உயர்ந்த திரையின் மீதே சிவந்தயாற்று நீர் பரத்தற்குவமையெனவும், தாய்முலை தழுவிய குழவி இஃதொன்று படுதற்குவமையென்றும் விளக்கினார். அவர் யாற்றுக்குக் கடலைத் தாய்முலையாக்கக் கருதுதல் புலனாம். இவ்வாறு துணிதற்கண் கொண்மூசெவ்வானம் ஆதல் வேண்டுவது. செங்கலுழிக் காவிரிப் பேராற்றிற்கு அஃது உவமையாதலின் அவ்வாறு கூறினார். யாற்றைத் தாய் முலையாகப் பாடுதல் கேட்கப் படுவதல்லது கடலை அங்ஙனங் கூறுதல் வழக்கோவென ஐயமுண்டாவது.

> "புனிறுதீர் குழவிக் கிலிற்று முலைபோலச் சுரந்தகாவிரி
> (புறம். 68)

எனச் சான்றோர் வழங்குதல் காண்க.

> "வாழி யவன்றன் வளநாடு
> மகவாய் வளர்க்குந் தாயாகி
> யூழி யுய்க்கும் பேருதவி
> யொழியாய் வாழி காவேரி" (சிலப். கானல். 27)

எனவும், சிந்தாமணியுட் டிருத்தக்கதேவர்,

> "சரையெனும் பெயருடைத் தடங்கொள் வெம்முலைக்
> குரைபுனற் கன்னி" (நாமகள். 10)

எனவும், கம்பநாடர்,

> "சாயு மென்பது தாய்முலை யன்னது" (ஆற்றுப். 12)

எனவும் கூறுதலானு முண்மையுணர்க. இந்நல்லோர் கருத்திற் கியையக்கொள்ளின் இவ்வுவமைகள் காவிரி கடலொடு கலப்பதற்குக் கூறியனவாக எண்ணாது, இம் மக்கள் திரள் தீது நீங்கக் கடலாடியதற்கும் மாசு நீங்கக் காவிரிப்புனல் படிந்ததற்கும் உவமையாக வெழுந்தனவென நினையின் நன்கு பொருந்துதல் கண்டுணர்க. கடலாடுதல்

> "கழிய காவி குற்றுங் கடல
> வெண்டலைப் புணரி யாடியு நன்றே
> பிரிவி லாய முரியதொன் றயா" (குறுந். 144)

என்பது முதலியவற்றால் அறியப்படும். தீது நீங்கக் கடலாடுதல் ஆரியரொப்ப இந்நாட்டார்க்குந் தொன்மை வழக்கென்பது இதனாற்றெரியலாம்;

> "நீண்டதோள் மால்கிடந்த நீள்கடனீ ராடுவான்
> பூண்டநா ளெல்லாம் புகும்" (3-ம் திருவந்தாதி 69)

என்பதனையும் ஈண்டைக்கு நினைந்துகொள்க. முந்நீர் விழவு; கொண்டாடியவர் ("முந்நீர்விழவி னெடியோன்";புறநா. 9) தமிழரே யாதலுந் தெளிந்து கொள்க. மாமலையனைத்த கொண்மூப்போலப் பரதவர் மகளிரொடுகடலாடியும், தாய்முலை தழுவியகுழவி போலப் புனல் படிந்தும் என்று ஆசிரியர் கருதினரெனக்கொள்க. கொண்மூப் போலவுங் குழவி போலவும் கடலாடியும் புனல் படிந்தும் என நிரனிரையாய் இயைதல் காண்க. ஆசிரியர்,

> "புணரியொடு யாறு தலைமணக்குங்கூடல்"

என்ற தொடரிற்றலைவனோடு தலைவி மணந்து கூடுங்கூட்டத்தைக் குறிப்பானுணர்த்தலும் ஈண்டைக் கேற்ப நோக்குக. மாலையை

மேகம் படிந்து மூடுதல் போலக் கடலை மக்கள் படிந்து மூடுதலான் மலையுங் கொண்மூவும் உவமை கூறினர். போலவும் போலவும் என்பன உவமானங்களை யெண்ணியன. ஆடியும் ஆடியும் என்பன உவமேயங்களை யெண்ணியன. தாய்முலையைப் பிரிந்து தழுவாத குழவி அதனைக்கண்டு தழுவியது போலக் காவிரியைப் பிரிந்து கடலிற்படிந்த இம் மக்கட்டொகுதிகள், தம் தாயாகிய பூமிதேவிக்கு முலையாகிய காவிரியை நண்ணி அன்புடன் தழுவியதென்பது கருத்த இவ்வாறு கூறினாராகக் கொள்க. முலைப்பாலைக் காவிரிப் புனலாகக் குறித்தாரென்று நினைக்க. ஈண்டு நல்லது கொள்க. இங்கு உரை யாசிரியரே கடலைக் கணவனாகக் குறித்திருப்பதுங் காண்க.

தீது—பாவம்; மாசு—அழுக்கு. காவிரி சங்கமம் புண்ணிய தீர்த்தமாதல் அருச்சுனன் தீர்த்த யாத்திரையினுங் கண்டது. ஓதத்தொலிகூடல்-ஓதத்தால் ஒலிக்கின்ற சங்கமம். கூடற் பெருந் துறையென்ன வியையும்.

101—105. அலவனாட்டியும்—ஞெண்டினையலைத்தும். உரவுத் திரையுழக்கியும்—வலிய அலையைக் குதித்து காலால் உழக்கியும். பாவை சூழ்ந்தும்—சாய்க்கோரையிற் பாவையை ஆராய்ந்தும்.

"தெற்றிப் பாவை திணிமணமயருமென்றோள் மகளிர்"
(புறம். 283)

என்புழிப் போல மணலில் வகுத்த பாவையுமாம். பாவையைஆ ஆராய்ந்து வகுத்தலாற் சூழ்தல் கூறினார். பல்பொறி—ஐம்பொறி; ஐம்பொறிகளும் ஒரு சேரமருள்தல் நோக்கு.

மருண்டும்—நிலைதடுமாறியும், இன்பமே துய்த்தலால் துறந்த மேய்க்கும் பெருந்துறை என்றார்.

"பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறை"

எனப் பெரும்பாணாற்றினும் இவரே கூறினர். கடலாடித் தீது நீங்கினர் குழீஇயதனானுங்கூறினர். பாவிகள் பெறுதற்

கரிய தொல்லைச் சிறப்புடைய துறக்கம் என்க. பெருந்துறைக் கண் என்க. பகல் விளையாடி என்றதனால் இதற்கு முற்பட்டன பகற் செய்தி எனவும், இனி வருவன இராச் செய்தியெனவும் கொள்ள வைத்தார். இங்ஙனங்கொள்ளாது மேல்வரும் மாடத்தை 106-ஆம் அடிக்கு எடுத்து மாட்டித் துறக்கம் ஏய்க்கும் மாடத்துத் துணைப்புணர்ந்த மடமங்கையர் என்றுரைகாரர் கொண்டார். திமிற் பரதவர் குரூஉச்சுடரெண்ணி விடிவோரை தெரிதற்கே அவை பயன்படுவனவன்றி வேறில்லை என்க.

"பொய்யா மரபிற் பூமலி பெருந்துறை"

என்றது வழிபடுவார்க்குப் பயனுற் பொய்யாத முறைமை யினையுடைமையால் அவரிடும் பூமலிந்த பெருந்துறை எ-று. பெருந்துறைக்கண் புணர்ந்த மங்கையர் பொறி மருண்டு தாம் (106—110) களைந்த பட்டினை உடுப்பது நீக்கி ஆடவர்க்குரிய துகிலினையுடுத்தும் என்க. தமக்கினிதாகியமட்டினை நீக்கி ஆடவர் பருகிச் செருக்குதற்குரிய மதுவைப் பருகி மயங்கியும்.

மகிழ்ச்சி—கள் மகிழ்ச்சி. மைந்தர் கண்ணி மகளிர் சூடவு மென்றதனால் இவ்வாறு கூறுதலே ஆசிரியர் கருத்தென்க. கண்ணி யென்றதற்கேற்பச் சூடவும் என்றார். மகளிர் கோதை மைந்தர் மலையவும் என்றதூஉம் இக்கருத்தே வலியுறுத்தும். உவவுமடிந்து (111—114) பனிக்கடல் வேட்டஞ்செல்லாது என்று மேற் சொல்லியவர் ஈண்டுக் கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுடர் எண்ணு தல் கூறினர். உவவுக்கடல் என அஞ்சாமற் கரையிற்றெய்வம் பேணியதுணிவால் அவ்விரவினுந் திமிலேறி வேட்டஞ் சென்றார் சிலருண்டென்பது தெரிய;

"பெருந்திரை முழக்கமொ டியக்கவந் திருந்த
கொண்ட லிரவி னிருங்கடன் மடுத்த
கொழுமீன் கொள்பவ ரிருணீங் கொண்சுடர்" (அகம். 100)

என அகப்பாட்டினுள் வருதலானுணர்க. இதனானே கொடுமை கொடுத்துக் கொடுந்திமிற் பரதவர் என்றார், என்பதும் ஒன்று.

"கொடுந்திமிற் பரதவர் வேட்டம் வாய்த்தென" (அகம். 70)

என்புழியுங் காண்க. திமில்—மீன்பிடி படவு. கொடும் பரதவர்—இவர் சுடரெண்ணுதல், தாம்புகுதற்குரிய திசையிஃதெனத் தெரிந்தெண்ணுதலுமாம். கரைக்கணுள்ளார் "பாடலோர்த்தும்"; பாடல் நுணுக்கம் அறிந்தின்புற வேண்டுதலின் "ஓர்த்தும்" என்றார்; நயப்பிற்குக் காரணமான பல்வகைச் சுவையும் நாடகம் உடையதென்று கருதி. பாடலை முற்கூறினார், விளியாதான் கூத்தாட்டுக் காண்டல் விலக்கப்படுதல் நோக்கி. மக்களாக்கியன இவையன்றித் தெய்வந்தந்த பேறாகிய வெள்ளிய நிலாவின் இன்பப் பயனையுண்டும் என்க. துய்த்தும் என்பதனால் இயற்கையழகு வாரியுண்ணத்தக்கதென்று தெரியக் கூறினார். கரும் பெருங்கடலும் பெருமணலுலகும் இவையிரண்டையும் தன் குளிர்ந்த அமிர்த கிரணங்களாற் றாய்தாக்க, இருளில் அவ்விருள் கெடத்தோன்றிய திங்களஞ் செல்வன் எல்லாவற்றையும் வெள்ளையாகச் செய்தலான் வெண்ணிலவென்றார்.

115—120. இது முதற் பட்டினப்பாக்கங் கூறுகின்றார்.

கண் அடைஇய கடைக்கங்குல்—கண்ணடைத்த கங்குற் கடையாமம். அளபெடையாதலின் வலி மிகாதாயிற்று. எ—று. தாம் இவ்வின்பங்களாற் றுயிலுதற்கு மனமில்லையாகவும் கண் சோர்வினாலடைத்தல் குறித்தார். மாஅக்காவிரி—பெருங் காவிரி; மகத்தான காவிரியுமாம். தூஉவெக்கர் என்னும் எதுகைக்கியைய மாஅகாவிரி என வந்தது. மணங்கூட்டுந் தூஉவெக்கர்—கமழ் மணம் பலவுங்கூட்டி நாறுந் தூய எக்கர் என்க. இவை மணற் குன்றுகள்.

"மணங்கமழ் மறுகின் மணற்பெருங் குன்றே"
(அகம். 181)

எனப் புகார்க்கட் கூறப்படுதல் காண்க.

துயின் மடிதல்—துயிலால் வினையின்றிவதிதல். இறைவர் பொருள் காக்குந் தொழில் மாக்கள் இரவெல்லாம் விழித்தலாற் கடைக் கங்குலிற் கண்ணடைக்கப்பட்டுத் தூவெக்கரிற் றுயின்

மடிதல் கூறினர். இவர் துயின் மடிந்தபோது இதற்கு முன்னர்த் துயின்றவர் விழித்துக்காப்பர் போலும். வால் இணர் மடல் தாழை—வெள்ளிய அரும்பின் மடலையுடைய தாழை. தாழை மலரும் பூவுடைய தன்மையறிக. குவிந்த பூவுடையது. தாழையை யுடைய வேலாழி என்க. வேலா ஆழி—கரைக்கடல். நல்லிறை வன் என்றார்; அத்தகையான் பொருள் காத்தற்குச் சிறப்புண் டென்று தெரிய.

121—125. தொல்லிசைத் தொழின் மாக்கள்—தந்தொழி லான் மரபுபற்றி வந்த பழைய கீர்த்தியையுடைய மாந்தர். மாக்கள் என்றார் தந் தொழிலல்லது வேறு கல்லாமையான். இவரைக் கதிர்ச் செல்வன் பூண்ட மாவிற்குவமை கூறினர் காலும் அசைவின்றித் திரிதல்பற்றி. இதனாற் கதிர்ச் செல்வனாக இப் பாட்டுடைய நல்லிறைவனைக் கருதுதல் புலனும்; இச் சோழன் சூரியகுல மாதலு நினைக்க.

"ஞாயிறு விசும்பிவர்ந் தன்ன செம்பியர் மருகன்"
(புறம். 228)

எனவும்,

"ஞாயிறு காணு திடும்பைகொள் பருவரறீர
(புறம். 174)

எனவும் வருமிடங்களில் இக் கிள்ளிவளவனையே ஞாயிற்றோடு வமித்தலான் உண்மையுணர்க. காய் சினத்த கதிர்ச்செல்வனோடு வமித்தலான் இவனுங் காய் சினத்தவனே வென்றறைய முறைமைக்கு அவன்கணுள்ள கதிரே (ஒளியே) உடையனென்று கொள்ள நல்லிறைவன் என்றார். இறைவனுக்குரியவாய் வேலாழியின் ஒருவிற் கடலினின்று போந்து மரக்கலமேற வேண்டிக்கிடத்த லான் காத்தல் இன்றியமையாததாயிற்று. காய்சினத்த என்னும் அடை நல்லிறைவற்கும் பொருந்தும் என்று கொண்டு சிலேடை யாற் காயப்பட்ட சினத்தையுடைய இறைவனெனினுமமையும். இதனைக் காய்சின வழுதி என்னும் பெயர் போலக் கொள்க. சினங்காய் வழுதி என்று பொருளாதல் காண்க. பெரியாரும்

"காய்சினவேந்தே" (திருவாய்.) எனப்பாடுதல் காண்க. சடகோபன் என்னும் பெயரும் இவ்வாறு வந்ததொன்றாம். கதிர்ச்செல்வனுக்குத் தேர் கூறுதல் வடநூலார்க்கும் ஒக்கும். அத்தேரை ஈர்ப்பன என்பதும் அவர்க்கு ஒக்கும்.

உல்கு செயக் குறைபடாது—அரசிற்குரிய சுங்கத்தைத் தகச் செய்தலாற் பண்டங்கள் ஏற்றுதலும் இறக்குதலும் குறைபடாது என்க. இதனால் இவ்வாசிரியர் சுங்கத்தாற் பண்டங்கள் ஏற்றுமதி இறக்குமதி குறையுமென்று நன்கு தெளிந்தனராவர்; அங்ஙனம் உண்டாகுங் குறையீண்டில்லையென்று பண்ட மிகுதி குறித்தார். குறையாமல் வருதற்குப்பெய்யும் பருவமாரியை உவமை கூறினார். பருவமாரி போலப் பொழியவும் கடற்பரப்பவும் என்க.

126—130. பொருள்கள் கடலினின்று மலையினும் மலையினின்று கடலினும் ஏறிச் சேறலான் வான்முகந்தநீர் மலைப்பொழியவும், மலைப் பொழிந்த நீர் கடற் பரப்பவும், பெய்யும் பருவ மாரி போல என்று எடுத்து விளக்கினார். வான்முகந்தநீர் என்பது கடலினின்று வானம்முகந்தநீர் என்று பொருளாதல் தெள்ளிது. நீரினின்று நிலத்தேற்றவும் என்புழி நிலம் மலைநிலன்வரையுங் கொள்க.

"கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும்" (புறம். 60)

என்பதனாலறிக. நிலத்தினின்று என்பதற்கும் மலை முதலிய நிலங் (131—135) களினின்று என்று கொள்க. பல பண்டமாதலின் அளந்தறியாமை கூறினார்.

அளவு—பொருளளவு.

வரம்பறியாமை — காலவரம்பறியாமல் இடவரம்பு கூறின் வந்தீண்டி என்றதற்கு மாறாகும். இடவரம்பறியாமற் றடுமாற வந்தீண்டி என்பது கருத்தாயின் அமையும். அருங்கடி என்பது திண்ணிலைக்கதவம் முதலியவற்றைக் குறிக்கும்.

பெருங்காப்பு—பலர்நின்று காப்பது குறித்தது.

இனி வலியுடை வல்அணங்கின் நோன்புலி யென்றியைப்பர் உரையாளர். அவர் கருத்துப்படி பொறித்த அச்சுப்புலிக்கு அடையாகும் அவை. அருங்கடிப் பெருங்காப்பின்கண் வலியுடைய வல்வருத்தமுள்ளவன் என்பது பொருந்தும். காப்பிற்கேற்ற வலியுடைமையும் அதனை அசைவின்றிப் புரிதலான் வல்வருத்த முடைமையும் வேண்டினர். வல்லணங்கினோன் என்பது செய்யுளாதலின் வல்லணங்கினோன் என வந்தது. இவன் புலி பொறித்தவனாகக் கொள்க. அளவறியாவரம்பறியாப் பலபண்டங்கட்குப் புலி பொறித்தலானும் பல் வருத்த முடைமை கூறலாம் என்க.

புலிபொறித்துப் புறம்போக்கி—இடந்தடுமாறுதலாற் பல பண்டங்களைக் காப்பின் புறம்போக்கி வைத்தனர் என்றும், அங்ஙனம் புறம்போக்கிய பண்டங்கட்கு நல்லிறைவன் புலி பொறித்ததே காவலாக அமையுமென்றுங் குறித்தனர்.

136—140. இம்மூடைகளே வெளியிற் கிடத்தல் இப்பண்ட மலையில் ஞமலியுந்தகரும் ஏறி விளையாடுதல் கூறுதலானறிக. புலிப் பொறியாதலால் ஞமலியுந்தகரும் அஞ்சாவாயின. மதிநிறைந்த—மதித்தல் நிறைந்த; இறக்குமதி ஏற்றுமதிக்கு நிறைந்த எனினு மமையும். மதி உடன்பாடென்று கொண்டு இறக்கவும் ஏற்றவுங் கூடாதென்று தள்ளிய பண்டங்களை விலக்குவதெனினும் இனிதமையும். அரசர் சுங்கத்தலத்தில் உடன்படுதலான் அவை பண்டமாக மதிதல் கருதி மதி பண்டமென்றார். மூடைப்போர்-மூடையடுக்கிய குவியல்.

மால்வரைக்கவான்—கரிய மலைப் பக்கம். வரையாடுவருடை—வரைகளில் விளையாடும் ஓர்வகை மான். இதனை,

> "இருடேங் கிறுவரை யூர்பிழி பாடும்
> வருடை மான் குழவிய" (குறிஞ்சிக். 7)

> "வழைவளர் சாரல் வருடை நன்மான்" (ஷை 14)

என்ற வரிகளான் அறிக. இஃது எண்காலதென்பர். என்

காலதென்பது எளிதிற் பற்றுதற்குரிய காலென்னிற் பொருந்தும். புலவர் மரபு போலும்.

"ஏரைவாழ் வருடை வன்றலை மாத்தகர்" (503)

என்னும் மலைபடு கடாத்துரையினும்,

"மாவு மாக்களு மையறி வினவே" (தொல். மரபியல்)

என்பதற்குப் பேராசிரியர் உரையினும் நோக்கிக்கொள்க. கூருகிர்க் கொடுந்தாள் ஏழகவியேற்றையென்க. ஏழகவியேற்றை ஆண்டு காவற்கு வளர்க்கப்படுவது. ஏழகவியேற்றை வருடைத் தோற்றம் போலத் தகரோடுகளுழுன்றில்.

141—145. மேழகத்தகர் முன்னே வந்தது. தகர், வென்றிக்கு வளர்ப்பனவாகும், முன்றிற் படிக்கால் என்க. படிக்கால்—ஏணி. அடுத்தடுத்துத் தொடுக்கப்பட்ட நீளமான ஏணி. எவ்வுயரமும் ஏறுதற்கு நெடுமையும், ஏறுவார் கால் வைத்தற்குக் குறுந்தொடையும் ஏணிக்கு வேண்டினர். படிக்கால் சார்த்தி யேற வேண்டிய திண்ணை.

கொடுந்திண்ணை — சுற்றுத்திண்ணை யென்பர். வளைந்த திண்ணையுமாம்.

வேலாழி வியன்றெரு முன்றில். மழைதோயும் நெடுமாடமாதலால் நெடும் படிக்கால் வைத்தேறுதல் கூறினர். கடற்கரைத் தெரு மாடமாதலின் மழை தோய்தல் கூறினர். பன்றலைப்பு—பலதடுப்பு. இவர் இவர் இவ்வளவில் வரலாமென்னும் முறைமைபற்றிப் பல தடுப்புக் கூறினர். இவை மாளிகையிற் பல கட்டணமாகும். (பதிற். 64-7). புழைவாயிற் போகிடைகழி-சிறு திறப்பும் பெருதிறப்புமுடைய நீண்ட இடைகழி. புழையை இக்காலத்துத் திட்டிவாயில் என்ப. (146-150). பொருநாற்றிற் பெண்பாலைக் கேசாதியாகக் கூறினர். இவ்வாசிரியர் சேவடியென்று தொடங்கிப்பாதாதியாகக் கூறினர். அடிக்குச் செம்மையும், குறங்கிற்குச் செறிவும், அல்குற்குப் பெருமையும், மேனிக்குத் துகிர் நிறமும், இயலுக்கு மயிலும், நோக்கிற்கு மானோக்கும்

மதலைக்குக் கிளி மழலையும், சாயற்கு மென்மையும் வேண்டுதல் காண்க. அல்குற் றாசுடைத் துகிர்மேனி என்பதனால் அல்குலைப் பாசிழை மேகலையாலணிந்து அதன்மேற் றுகிலையிட்டு மறைப்பது பண்டை வழக்கென்பது தெரியலாம். இவ்வாசிரியரே பெரும் பாணாற்றில்,

> "கொன்றை மென்சினை பனிதவழ் பவைபோல்
> பைங்கா ழல்குல் நுண்டுகி னுடங்க"

என்று கூறுதலானுணர்க.

> "மட்டொளித் தண்ணு மாந்தர்மாண்புபோன் மறைந்தவண்ணப்
> பட்டொளித் தொழிய வல்குற் பசுங்கதிர்க் கலாபந்தோன்ற"
> (இலக்கணை. 156)

எனச் சிந்தாமணியின் வருதலானும் இவ்வழக்கம் உணரலாம்.

151—155. வளிநுழையும் வாய்—காலதர். சாளரமென்ப. இதனால் மென்சாயலோர், காற்றின் பயன்றுய்க்கச் சாளர வாயிலில் இருத்தல் கூறினார். பிறரை நோக்குதற்கில்லையென்பது குறிப்பு. வெறியாடு மகளிரொடு செவ்வேளை முன்கையாற் கூப்புதலான் அக்கடவுட்கினிய வரைக் காந்தளந்துடுப்பிற் கவிகுலையை உவமையாக்கினார். காந்தள்—முருகக்கடவுட்கடையாளப்பூ. செவ்வேளை முன்கை கூப்புதலானிவர் கன்னியராதல் தெள்ளிது. காந்தள் துடுப்பினுதல் பல்லிடத்துங் கூறுதலாற் காந்தட்பூத் துடுப்புப் போறல் அறியலாம். "பலதுடுப்பெடுத்த அலங்குகுலைக் காந்தள்" (அகம். 108). காந்தளாகிய துடுப்பு என்பதனால் இஃது அடுத்து வரலுவமமாகாமை நினைந்தனர். பிரிவறியாப் பருவத்தாராதலின் செறிதொடி கூறினார். முன்கை கூப்பி வெறியாடு மகளிரொடு—வள்ளிக் கூத்தாடும் மகளிரொடு நெருங்க இடைத்தாவிச் சென்று

156—163. இனி அவ்வாச்சியங்கட் கேற்ற ஒலித்தல் வினையாற் கூறுதற் காண்க. குழலும் யாழுமென்னும் இரண்டிசைக்கருவிக்கும் இரண்டு தோற்கருவி வேண்டி முழவும் முரசுங்கூறினார் போலும். குழலுக்கு முரசும் யாழிற்கு முழவுங் கருதினர் போலும். இயம்பா நிற்க விழவறு ஆவணம் என்க. விழவறுமைக் கேற்ப இடனகலம்

வேண்டி வியலாவணம் என்றார். ஆவணத்துப்பலர் தொழுகொடி யும் என்க. செவ்வேள் வெறியாடுதலால் விழவரு ஆவணத்துத் தெய்வஞ் சேர்த்திய கொடி என்றவிடத்து இத்தெய்வம் செவ் வேளே ஆம் என நினைத்தல் தகுவது. வாணிகத் தொழில் நிகழும் ஆவணத்தில் இக்கடவுளை வைத்தல், செட்டி என்று வழங்குதல் கருதியே என ஊகித்தலாகும். இக்காலத்தும் புகார் வணிகர் வழியினரென்று சொல்லப்படும் நகரத்தாராகிய வணிககுல மக்கள் தாம் வாணிகத் தொழில்புரியும் ஊரெல்லாம் இத்தெய்வவழி பாட்டை மிகுத்துப் புரிதலும் ஈண்டைக்கு நினைக்க. மையறுசிறப்பு —குற்றமற்ற தலைமை. ஈண்டுப்பலர் தொழுகொடி என்பது கொண்டு உரையாளர் தெய்வம் பல தெய்வங்களாகக் கருதினர். இவ்வாசிரியர் தெய்வக் கொடியென்றே கூறி மக்கட்குரிய கொடி பலவுங் கூறுதலான் அஃதாசிரியர் கருத்தாமோ என ஐயுற வேண்டியுள்ளது. பலர் தொழுகொடி என்பது பலருந் தொழுதற் குரிய ஒரு கொடியெனப் பொருள் செய்தலே சிறந்தது. தெய்வஞ் சேர்த்திய வாயிற்கொடி யாதலால் பலர் தொழுதல் கூறினார் என்க. நெய்தல் நிலத்துப் வெறியயர்தல் கூறுவது,

> "நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
> வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்" (53)

என்னும் குறுந்தொகையா னுணர்க. கொடி நிலையும் கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருதல், தொல்காப்பியத்திற் "கொடிநிலை கந்தழி" என்புழிக்காண்க.

இனி, "மையறு சிறப்பிற்றெய்வம்" — மறியறுத்தற்குரிய சிறப்பினையுடைய தெய்வமுருகன் என்பதும் ஒன்று. "நெடு வேளணங்குறு மகளிராடுங்களம்" என்னும் மலைபடுகடாத்தில் "முருகனால் வருத்தமுற்ற மகளிர்க்கு மறியறுத்தாடுங் களத்தில்" என நச்சினார்க்கினியர் உரைத்ததானறிக.

> "சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
> வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
> யூரூர் கொண்ட சீர்கெழு விழவினும்"

என முருகாற்றுப்படையில் வருதலானும் இவ்விழவு முருகன் விழவாதல் உணர்க. தெய்வத்திற்கிடும் பலியாதலின் மையறுத்தல் குற்றமாகாது சிறப்பாயிற்றென்க. "சிறப்பொடு பூசனை" (குறள்) என்புழிப்போலச் சிறப்பு ஈண்டு நைமித்தக மெனினும் அமையும். சிறப்பு தலைமைக்கு மாதல் முருகக்கடவுளைப் பரிபாடலிற் "சிறப் போய்" என அழைத்தலானறிக. இவற்றால் இத்தெய்வம் பல தெய்வங்களாகாமைகண்டு கொள்க. பலர் தொழுகொடி என்றது "கொடிநிலை—கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே" (தொல் புறத்) என்பதனாற் கொடிநிலையுந் தொழப்படுதல் குறித்தது. பதுமைக்காஞ்சியில் "உருவப்பல்கொடி" என்பது பற்றிப் பல தெய்வங்களுடைய கொடியென்று உரைகாரர் கொண்டார். நல்லது கொள்க.

164—171 இத் தெய்வக் கொடியின் பின் தெய்வம் போல வழிபடுதற்குரிய வீரர்கொடி கூறுகின்றார். கூழுடைக் கொழு மஞ்சிகை—சோறுடைய கொழுவிய கூடை. தாழுடைத் தண் பண்ணியம்—தங்க விரித்த உடையிற் பரப்பிய குளிர்ந்த பண்ணி யங்கள்; படைத்து நெடும்போதாயினமையாற் றட்பங்கூறினார். பணியம்—பண்ணியம். கூடையிற் சோறும் விரித்த புடைவையிற் பண்ணியங்களும் படைத்து வாலரிசிப் பலி சிதறுதல் கூறுவர். "பல்பிரப்பிரீஇ" (முருகாறு) என்புழிப் பல பிரப்பரிசி கூடையு மாம்" என்றலாற் கூழுடைக்கொழு மஞ்சிகை இன்னதென் றுணர்க. வாலரிசிப் பலி—வெள்ளிய [illegible] பானின் கூடுத்தற்குக் காரணமாகப் [illegible] இடங்களில் வெற்றியைப் [illegible] கோல்நட்டு ஊன்றிய தூக்கின் மேலிட்ட கொடியும் என்க.

> காழ் வேழ்காம் பாவது "வேலே—யிருங்
> காழொடு மடை கலங்கி"

என வருதலானறிக. (புறம். 97)

"கிடுகுநிரைத் தெஃகூன்றி நடுகல்லி னரண்போல" என மேலே கூறினாராதலானிதனை யுணர்க. அவை விறலுக்கும் வெற்றிக்கும்

எடுத்த கொடிகளென்க. இக் கொடிகள் அரசர் நகரங்களினும் கடை வீதிகளினும் உண்மை, மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியிற் கூறியன கொண்டு துணியலாம். ஆண்டு இந்நூலிற் கூறியவற்றோடு பெரிதும் பொருந்தவே,

"ஓவுக்கண் டன்ன விருபெரு நியமித்துச்
சாறயர்ந் தெடுத்த வுருவப் பல்கொடி
வேறுபல் பெயர வாரெயில் கொளக்கொள
நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி
நீரொலித் தன்ன நிலவுவேற் றானையொடு,
புலவுப்படக் கொன்று மிடைதோ லோட்டிப்
புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி
கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல
பல்வேறு குரூஉக்கொடி பதாகை நிலைஇ" (மதுரைக். 365-73)

என வருதலானுண்மை யுணர்க. முருகாற்றினும் "செருப்புகன்றெடுத்த" (66—67) வெற்றிக்கொடி கூடலங்காடித் தெருவினுண்மை கூறுதல் உணர்க. மற்றைக் கொடி நட்டகெல்லாம் தனில் கூறாது இக் கொடிக்கு மட்டுங் கூறியது நோக்கியும் பசுமெழுக்கிட்டுப் பெரும்படைப்புப் படைத்தல் நோக்கியும் இவ்விறற் கொடிகள் ஓரடையாளம் உளவாக வைத்து இவ்வாறு உரைக்கப்பட்டது.

"சிறவழிப்
படஞ்செய் பந்தர்க் கன்மிசை யதுவே" (புறம். 260)

என்புழி "புடைவையாற் செய்யப்பட்ட பந்தர்க்கீழ் நட்டகல் என்று கூறுதலான் உண்மையறிக.

"பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலூன்று பலகையின் வேற்றுமுனை கடுக்கும்" (அகம். 6)

என வருவதுகொண்டு இவ் வடிகட்குப் பொருளிஃதென்று தெளிக. காழூன்று கவிகிடுகே வேலூன்று பலகையெனப்பட்டதறிக. வீர சின்னமாகிய வேற்காம்புங் கிடுகும் நட்டுவைத்து அவற்றின் மேலே துகிற்பந்தரிட்டு அதன் மேலூன்றிய விறற்கொடி

யிஃதென்க. கிடுகு—தோற் கேடகம். கிடுகின்மேல் கரும்பின் பூப்போல் ஊன்றிய கொடிகளும். எ-று. இந் நடுகற்குப் பலியூட்டுதலும் தேறலுகுத்தலும் நறும் புகைகாட்டலும் நல்ல நாட்களில் நிகழுமென்பது,

“புடைநடு கல்லி னாட்பலி யூட்டி
நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇய
மங்குன் மாப்புகை மறுகுடன் கமழும்” (புறம். 329)

என்பதனாலறியலாம். இக்கொடிகள் பலவாதலின் கரும்பின் ஒண் பூப்போல வென்றார். வீர சுவர்க்கம்பெற்றுத் தேவராதலிற் றெய்வம்போலூன்றிய துகிற் கொடியைத் தெய்வத்திற் கெடுத்த கொடிக்கு அடுத்துக் கூறினார். இவற்றைப் பண்டவாணிகர் கொடி யென்று கருதுவர் உரைகாரர். அவர் அங்ஙனங் கருதியதற்குக் காரணம் திருத்தக்க தேவர் சிந்தாமணியுள் ஆவணவீதி வருணனையில்,

“பவளத் திண்காழ் கம்பலக் கிடுகினூன்றி.
அணிநில மெழுகி......தேங்கொளைபலி சிதறினரே” (சீ. 113)

எனக் கூறியதுகொண்டு எனத் துணியலாகும். அவ்வுரைக் கியையக் கூறின் கூழுடைக் கொழுமஞ்சிகைக்கும், தாழுடைத் தண் பணியத்திற்கும் காழூன்றிக் கிடுகின் மேலூன்றிய துகிற்கொடி என்று பொருள் சொல்க. தேவர் “கம்பலக்கிடுகு” என்றது கிடுகின் மேற்றுகில் எனப்பட்ட தெளிவுடைமையும். கண்டுக்கிடுகு நெடுஞ்சட்டமாகக் கொள்ளவையாது “கவிகிடுகு” என்றதாற் கவித்த மேற்றட்டியாகக் கொள்ளலாம். இவ்வடிகளைத் திருத்தக்க தேவர் கருத்திற்கு இயையக் கொள்வதோ மதுரைக் காஞ்சியுடை யார் கருத்திற்கியையக்கொள்வதோ அறிந்தோர் ஆராய்ந்து கொள்க. விறற்கொடியாயிற் கவிகிடுகு கவித்த கேடகம் என்க.

இவ்வாறு தெய்வமும் பழைமை யாதலின் இவற்றிற்கு ... பாடும் தம் நூலிலவாற் பிறர்க்கு வகுத்தறிவுறுத்தும் தொல்காப்பியர் நல்லாசிரியர் வாது குறித்தெழுந்த கொடியை இவற்றிற் கடுத்தோதி னார். உறழ்—வாது. தொல்லாணை—பழைமையான வேதத்திற்

கண்ட ஆணை வடிவாகிய விதிகள். ஆணை நல்லாசிரியர்—அவ்விதிகளை நன்று ஆசரித்தலான் ஆசிரியரெனச் சிறந்தோர். தொல்லாணையிஃதெனத் துணிதற்குப் பல கேள்வித்துறை போதல் வேண்டுவது குறித்தார். கேள்வித்துறை—சுருதி மார்க்கம் எனினுமமையும். வேதம் பலபல பாகுபாடுடைமையாற் பல கேள்வி என்றார். தொல்லாணை என்றதனால் இவ்வாணை ஆசிரியரதாகாமை நன்கறியலாம். உறழ்குறித்தெடுத்த வுருகெழுகொடி—வாது குறித்துயர்த்திய உட்குக் கெழீஇய கொடி. இது நாவலந் தீவு முழுதும் தாம் உறுதியாகத் துணிந்ததையே புரிதற்குத் தகுமென்பதற்கு இத் தீவத்தின் அடையாளமாகிய நாவலின் கிளையை நட்டு அதன்கண் எடுப்பதோர் வாதத்துவசம் என்க. அறை கூவுவார் நாவலோ நாவலென்பதும் "நாவலோ என்றழைக்கும் நாவோதை" என்பதும் "நாவலிட்டுழி தர்கின்றேம்" (திருமாலை) என்பதும் இதனடியாக எழுந்தனவேயாம். இதன் வரலாற்றை நீலகேசித் தெருட்டில் குண்டலகேசி வாதச் சருக்கத்தில்,

> "தண்டலைய பொழில்நாவற் சாகைநட்டுரை பெறுக்
> குண்டலகேசி"

எனவரும் பகுதியிற் கண்டுகொள்க. தறுகட்டெடுத்த நடுகற் கொடியினும் கல்விப் பெருமிதம்பற்றி யெடுத்த கொடியாதலின் உருகெழு கொடியென்று மிகுத்துக் கூறினர். இதனாற் பிற சமயத்தர் இந்நாட்டிற் புக்கு வாது புரிதல் உண்டென்று தெளிவித்தவாறும். நல்லாசிரியர் என்றதனால் இவரொடு வாது புரிவார் பொல்லாராதல் குறித்தார். பலவகை விசேடங்களானும் இதுவே ஆசிரியர் கருத்தெனத் துணிக.

172—175. இனி, இவற்றிற்குப் பின்னே வங்கத்தின் கூம்பேறிய கொடியைக் கூறுகின்றார். வங்கம் என்பது கடலிற் குறித்த கரையிற் சேறல், தெய்வத்தின் அருளும் மக்கள் நன்முயற்சியும் சேர்ந்த நிலையிலாதலின் அவ்விரண்டுங் கலந்து பயன்படுவ தொன்றினுள்ள கொடியைக் கூறினர் என்க. "செல்லா நல்லிசை யமரர் காப்பினீரின் வங்க" என மேல் இவரே கூறிக் காட்டுதலானும் உண்மையுணர்க. வருணன் வழிபாடு கேட்கப்படுதலானும்,

"வளி தொழிலாண்ட உரவோன்" (புறம். 6

என்பதனால் வாயுவை வேண்டிப் பயன்கொள்ளுதலானும் இக் கருத்து வலியுறுதல் காண்க. வெளில்—யானைகட்டுந்தறி.

அசைக்கும் களிறு நாவாயாகவும், வெளில் அந்நாவாய் பிணித்த மேலே கூறிய அணை முதலாகவுங் கொள்க. தீம்புகார்-யாறு கடலோடு புகுமிடத்துப் புகுதற்கு முன்னுள்ள திரைக் குறித்து. திரை-உவர்த்திரை. தூங்குநாவாய்-அசைகின்ற மரக்கலம். தூங்குதல் திரையான் என்று தோன்றவைத்தார். நாவாய் துவன்றிருக்கை என்றதனால் மக்களிருக்கும் நிலைமை தெரிக. நாவாய் துவன்றிருக்கை-இதனைக் கபவாயிருக்கை என்பர் அடிகள். மிசைக் கூம்பின் - கூம்பின்மிசை. நசைக்கொடி — எல்லாரும் விரும்புதலை யுடைய கொடி என்றது, அரசன் கொடியுடையானாயிட்டு விளங்குதலான் எல்லார்க்கும் விரும்புதலுடைமை குறித்தார். அரசர்க்கு விருப்பமான கொடியெனிற் பல தேய மரக்கலங்களைக் கொள்க. நாவாய் துவன்றிருக்கை மிசைக்கூம்பின் என்பதனாலும் இஃதுணரலாம். நாவாய் துவன்றிருக்கை - வங்கங்கள் விளங்கும் இருப்பு எ-று. ஓடாதபோது கடலிற் றங்குதற்குச் சமைத்த வங்க விருக்கையென்று கொள்க. இனி நெய்தனிலத்திற் கேற்ப மக்கள் கள் விலையிடத்துக் கொடி கூறுகின்றார்.

176—180. மீன் தடிந்து—கடன்மீனை வெட்டி. விடக்கு உறுத்து—பிறநிலத் துண்டற்குரிய விலங்குகளின் இறைச்சியை அறுத்து. இவ்விருவகை யூனையும் பொரித்தலால் எழும் ஒலியை யுடைய முற்றத்தினையும்; பலர் புகுமனைப் பலிப்புதவின்—மனைக் கட் டெய்வத்திற்குப் பலியிடுதற்குரிய வாயிற் கதவினையுமுடைய நறவு நொடைக்கொடி யென்க.

"செம்பூத் தூய செதுக்குடை முன்றிற்கள்"

என்பது பெரும்பாண். தெய்வத்திற்குச் செழும்பூத் தூவுதல் காண்க. முற்றத்து மனைவாயிற் கதவுக் கடுத்து நறவு நொடை (கள்விலை) செய்யுமிடத்து இக்கொடிகள் உள்ளன என்றவாறு. வாயில் நிலைதொறும் மலரொடு நெற்பலி புகுத்தல் மரபாதலிற் பலிப்புதவு என்றார்.

"லபங்கொடி நுடங்கும் பலர்புகு வாயிற்
செம்பூத் தூய செதுக்குடை முன்றிற்
கள்ளடு மகளிர்" (337—39)

எனப் பெரும்பாணாற்றிலும் வந்தது காண்க. இனி,

"மணங்குலைஇ மலர்சிதறிப்
பலர்புகு மனைநறவு" (பதிற்றுப்பத்து)

எனக் கொண்டு குடங்களின்மேற் சந்தன முதலிய மணங்களைப் பரப்பிப் பூக்களைச் சிதறுதலாற் பலர் புகுதற்குக் காரணமான மனையிலுள்ள நறவு என்று கூறினுமமையும்.

"பைந்தார் பூட்டிச் சாந்துபுறத் தெறிந்த
தசும்புதுளங் கிருக்கை" (பதிற் 42)

என வருதலா னுணர்க.

181—185. நறவு நொடைக் கொடி—கள்விற்கு மிடமென்று காட்டுங் கொடிகள். பிறபிறவு நனிவிரைஇ—பிறபிறவிலைக் கொடுத்தன மிகக் கலத்தல் குறித்தது. பல்வேறுருவிற் பதாகை—பலவாக வேறுபட்ட வடிவுகள் எழுதப்பட்ட பெருங்கொடிகள்.

நீழற் செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பின்-கொடிகளின் நிழலால் மேலே செல்லுங்கதிர் கீழே நுழையாத செழுமையை யுடைய நகரெல்லையி லென்க.

செல்லா நல்லிசை யமரர் காப்பின் — தம்மை வழிபட்டாரைத் தப்பாது காத்தலான் இசை தம்மைவிட்டுச் செல்லாத தேவர் காவலால். நீரின்வந்த-கடலின்கண் வந்த எ-று. நீர்-கடல்.

நிமிர்பரிப் புரவி-நிமிர்ந்து செல்லுஞ் செலவினையுடைய குதிரை. இதற்கு நிமிர்ந்த செலவு வேண்டுதல் காண்க. உயர்ந்த புரவியைப் பிறதேயத்தினின்றும் வேண்டிக் களிற்றை அங்ஙனம் வேண்டாமை யுணர்க. புரவியை வங்கத்தி னேற்றவும் இறக்கவும் இந்நாட்டார் தெரிந்தவராதல் நினைக்க. உயிருடைப் பொருள்களிற் சிறத்தலிற்

புரவி கூறினர். புரவிக்கு அமரர் காப்பு வேண்டியவர் கறிமூடைக்குக் காலின்வந்த எனக் கூறுதல் கண்டுணர்க. காற்று வேறுபட்டுப் பட்கு மூழ்கினும் ஓர் குறையர்கா தென்பதுபோலுங் கருத்து. அமரர் காப்பின் என்பதனை எல்லாவற்றிற்கும் கொள்ளுதல் பொருந்தும். 187—190. மலை—இமயத்தின் வேறாய் வடதிசை மலையென்று பெருங்கதையுட் கூறுதலான் மேரு என்பர். (1—58) பொன்னினும் மணி சிறத்தலின் முற்கூறினர். குடமலை-குடக்கணுள்ள சைய முதலிய மலைகள். இம்மலைகளில் சாந்தமும், அகிலும் உண்டாதல்,

> "சாந்தம் பூழிலொடு பொங்கு நுரைசுமந்து
> தென்கடன் முன்னிய வெண்டலைச் செம்புனல்
> ஒய்யு நீர்வழிக் கரும்பினும், பல்வேற்
> பொறையன் வல்லனு லளியே" (பதிற். 87)

எனச் சேரன் பாடப்படுதலா னறிக.

> "குட்டுவன் குடவரை" (நற்றிணை 105)

தென்கடல்—தெற்கட்பாண்டியர் கடல்.

குணகடற்றுகிர்—கீழ்க்கண் சோழர் கடற்பவளம். இதன்கட் சாந்தம் பூழில் என்பன ஆரமு மகிலுமாம். கங்கைவாரி—கங்கை நாட்டு வருவாய். காவிரிப்பயன்—காவிரியான் விளைந்த பயன்.

191—200. ஈழத்துளவும்—இலங்கையாகிய சிங்களத்துள்ளனவும். ஈழத்துள்ளன களிறும், களிறு வளர் காட்டின் வருவாயும். சில செயற்கைப் பொருளும் ஆம். ஈழந்துள என்பது ஈழத்துண என எழுதினர் பிழைப்பாகும் உணவுப் பொருள்கள் எக்காலத்தும் ஈழத்தினின்று நாவலந் தீவிற்கேற்றப்பட்டன வில்லையென்று கொள்க. இதனுண்மையைப் பெருங் கதையுட் கொங்குவேளிர்,

> " இலங்கை யீழத்துக் கலந்தரு செப்பு "

என்று ஒழிதலான் அறியலாம்.

காழகம்—அருமணநாடு. பெருங்கதையுட் "கடாரத்திரும்பொடு" (1—58) என வருதலான் இரும்பு காழகத்ததாகத் துணியலாம். ஆக்கம்—செல்வம். காழ்—பெருமரத் தம்பங்களாகக்கொண்டு இவற்றை யுடைமையாற் காழகமென அருமணத்திற்குத் தமிழர் வழங்கியிருக்கலாம். இதனுக்கம் — இப்பெருந் தம்பங்களுமாம். அரியவும்—வலம்புரி போன்ற அரியவையும்; பெரியவும்-ஒளியினும் உருவினும் பெரிய களிறுபோற் பெரியனவுமாம். நெரிய—இடநெருக்கத்தாற் சில பொருள்கள் தம்முள் உடைந்துபோக என்க.

"கானற் பாணி கனக விசயர்த
முடித்தலை நெரித்தது"

(சிலப். நீர்ப்படை 50, 51)

என வருவது கொண்டு தெளிக. நெரிதற்கு ஆகாதன என்பார் அரியவும் பெரியவும் என்றார். மற்று அவையும் நெரிய என்றது அரிய பெரிய பொருள்கள் மிகப் பலவாக வந்தீண்டலைக் குறித்தது. இவ்வகை வளங்கள் இடங்கலந்து கிடக்கும் அகன்ற இடனுடைய மறுகின் என்க. தலைமயங்கிய என்பதற்கு உரைகாரர் தலை தெரியாத என வுரைத்தார். "வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு" என்னும் இந்திரவிழவூரெடுத்த காதைபகுதிக்கு அடியார்க்கு நல்லார் "வளம் தம்மிடம் தொறும் மயங்கப்பட்ட அகன்றவிடத்தையுடைய இடபகன்ற மறுகுகள்" என்றார். ஏற்பது கொள்க. காவிரிப்பயனை ஏற்றுமதிப்பண்டமாகவும் பிறவெல்லாவற்றையும் இறக்குமதிப்பண்டமாகவும் கொள்க. காவிரிப்பயன்-நெல். நெல் லுடைய சோழர் நீர்நாடர் கோ"

(யாப். விருத். மேற்கோள்)

சோழர் வெண்ணெல் வைப்பினன்னாடு (அகம். 96) என்ப. இந் நெல் லொன்றற்கு இப்பிறவெல்லாம் இறங்குதல் கூறி அவ்வுணவின் உயர்பு குறித்தார். நீர் நாப்பண் ஏமாப்ப இனிது துஞ்சிக்கிளை கலித்துப் பகை பேணாது வலைஞர் முன்றின் மீன்பிறழவும் என்க. நீரின் நடுவண் இன்புற இனிது தங்கிக் கிளையுடனே செருக்கி வலையாகிய பகையைக் கருதாது அவ்வலை படைத்தார் முற்றத்திலே மீன் பிறழ்ந்து துள்ளவும் எ—று. "மீன் கண்டுஞ்சும் பொழுதும்"

என்னும் நற்றிணை (319) பற்றி மீன் தயின்று எனினுமமையும். நிலத்தின்மேல் ஏமாப்ப இனிது ஆக்கிக்கிளை களித்தாய் பேணுது விலைஞர் குரம்பை மாவின்பமும் என்க. நிலத்தின் மேற்றங்கித் தமக்குப் பகையாகக் கருதாது தம் இறைச்சிக்கு விலை கொடுப்பார் குடியிலே விலங்குகள் திரளவும் என்க. வலைஞர்---மீன் பிடிக்கும் வலை படைத்தவர். விலைஞர்—ஊன் விற்பார் ஊனை வேண்டி விலை நல்கு மவருமாம்.

"விலைபடைத்தா ரூன்வேண்ட வவ்விலை தான்வேண்டி
வலைபடைத்தார்க் கெம்முயிரை வைக்கின்றேம்"

எனவரும் நீலகேசித் தெருட்டாலறிக. வலைஞர்க்கும் ஊன் விலைஞர்க்கும் நன்னெறியிலே செல்லுணவு மிகக் கிடைத்தலாற் கொலையும் களவு மின்றி வாழ்தல் குறித்தார். விலங்குகளை வஞ்சித்துப் பிடித்தலிற் களவுண்மையும் அதனை யூனுக்கு விற்றலிற் கொலை யுண்மையுங் கருதி ஈண்டே சேரக் கூறினார். வணிகர் தாம் உண்ணற்கு ஊன் கொள்ளத் தொழிலவே வலைஞர் கொலையும் விலைஞர் களவும் ஒழிதல் கருதிக் கூறினார்.

"தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்"

என்ற திருவள்ளுவர் கருத்தொடுவைத்து நோக்குக. கொலையின் கொடுமை தெரியக்கடிந்தும் என்றார். களவுள்ளத் தெய்தாமை நீக்கியுமென்க. அமரர்ப்பேணியும்—தேவரை வழிபட்டும். ஆவுதி யருத்தியும்—அவரை ஆகுதிகளால் உண்பித்தும். "அவியுணவி னான்றார்" என்பது திருக்குறள்.

201—210. ஈந்து தூய பொருள்களான் உலகிற்கு நன்மை செய்தலான் நல்லான் என்றார். "ஆனின் பயனைந்தும் பயந்து நின்ற தூய்மைசேர்' என்பது பழிகைப்பிரானார் திருவாக்கு. ஆனின் சிறப்புத்தோன்ற வெடுத்தோதினார். பகடு—உழுதற் றொழிற்கும் சகடத்திற்கும் உரிய பகடுகளைப்போற்றியும்.

நான் மறையோர் புகழ்பரப்பியும்—நான்கு வேதங்களையும் கற்று செல்வமாகவுடைய அந்தணர் புகழைப் பரவச்செய்தும்.

" செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை
யறுதொழி லந்தண ரறம்புரிந் தெடுத்த
தீயொடு விளங்கு நாடன்
வாய்வாள், வலம்படு தீவிற்
பொலம்பூண் வளவன் " (புறம். 397)

என இப்பாட்டுடைத் தலைவன் பாடப்படுதல் காண்க. அவர்க்குப் பண்ணியம் அட்டியும், பசும்பதம் கொடுத்தும் — அவர்க்கு வேண்டிய பண்டங்களை நீர்வார்த்து நல்கியும் ஆமமான உண்டிகளைக் கொடுத்தும். பசும்பதம் - அடாத பச்சையுணவு. எ-று. வடமொழியைத் தமிழிற் பெயர்த்துக் கொண்டது. அட்டியும் கொடுத்தும் நான்மறையோர் புகழ்பரப்பியும் எ-று. புறப்பாட்டில் (362) "கைபெய்த நீர் கடற்பரப்ப வாமிருந்த அடைநல்கிச் சோறு கொடுத்தும்" என வருதலானறிக. பணவிலைக்குக் கொள்வன பண்யம் என்று கொண்டு அதுவே பண்ணிய மென்னினு மமையும். பண்ணியம் — பண்டம்;

" மலையவுங் கடலவும் பண்ணியம்
பகுக்கும் " (பதிற். 59)

எனவருவதறிக. கொடுத்துப் புண்ணிய முட்டா நன்னெஞ்சினோர் என்க. இங்ஙனஞ் செய்தலான் அறத்தின் முட்டுப்படாதார்" என்பது கருத்து.

" தண்ணிழல் வாழ்க்கை யுழவர் "
என்றியைக்க. இவ்வாறு கூறியது

" அலகுடை நீழலவர் " (குறள். 1034)

ஆதல்பற்றி. அலகு — விளைகதிர். விளைகதிருடைய நீழல் என்பதுபற்றித் தண்ணிழல் என்றார். வேந்தர்குடை வெம்மையுஞ் செய்யுமாகலின் தண்ணிழல் வாழ்க்கை என்றார்.

" மண்குளிரச் செய்யு மறவேனெடுந்தகை,
தண்குடை வெம்மை விளைத்த திதுவென்கொல் "
(சிலப். ஊர்சூழ்வரி)

எனவருதலானுணர்க உழவர் நெடுநுகத்துப் பகல்போல நடு நின்ற நன்னெஞ்சினோர் — உழவருடைய வளைந்தகலப்பை நடுவா கோத்த ஆணிபோல நடுநிலையினிலைபெற்ற நல்லவுள்ளத்த இதனால் உழவர் சிறப்பையும் உடன்கூறிக்கொண்டார். வள ரிருப்பு என்க. இதுவே வாணிக வாகையாதல்,

> " உழுது பயன்கொண் டொலிநிரை யோம்பிப்
> பழுதிலாப் பண்டம் பகர்ந்து — முழுதுணர
> வோதி யழல்வழிபட் டோம்பாத வீகையா
> னாதி வணிகர்க் கரசு " (பு. வெ. மாலை. 164)

என்பதனானுணர்க. இங்குக் கூறியன இந்நூலின் தொடக்கத்தில் [illegible] கண்டுகொள்க. [illegible] லானே தண்ணிழல் வாழ்க்கையை உண்டு [illegible] கூறியதனான் இஃதுணர்க. நான்மறையோர் புகழ்பரப்பி என்பதி அந்தணர் சிறப்பும் உடன்கூறியவாறுணர்க. நான்குவேதமே உடையரென்றும் அவர்களுள்ளது புகழென்றும் அப்புகழ்வணிக ராற் பரப்பப்படுவதென்றும் கூறியவாற்றானுணர்க. சோறடுக்கிய கொழுங்கஞ்சி வெண்கோவில் மாகூட்டுதல் கூறியதனால் அரசன் கோயிற்சிறப்பு முன்னரே குறித்ததுகாண்க. இவ்வாறு மூவகையும் கூறிக்கொண்டதனால் ஈண்டு வணிகர் சிறப்பே கூறுகின்றாரென வுணர்க. அரசன் கோயிலே முற்கூறியது, மேற்சோழனைப் புகழ்ந்து விரித்துரைத்தல் கருதியதனாலெனத் துணியலாம். வடுவஞ்சி — பழியஞ்சி வாய்மை — வாய்மைமொழிகூறி. [illegible] பொருள்களையும் [illegible] பொருள்களையும் [illegible] படியாக ஆராய்ந்து பிறர்பாற் [illegible] கொள்ளாது பிறர்க்குத்தாம் கொடுப்பதைக் குறையாகக் கொடாது.

**211—220.** பல்பண்டம் பகர்ந்து வீசும்—பல பொருள்களை யும் லாபஞ்சொல்லிக் கொடுக்கும். தொல்கொண்டித் துவன்றி ருக்கை—தொன்றுதொட்டுவந்த செல்வத்திரளால் நெருங்கிய வணிகரிருக்கைப்பட்டினம் என்க. இவ்வாறு பகர்ந்து வீசுதலால் அழியாது நிலைத்த தொல்கொண்டி யுடைமை குறித்தார் என்ப. பகர்ந்து-விற்று. தொல்கொண்டிவீசும் இருக்கையெனினு மமையும்.

தொன்றுதொட்டுத் திரண்டபொருளை வேள்வியினும் அறத்தினும் சேரும். பல்லாயமொடு — பலபல துணையோடு. வேறுவேறு பதிபழகி யர்ந்த முதுவாயொக்கல் — பல்வேறு ஊர்களிற் சென்று பழகிய ன் பயனாக அறிவுவாய்ந்த சுற்றத்துடன் என்க. பலதேயத்துப் பயணஞ்செய்தலான் உண்டாகிய பேரறிவைக்குறித்தல் காண்க. இனி மொழி பலவும் ஓரிடத்திற் கலந்து பெருகுதற்குச் சாறயர் மூதூர் சென்று தொக்காங்கு எனவுவமை எடுத்துக்காட்டினார். மூதூர் விழவிற் பலபாடைமாக்களும் ஒருமிச் சென்று தொகுதல் இயல்பென்க. விழாவை உவமை கூறினார் இப்புலம் பெயர் மக்கள் மகிழ்ந்து கலந்துவதிதல் குறிக்க. மொழிபல பெருகிய பழிதீர் தேத்தும் — மொழிபல பெருகிய தேத்தும் எனவும், பழிதீர்தேத்தும் எனவுங்கொள்க. ஒருமொழியையே பல மொழியாகப்பெருக்கி உச்சரிக்குந் தேயத்தென்றது சீனதேயத்தை எ-று. இம்மொழி யிங்ஙனமாதல் வல்லார்வாய்க் கேட்டுணர்க. ஒருமொழியே இருபது வகையாக உச்சரிக்கப்பட்டு வேறுவேறு பொருள்குறிக்கும் வன்மை இம்மொழிக்கே உரித்தென்ப. பழிதீர்தேத்து — ஒழுக்கத்தாற் பழிதீர்ந்ததேயத்து. இதுவும் இத்தேயத்திற்குச் சிறந்ததென்ப. பிறரைப் பழித்துரைத்தற்குரிய வசைமொழிகள் இத்தேயத்திற்கு மிகவும் அரியனவாமென்ப.

தேஎத்துப் புலம் பெயர் மாக்கள்—தேயத்தினின்று நிலம் பெயர்ந்து வதியுமாந்தர். எ-று. கலந்தினிதுறையும் — உள்ளம் கலத்தல் காரணமாகத் தென்னாட்டாருடன் இனிது வதியும் பட்டினம் பெறினும் என்க. பலதேயமாக்கள் கலந்திருத்தலை மருவூர்ப் பாக்கத்துக் கூறினார் இளங்கோவடிகள். இதனால் இவ்வாசிரியர் இவ்விரு பாக்கத்தையும் பிற்பாகத்துச் சேரக் கூறுதல் அறியலாம்.

பல்லாயமொடு பதிபழகி வேறு வேறுயர்ந்த முதுவாயொக்கல் என்றது தேசனகரை எனவும் புலம் பெயர் மாக்கள் என்றது சீநகரை எனவும் கொண்டு இவ்விருவரும் கலந்தினிதுறையும் பட்டினம் என்க. தமிழ் நாட்டிற்கு மேற்கணுள்ளாரும் கீழ்க்கணுள்ளாருங் கலத்தல்குறித்தது.

முட்டாச் சிறப்பிற் பட்டினம். முட்டுறாத சிறந்த வாழ்க்கை யினையுடைய காவிரிப்பூம்பட்டினம் பெறினும் வாரே னென்க. சிறப்பு—தலைமையுமாம். இத்தலைமை, பொருளாற் பெற்ற தலைமை யென்பது "தொகுபோர்ச் சோழன் பொருண்மலி பாக்கத்து" (338) எனவரும் அகப்பாட்டானறியலாம். இதனால் இப்பாலை பொருண்மேற் பிரிவாதல் குறித்தார்.

"நிலங்கொள வெஃகிய பொலம்பூட் கிள்ளி
பூவிரி நெடுங்கழி நாப்பட் பெரும்பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத் தன்ன
செழுநகர் நல்விருந் தயர்மா ரேமுற
விழுநிதி யெளிதினி னெய்துக"

(அகம். 205)

என நக்கீரர் பாடுதலானும் இதன் விழுநிதிச் சிறப்பறியலாம். இப்பட்டினத்தைக் கரிகாலற் குரியதாகச் சங்கநூற் செய்யுட்கள் கூறுமையு நோக்கிக் கொள்க. கரிகாலனையே பாடிய பொருநராற் றுப்படையும் இது கூறுமை நினைக்க. நக்கீரர் "பொலம்பூட் கிள்ளி—பட்டினத் தன்ன" என்பதனால் கிள்ளிவளவற்கே பட்டின முடைமை கூறி,

"செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழ னிடையாற் றன்ன"

(அகம். 141)

என்பதனால் கரிகாலற்கு இடையாறுடைமை கூறுதலும் அகநா னூற்றினின் றெடுத்து முன்னரே காட்டினேன்.

"புரவலன் நாடூர் பெயர்கொடை பராஅ
யாங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை"

(பன்னிரு பாட்டியல்)

என்பதிலக்கணமாகவும் இப்பொருநராற்றுப் படையுள் நாடு பெயர் கொடையே பரவப்படுதல் நோக்கிக்கொள்க. இனிப்பொருநன் ...

"இருமென் சும்மை யிடனுடை வரைப்பி
னசையுநர்த் தடையா நன்பெரு வாயி
லிசைபேன் புக்கு"

என்புழி "**இடனுடை வரைப்பின்**" என்பதே ஊர் குறித்த தாதலின் ஆண்டு "**இடனிடை வரைப்பின்**" என்பது னகர இகரம் னகர உகரமாக எழுதினராற் பிழைபட எழுதப் பட்டதோ என்றும் அதுவே பாடமாகக் கொண்டு உரை நடந்ததோ என்றும் நினைக்க இடந்தருவது. இடை வரைப்பு என்பது நடுக் கோட்டை என்பதோர் ஊர்ப்பெயராகத் தடையில்லை. இடைக் கோட்டை என்பது பெயரெனினு நன்கமையும். இதுகரிகாலற்கு நக்கீரர் கூறிய இடையாற்றுக்கோட்டையே யாமென்று கொள்ளின் இப்பொருநாறு அவற்கு ஊருங் கூறிற்றாகத் துணியலாம். கம்மை (ஒலி)யையும் இடத்தையுமுடைய இடைவரைப்பு என்க.

கரிகாலன் என்னும் பெயரும் திருமாவளவன் என்னும் பெய ரும் அடிகள் வேறுவேறாகக் கூறுதல் நுனித்து நோக்கிக்கொள்க. உரைகாரர் இருபெயரையும் ஒருவர் பெயராக வைத்துக்கூறலல்லது வேறுமேற்கோள் காட்ட வியலாமை நன்காய்ந்துகொள்க. பட்டினம் பெறினும் என்றது அதுபெறுதற்கரிய தென்பது கருதிற்று.

> "முழங்குநீர்ப் படப்பைக் காவிரிக் கிழவன்
> மாயா நல்லிசைக் கிள்ளி வளவன்" (புறம். 399)

எனவருதலான் இக்காவிரிப்பட்டினம் நெடுமாவளவனாகிய கிள்ளிவளவனுக்குரியதாதல் நன்குணர்க.

"வாரிருங்கூந்தல்"—நீண்டகரிய கூந்தலென்பர் உரைகாரர். இதனால் இயற்கையழகு முன்னர்க் குறித்தார். வயங்கிழை-விளக் கம் பெறுகின்ற அணிகலங்கள். இவளுறுப்பைச் சார்ந்து இழையயா குதல் கருதிற்று. இதனாற் செயற்கையழகு பிற்கூறினர். வாரிருங் கூந்தல் — வாரிமுடித்த கருங்கூந்தல் என்பது பொருந்தும். தான் பிரிந்துழி வாரப்படாமையும் இழைகள் இவளுறுப்பைச் சார்ந்து வயங்காமையும் இவ்விரண்டானுங் குறித்தார் என்பது நன் பொருந்தும். கூந்தலும் இழையும் திருந்துதற்குரியவள் நா யென்பது குறித்திவ்வாறு தலைவன் கூறினனென்க. இருங்கூந்தலும் வயங்கிழையும் அன்மொழித்தொகைகள்.

> "நாரிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே" (புறம் 113)

என்பதனை யறிக. இருமையும் வயக்கமும் இருளும் ஒளியுமாய் முரண்படவந்தன. நச்சினார்க்கினியர் கூந்தலையுடைய பூணினை யுடையாள் என்பர். பட்டினம் பெறினும் இவள் ஒழியவாரேன் என்று பெருஞ்செல்வத் தலைநகர்களோடு தலைவியின் சிறப்பினைச் சீர்தூக்கி அவற்றினும் இவளை மிகுத்துக்கூறுதல் இந்நாட்டுத் தொன்றுதொட்ட வழக்கேயாம்.

"நந்தர் பாடலி பெறினும்"

(அகம்: 265)

என்பது முதலாக வருமிடங்களாற் கண்டுகொள்க. இக்கு விப் புலவர் காலத்து இப்பட்டினம் அழியாதிருந்தமை [illegible]. வான்மீகரும் "ராஜ்யம்வா த்ருஷ லோகேருஷ [illegible] மஜா. த்ருலோக ராஜ்யம் [illegible] (ஸுந்தர காண்டம் ) ஜனகன் மகளாகிய சீதையையும் [illegible] களின் இராஜ்யத்தையுஞ் சீர்தூக்கின் மூவுலக ராஜ்யமும் [illegible] ஒரு துளியும் பற்றாது என்று கூறுதலான் இவ்வுண்மை யுணர்க. வாரேன் என்றான் இவளுடனுறை யின்பம் கண்கூடாகக் கண்டலான். வாழிய நெஞ்சே என்றான் இவளைப் பிரிந்து செல்லவையா யின் வாழாயென்று கருதி. வாழிய என்றான் இவளை நினைந்து மீண்டு வருதல் கருதியெனினு மமையும். இனிப் பாட்டுடைத் தலைவனைப் புகழ்கின்றார்.

221—230 கூருகிர்க் கொடுவரிக் குருளை— கூரிய நகங்களை யும் வளைந்த வரிகளையுமுடைய வேங்கைக் குட்டி. கொடுவரி என்ற தனால் வேங்கை யாதல் அறியலாம். அரசற்குப் பிறப்பும் அப் பிறப்பிற்குத் தக்க படை வலியும் வேண்டுமென்று கூருகிராற் பிறவற்றை அடும் உகிர்வலியும் கொடுவரியாற் பார்த்த வளவில் இன்ன பிறப்பென் றறியக்கிடக்கும் சாதித் தன்மையுங் கூறினார் என்க. குருளை யென்றார் இவன் இளையனாய்ப் பிணியிருந்தது குறித்து. கூட்டுள் வளர்ந்தாங்கு என்றார் இவன் தகுதி நோக்கி அடப்படாமலும், இவன் வலியுந் திறனும் நோக்கி வெளியில் விடப்படாமலும் பிறர் பிணியகத்து வளர்தல் கருதி. "அருவழி யிருந்த பெருவிறல் வளவன்" எனப் புறப்பாட்டில் (174) இவன்

பிணியிருந்து கூறுதலான் அறிக. தப்புவிப்பாரும் தானும் தப்புதற்கரிய வழி இருந்தது குறித்தல் காண்க. வளர்த்தாங்கு என்னாது வளர்ந்தாங்கு என்றார் பிணித்த பிறரால் வளர்க்கப்பட்டான் எனக் கூறற்கியையின்மை நோக்கி. கூட்டுள் என்றார் கூடில்லையாயின் அடைத்தாரையே முற்பட அடுதல் குறித்து. இஃது அடைபட்டு வளர்ந்ததற்குவமை. இனி அச்சிறை நின்று தப்பியதற்கு வேறுவமை கூறுகின்றார். பிறர் பிணியகத்திருந்து பீடுகாழ்முற்றி—பகைஞர் சிறையிலிருந்து அங்ஙனம் இருந்த நாள் வளர வளர அவரை அடுதற்குரிய மனவலியும் வயிரத்தோடு முற்றி வளரப்பெற்று (எ-று). அருங்கரை—களிறு தான் ஏறுதற்கரிதாயிடப்பட்ட கரை. கவியக்குத்தி—கவிந்துவிழக் கோட்டாற் குத்தி எ-று. குழிகொன்று—தன்னை அகப்படுத்திய குழியைத் தூர்த்து. குழிகொன்று என்பது குழியை இல்லாதபடி செய்து என்னும் பொருளிற் கூறப்பட்டதென்க. "நன்றி கொன்றார்" என்புழிப் போலக் கொள்க. தான் அகப்பட்ட குழியையே கோறல் கூறி அகப்படுத்தினாரைப் பின்கோறல் குறித்தார் என்பதும் ஒன்று. பெருங்கை யானை—தனக்கு வேண்டியவற்றைத் தன் பெருங்கையானே செய்துகொள்ள வல்ல யானை எ-று.

பிடிபுக்காங்கு தனக்கொத்தபிடியுடன் புக்குறைந்தாற் போல. இவன் சிறை கடந்ததும் மணந்தான் என்பதை இது குறிப்பதெனினும் பொருந்தும்.

"பிடிமுன்பு—
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார் தோட் கிள்ளி களிறு" (முத்தொள். 72)

என்புழிக்களிறு முன்னர்ப் புணர்ந்த பிடியைக்கூறுதல் கண்டுகொள்க. ஈண்டுச் சிறைகடந்து இவன் தாயமெய்தியதற்கே உவமையாய்ப் பிடியொடு புகுதல் கூறிற்றாதலான், இவன் இராச்சியமும் மணமுஞ்சேர வெய்தினான் என்று துணியலாம். நண்ணார் செறிவுடைத் திண்காப்பி லகப்பட் டிருத்தலான் அதனைக் கடத்தற்
225—230. குரிய உபாயத்தை நுண்ணிதினுணர நாடி என்றார். ஈண்டு நுண்ணிதினாடியுணர்ந்து என்று மாற்றிக் கொள்க.

"நுண்ணிதினுணர்ந்தோர்" (எழுத்து. 7) என்பர் தொல்காப்பியனார். நுட்பம் தெய்வம் தந்த இயற்கையறிவு. இதனை மதிநுட்பம் (குறள். 636) என்புழிக்கண்டு கொள்க. மதிநுட்பத்தொடு பலவாயிலானு மாராய்ந்துணர்ந்து எ-று. நண்ணார் செறிவுடைத் திண்காப்பு என்றதனால் இவன், 174 ஆம் புறப்பாட்டில் உரைகாரர்

"அரசிழந் திருந்த அல்லற் காலை"

என்னும் அடிக்கு,

"பகை வேந்தரோடு பொருது உடைந்து போதலாற்றம்
வேந்தனை......... இன்னாமை
யையுடைய பொழுதின் கண்"

என விளக்கியுரைத்தது நன்கு பொருந்துவது கண்டு கொள்க. நண்ணார்—பகையரசர். செறிவுடைத் திண்காப்பு. செறிவுடைக் காப்பு—திண்காப்பு என்க. இயற்கையா யமைந்த வனச்செறிவும் அகலாத படைத்திட்பமும் உடைய காவலை எ-று. ஏறி என்பது தன்வலியால் ஏறுதலைக் குறித்தது. வாள்கழித்து—தன் வாளை யுறையினின்றுங் கழித்துக் கொண்டு. தனக்குக் காவலாக நின்ற வாட்படையைப் போக்கி என்றுரைப்பர் உரைகாரர். அதுவும் பொருந்தும். அக்காவற் படைகழித்தற்கும் இவன் வாள் உறையினின்றுங் கழித்தல் வேண்டுமென்றுணர்க. ஈண்டுத்தான் சோழிய வேனாதி திருக்கிள்ளி (திருக்கண்ணன் என்றும் பாடம்) (புறம் 174) யினுதவி வேண்டிற்றென்று துணியலாம். உரு கெழு தாயம்—அந்நண்ணார்க்கு அச்சம் கெழீஇய அரசவுரிமை. ஊழின் எய்தி—தனக்குரிய முறைமையானெய்தி. இதனால் இவன் சேட்சென்னி நலங்கிள்ளிக்குப் பின்னே அரசெய்தற்குரிய அவன் மகனே யென்று ஊகிக்கப்படுகின்றான். புறப்பாட்டிற் பல்லிடத்தும் அவனை யடுத்தே இவன் பாடல் கோக்கப்பட்டுள்ளன. இளஞ்சேட்சென்னி புதல்வனாகிய கரிகாலன் இவனுக்கு மூத்தவனென்றே கருதுகின்றேன். சோழர் குடியுள் உட்பகையுற்ற நெடுங்கிள்ளி என்பான் நலங்கிள்ளியுடனும், அவன் மகன், அவன் தம்பி மகன் கரிகாலன் இவரெல்லாருடனும் பகைமை பூண்டவனாகிப் பாண்டியர் சேரர் இந்நாட்டுப் படையெடுத்தற்கு வேண்டியன செய்து மிக உதவினானவன்.

அப்படையெடுப்பையே கரிகாலன் தொலைத்தவனாவன். இதற்கிடையில் நலங்கிள்ளி மகனென்று நினைக்கப்படும் கிள்ளிவளவனாகிய **நெடுமாவளவனை** முள்ளூர் மலைக்காட்டிற் சிறைப்படுத்தியிருந்தல் கூடும். முள்ளூர் மலைக்காட்டில் இச்சிறையிருப்புக் கேட்கப்படுதலான் (புறம். 174). அவ்வமயம் சோழனுக்குப் பகைவனாகிய சேரற்குத் துப்பாயிருந்த மலையமான் திருமுடிக்காரி இச்சோழர் உட்கலகத்திற் சோழன் நலங்கிள்ளிக்கு விரோதமாகி அவன் மகனெனக் கருதத்தக்க கிள்ளிவளவனை யகப்படுத்திச் சிறைசெய்தனனாவன். இதனால் இக்கிள்ளிவளவன் இச்சிறையினின்று மீண்டவுடன் மலையமான் மக்களை யானைக்கிடப் புக்கானாவன். இம் மலையனுக்குத் தாயாதனாகிய மலையமான் என்பானொருவன், இச் சோழனை அச்சிறையினின்றும் விடுவிக்கத் துணைபுரிந்தனனாவன் எனக்கொள்க. மலையமான்காரி அப்போதப்போது மூவேந்தர்க்குந் துப்பாதல் நூல்களில் காண்க.

"மூவரு ளொருவன் துப்பா கியரென
வேத்தினர் தரூஉங் கூழே"

(புறம். 122)

எனக் கூழுடையனாக அவன் பாடப் படுதலானறிக.

"காரி, சேரலற் கீத்த கொல்லி" (அகம் 209). என வருதலானுமறிக. இவ்வளவற்குத் துணையாய மலையமான் புலிபொறித்த கோட்டை யுடையனாகப் பாடப் படுதலானும் அறிக. இக் கிள்ளிவளவன் காரிவழியிலொருவனாற் சிறைப்படுத்தப்பட்டானெனவும் அவ்வழியில் பிறனொருவனால் விடுவிக்கப்பட்டனனெனவுங் கொள்வதே பொருந்தும். சிறை நீங்கியபோது சிறைவைத்தவன் மக்களைப் பற்றி யானைக்கிடப் புக்கனன் என்க. இங்ஙனங் கொள்ளாது இக் கிள்ளிவளவன் தான் பிணியிருத்தற்கு முன்னே மலையமான்றன் பகைஞர்க்குத் துப்பாயது கருதி, அவன் மக்களைப்பற்றி யானைக் கிடப்புக்கனன் என்க. இங்ஙனமன்றி இக் கிள்ளிவளவன் தான் பிணியிருத்தற்கு முன்னே மலையமான்றன் பகைஞர்க்குத் துப்பாயது கருதி அவன் மக்களைப்பற்றி யானைக்கிடப் புக்கனன் என்று கூறினு மிழுக்காது. யானைக்கிடப் புக்கதனால் முள்ளூரி

லிடைப்பட்டனன் என்பதும் முள்ளூரில் அடைத்தனுல் யானைக் கிடப்புக்கனன் என்பதும் பொருந்துவது காண்க. மக்களை யானைக் கிடப்புக்க செய்தியைச் சிறைக்கு முன்வைத்தாலும், பின்வைத்தாலும் இவ்வாதத்திற்கு ஓர் விரோதமுமில்லை என்றுணர்க.

இத் தடுமாற்றக்காலத்தே இந்நெடுமாவளவன் காரிவழியினனுகிய திருக்கிள்ளியைத் துணைக்கொண்டு அம் முள்ளூர்ச் சிறை கடந்து, தனக்கு முறையான அரசுரிமையை யெய்தினுனென்று நினையத்தகும். சங்க நூல் துணையாக ஆராய்ந்தால். இவ்வளவே துணிந்த முடிபாமென்க.

ஈண்டுச் சிறைகிடந்தவன் கரிகால்வளவனே யெனின் அது பொருநராற்றுப்படையொடு முரணுவதன்றி இவன் பிணியிருந்தது பாடும் மாருேகத்து நப்பசலையார் கரிகாலனைப்பாடாது 226 ஆம் புறப்பாட்டால் இக்கிள்ளிவளவனையே பாடியதற்கு மாறுபாடாகி வரலாறழியு மென்க.

இனிப் பெற்றவை மகிழ்தல் செய்யான்—தனக்கு முறையாக உரியதாயச் செல்வங்களாக எய்தியவற்றிற்கு மகிழ்தல் செய்யானுகி எ-று. உரியவை இல்லாமற் போயதற்கு வருந்தலாமல்லது அவையே கிடைக்கின் மகிழ்தல் வேண்டாம் என்பது கருத்து. மற்றிவன் மகிழ்தற் பொருட்டுச் செய்தன இவையென்று மேற்கூறுகின்ருர்.
செற்ருேர் கடியரண் தொலைத்த கதவு கொல்மருப்பின் யானை.

செற்ருேர்—தன்னைச் செற்ருேர்; இவர் தன்னைப் பிணியகத் திருத்தியவராவர்.

கடியரண்—படையாளரால் காவலையுடைய எயில். கதவு கொல் மருப்பு—எயிற்கதவங்களைப் பாய்ந்து கெடுக்கும் கொம்புகளையும். அவ்வெயிலகத்துள்ள முடியுடைக் கருந்தலை எ-று. முடியுடைவலியதலை. கருந்தலை என்றது இவனை வணங்காத வலியுடைய தலையாதல்பற்றி. கருங்கைமள்ளர் என்புழிப்போலக் கொள்க. வணங்காமைக் காரணம் முடியுடையராதல் பற்றி என ஏதுப்படக் கூறினுர். புரட்டும்—அம்முடியையும் தலையையும் கீழ் 231—235. அகப்படுத்திப் புரட்டும் எ-று. புரட்டும் முன் தாளில்

உகிர்களையுடைய அடி. அடி ஈண்டுப்புறவடி. முன்றாள்-முழந்தாள் என்றலுமாம். தன்னரசனுயின் அவற்குத் தலையிலேற ஏற்றங் கொடுக்கும்; முன்றாள் கொண்டு பிறர் முடியுடைத்தலையைப் புரட்டும் என்பது குறித்தார். அடிய வோங்கெழில் யானை—அடியினையுடைய ஓங்கிய யானை, எனவும் எழில் யானை எனவுங் கொள்க. இது, பகைப்படை யானையின் முடியுடைக் கருந்தலை புரட்டும் என்றதனுனும் ஓங்கெழில் யானை யென்றதனுனும் அறியலாம். யானை புரவியொடு வயவர் வீழ முனைகெடச்சென்று என்க. யானையொடும் வடிமணிப் புரவியொடுஞ் சென்று என்றது தேர் புரவியான் ஈர்க்கப்படுதல் கருதியும் படைஞர் யானையினும் புரவியினு மூர்ந்து சேறல் கருதியும்.

பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்ப—பெரிய நல்ல விசும்பிற் பருந்துகள் உலாவி நடப்ப என்றது, இவன் யானையும் புரவியுந் திரள்திரளாகச் சேறலின் மண்துகளெழுந்து விசும்பு தூர்த்தலான் ஆண்டுப்பறந்த பருந்துகள் தரையில் உலாவி நடப்பன போலாயின என்பது குறித்ததாம்.

"பெயர்வான் றெருகுத்த படைத்துகளாற் பின்னு
முயர்வான் குறித்த துலகு"

(தொல். புறத். 68. உரை)

என்றதுங்காண்க. நடவாது பறப்பவற்றினை உலாய் நடப்ப என அறியாது கூறினர் என்பது இயையாதென்க. பெருநல்வானம் என்றது, இவன் படையெழுச்சிக்கு முன்னர்ப் பெரிதும் தூய்து மாகிய விசும்பு என்பது தோற்றிநின்றது. வடிமணிப்புரவி—இவன் வரவினை இவன் வருதற்கு முன்னே ஒலியாற்காட்டு மணிகளை யுடைய குதிரைப்படை என்றது மறைந்தடுதலில்லாமை குறித்தது. வயவர்வீழ — இப்படைக்கு வீழ்ந்தார் பலபல போர் வென்றவர் என்பது குறித்தது. தன்னை முன்னே வென்றவர் வீழ என்பதும் பொருந்தும். வயம் – வெற்றி. தூறு இவர் துறுகல் – உழிஞை சூடிய முரசிற்குவமை. இதனைப்

"பொலங்குழை யுழிஞையொடு பொலியச்சூட்டிக்
குருதிவேட்கை யுருகெழு முரசம்"

236—240. என்ற புறப்பாட்டான் (50) அறிக. குருதி
வேட்கையும் போர்வேட்கையும் ஒன்றுதல் உணர்க. முரசிற்றெய்
வம் இறைகொள்ளுதல் மரபாதலின் போர்வேட்டல் அதற்கேற்றி
னர். பகைவர் எயிலை முற்றுதற்குச் சூடுதலால் உழிஞைசூடி என்
றார். இவன் கருவூரை முற்றியது புறப்பாட்டிற்காண்க. போல,
வேட்டு சூடிப்பிளிறு முரசமென்க. இவ்விடத்து உரைகாரர் வேறு
கூறுவர். பூளைசூடுதல் வீரத்திற் கறிகுறியாம். விடையேற்றிற்குச்
சூடுதல் இன்றுங் காணலாம். வென்ற ஏற்றுத்தோல் என்பதற்கு
அறிகுறியாகப் பூளைசூட்டினர் என்பதும் ஒன்று. முரசிற்குப் பேய்க்
கண் உவமை கூறுதல் கவிமரபென்க. கடிமுரசு — காவன்முரசு.
நாடுகாவலில் அறையப்படு முரசாதலறிக. போரில் ஒலிக்கப்படுத
லும் நாடு காவற் பயத்ததாதல் உணர்க. நீதி முரசுங் கொடைமுர
சும் உடைமையால் இவ்வாறு கூறினர். மாக்கண் அகலறை அதிர்
வனமுழங்க. கரிய இடத்தினையுடைய அகன்ற மலைப்பாறை[illegible]
எதிரொலியாலதிர்வனவாய் முழக்கஞ்செய்ய. முரசுமுழங்க [illegible]
கெடச்சென்று என்றது முரசொலியே பகையோட்டுதல் குறித்தது.
யானை புரவியொடு முரசுமுழங்க வயவர்வீழ முனைகெடச்சென்று
என்க. எடுத்துச் செலவிலே முனைகெடுதல் கூறியது காண்க.
முனை—பகைப்புலம். முன்சமமுருக்கி முற்பட்ட தூசிப்போரைக்
கெடுத்து. பகைப்புலத்துக் கெடாது முன்வந்து போர்தந்த முன்
னணியை முருக்கியது கூறிற்று. முன்சம முருக்கியதன் பயனாக,
கூழைப்படை யிரிதலால் வேறு கூறிற்றிலர். தலைதவச்சென்று—
பகைவர் அகநாட்டுள் மிகப் போய் என்றவாறு. தண் பணை
யெடுப்பி—அவருள்ள மருத நிலத்தவரைக் குடியெடுத்து ஓடச்
செய்து; புறவாயிற் கரும்பொடு செந்நெல் நீடி, உள்வாயிற் குவளை
241—45. யொடு நெய்தலு மயங்கிக் காரங்கலித்த கண்ணகன்
பொய்கையின் அகவாயும் புறவாயும் (உள்ளும் புறம்பும்) என்க.
கரும்பு பூத்தாற்றீஞ்சாறு நிறைவதும் செந்நெற் பூவாமையாற்
கதிர் நிறைவதுங் குறித்து வெண்பூக் கரும்பென்றார். கரும்பு நெல்
லினுஞ் சிறத்தல் குறித்து ஒடுக்கொடுத்தார். கொழுங்காற் புதவ
மொடு—கொழுவிய அடிவேரினையுடைய அறுகுடன். செருந்திநீடி-
கோரை நீள வளர்ந்து. செறுவும் வாவியும் நீரற்றுப் புறவாய்

வயலும் உள்வாய் நீர்நிலேயும் வேறு காணப்படாது நீரறுதலான் எ-று. அப் பொய்கை உள்ளும் புறனும் அறல்பட்ட கொம்பினை யுடைய கலையுடன் மான்பிணைகள் துள்ளி விளையாடவும். இது பகைவர் தண் பணை நாடு கெட்டவாறு கூறினர். இனி அவர் ஊர் கெட்டவாறு கூறுவர்.

246—50. கொண்டி மகளிர்—கோயிற் பணிபுரியும் பதியிலார். இவர் தாமே தம் போகத்திற்கு ஆடவரை வரிப்பவராதலிற்கொண்டி மகளிர் என்றார். "கொண்டியாயினவாறென்றன் கோதையே" (தேவாரம். 710, 7) என்பதனுலிதன் உண்மையுணர்க. "வண்டிற் றுறக்குங் கொண்டிமகளிர்" (மணிமே. 18, 109) என்றார் பிறரும். இவர் முன்னே தோற்றார்பாற் பிடித்துவந்த மகளிரென்பர் உரைகாரர். இவர் உண்துறை மூழ்கி என்றார்—ஊரார் நீருண்ணுந் துறையின் மூழ்குதல் தகவன்றேனும் அம்பலப்பணிக்குத் தூயராதற் சிறப்பால் அது புரிந்தனர் என்பது தோன்றக் கூறினர்.

அந்தி மாட்டிய நந்தா விளக்கின்—இவர் இருள் வருவதற்கு முன்னே மாலையிலே கொளுத்தின இரவெல்லாம் அவியாத விளக்கினையுடைய, அம்பலம் என்க. மலரணி மெழுக்கம்-இவர் மலரணிந்த மெழுகிய இடத்தையுடைய அம்பலம். அம் மெழுகிய இடத்து ஏறிப் பலர் தொழா நிற்க.

வம்பலர் சேக்கும் பொதியில்—புதியராய் வந்தார் தங்கும் அம்பலம். பொதியில் கடவுளுடைய தென்பதும் புதியராய் வந்தார் தங்குமிட மென்பதும் இவரே 167 ஆம் அகப்பாட்டில்,

"எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
போர்மடி நல்லிறைப் பொதியில்
சேக்குவங் கொல்லோ"

எனக் கூறுதலான் உணரலாம். தொழுதல், தெய்வம் இறை கொள்ளும் கந்துடைமையால் என்றும் வம்பலர் தங்குதல் பொதியிலாதல் கருதியும் என்று விளங்கக் கூறியது காண்க. தொழ வந்தவர் பலர் அவ்வம்பலர்க்கு உணவளித்தல் இயல்பென்க. பொதியிற் பருநிலை நெடுந்தூண் ஒல்கத்தீண்டி—அவ்வம்பலத்திற் பருத்த மேனிலையைத் தாங்கி நின்ற நெடிய தூண் சாயும்படி உரிஞ்சி.

251—55. பிடியானை யொடு புணர்ந்துறையவும் என்றது பகைவர் நாடும் ஊருங் காடாயினவாறு குறித்தார். "பெருங்கையானை வெரிநோங்கு சிறு புற முரிஞ்ச வொல்கி"

என இவரே அகப்பாட்டிற் கூறினர். (அகம். 167) பெருநல் யானை—பிடிக்குச் செயற்கரிய செய்யும் நல்லகளிறு. புணர்ந்துறைதல் கூறியதனல் மக்களே யின்மை குறிப்பித்தார். அருங்காடாயின வென்பது குறிப்பு. அருவிலை நறும் பூதூஉய்—அரிய விலைக்குக் கொண்ட மணமலரைத்தூவி. அரிய விலை மணம் பற்றியென்றறியக் கூறினர். இனி அருவிலை நறும்பூ பொற்பூவுமாகும். ஈண்டு நறும் பூ நல்லபூ என்க.

முதுவாய்க் கோடியர்—அறிவு வாய்த்தலையுடைய கூத்தர். முதுவாய்—ஆடற் கேற்பப்பாடும் அறிவுடைய வாய் எனினுமமையும்.

"கோடியர் தலைவ கொண்ட தறிந" (பொருநாறு. 57)

திரிபுரி நரம்பு—திரிந்து முறுக்கிய நரம்பு. 'புரிபுனை பூண் கயிறு" (கலித். 80) தீந்தொடை என்று யாழிற்குப் பெயராக்கினர். இனிமையாற் றொடுக்கப்பட்டதொன்றாதல் கருதி. தமிழர் இசையின் இனித்தற்கு இவ்வினிய பெயரே சான்றாகும். நரம்பின் மறைய (தொல். எழுத். 33) என்புழிப்போல நரம்புயாழ் என்று கொண்டு அதன் கண் தீந் தொடை—இனிமையாகத் தொடுத்த இசையெனினுமமையும். விரல், வன்மை, மென்மை, சமம் என்னும் மூவகையானுந் தொடுதலால் இனிமை செய்யுங்கருவியாதல் கருதித் தீந்தொடையென்று யாழிற்குப் பெயராக்கினர் என்பதே சிறந்ததாகும். தீந்தொடை யோர்க்குமென்றார் அவ்விசை செவியனவிற் கேட்பதுமட்டில் வேண்டிய தொன்றாதல் கருதி. இதன் கட் கோடியர் (கூத்தர்) என்றதனல் நாடகமும், தீந்தொடையென்றதனல் இசையும், முழவொடு புணர்ந்த என்றதனுற் றாளமும் கூறி, பாவம், ராகம், தாளம் என்ற மூன்றையும் புலப்படுத்தார். இவை கெட்டு முரண் கூறியவழி ஓரி கதிர்ப்பவும் ஆண்டலை விளிப்பவும், பேய்துவன்றவும் எனக்கூறுதலானும் இம் மூன்றுங் கருதுதல் தெளியலாம். முதற்கட் கந்துடைப் பொதியிலிற் பலர் தொழக்கூறி,

அதனை யடுத்துத் தெருவின் மன்றங்களிற் பண்துய்த்தல் கூறினர். இத்தமிழர் தெய்வத்தையடுத்து இசையை வேட்குஞ் சிறப்புக் குறிக்கொள்க. பெருவிழாவிற்றலையாய இன்பம் இசைகேட்டலாதல் உணர்க.

255—260. பேஎமுதிர் மன்றம்—தனிநிலையில் அச்சம் வளர்கின்ற அம்பலம். இசைத்தலும் துய்த்தலும் இல்லாதநிலை அச்சம் தருவது என்றதாம். இம்மன்றத்தின் தொன்மை வளநிலையுடன் உறழநோக்கி இத்தனிநிலை அச்சந்தருவது என்றார் எனினுமமையும். சிறுபூநெருஞ்சியொடு அறுகைபம்பி — சிறிய பூக்களையுடைய முள் நெருஞ்சியுடன் அறுகம்புல் படர்ந்து என்றும் மக்கள் வழங்காமை குறித்ததாம். மக்கள் வழங்காமையால் அறுகைபம்பி என்றும் பின் எவரும் வழங்குதல் தடுக்க நெருஞ்சி பம்பி என்றும் கருதினரெனினுமமையும். நடித்தற்குமுன் அந்நிலத்திற் பூச்சிதறுவது வழக்கமாதல் சங்கநூல்களிற் காணலாம். நறும்பூத் தூஉய தெருவிற் சிறுபூ நெருஞ்சியொடு அறுகைபப்பி என முரண்படக் கூறியது காண்க.

> "யாழிசைக்கு மாறாக ஒலிகதிப்பவும்,
> முழவொலிக்கு மாறாக ஆண்டலை விளிப்பவும்,
> கோடியர் கூத்திற்கு மாறாகப்
> பேய்மகள் துவன்றவும்"

என்று கூறுதல் கண்டுகொள்க. இதனையும் மேலே இசைத்துறை மூன்றுங் கூறியதனையலாம். அழல்வாயோரி—கேட்டார்க்கு அழலுறலைச் செய்யும் வாயினையுடைய நரி. அஞ்சுவரக் கதிப்பவும் என்றார் நரி காண்பது நல்லதன்றி அதன் குரல் கேட்பது உற்பாதம் ஆதல்பற்றி. கதித்தல்—ஒலித்தல்—கதிர்த்தல் ஒலித்தலன்று. கத என்பது வடமொழி. கூகையும் ஆண்டலையும் இராப்புட்கள். நரி, கூகை, ஆண்டலை, பேய் இவைகூறியதனால் முன்யாம் ஓர்த்தது இரவில் என்பது தெளியக்கிடத்தல் காண்க. இரவுபகலாக விளங்கிய பொதியிலும் தெருவின் மன்றங்களும் பகலும் புகற்கரிய காடாயின என்றது குறிப்பு. ஓரி அஞ்சுவரக் கதித்தற் கேற்பக் கூகை அழுகுரலுடையதாயிற்று. கூகை அழு

கூற்கு ஆண்டலை ஒப்புவைத்து விளிக்கல் குறித்தார். இது வாரம் பாடுதல் போன்றது. கூளி—பேய்க்குத் தொழில்செய்வன.

கதுப்பிகுத்து — தலைமயிரைத் தாழவிட்டு. பேய்மகள் அசை இத்துவன்றவும் என்க. பேய்மகள் ஆடி நெருங்கவும் எ—று.

''அசைவளிக் கசைவந் தாங்கு''

என்ற முல்லைப்பாட்டிற் போலக்கொள்க.

''பேய்கதுப் பிகுத்தாட''

என்பது சிலப்பதிகாரம். ஈண்டு அசைஇ—இளைத்து என்றார் உரைகாரர்.

''பேய் பறை கொட்டி னாடாதோ கூத்து''

எனபதனல் ஆண்டலையாடுதற்குப் பேயசைதல் கூறினார். அசை தலையன்றி இஃதோர் கூத்தாகாதென்பது தோன்ற அவ்விலையாற் குறித்தார். பிணந்தின் யாக்கைப் பேய்மகள் என்றார் உயர்திணையிற் சேர்க்கப்பட்டு இதுசெய்வதே யென்னும் கருத்தால். பிணந் தின்னுதலாற்றன் யாக்கையை யுடைய பேய்மகள். எ—று.

''பேய்ப் பிறப்பிற் பெரும் பசியும்'' (திரிகடுகம் 60)

என்டதனாற் பசிமிகுதியைப் பிணத்தானும் அவிக்கக் கருதுதல் இதன் இயல்பு. ஓரி, கூகை, ஆண்டலை, கூளி இவையும் பிணந் தின்பனவேயாம். பேய்மகள் துவன்றவும் என்றது முன் மனைகள் நெருங்கிய மன்றம் இங்ஙனமாயிற்றென்பது தோன்ற நின்றது.

261—265 கொடுங்கான் மாடத்து நெடுங்கடைத் துவன்றி— வளைந்த தூண்கள் தாங்கிய மாடத்தின் நெடிய தலைக்கடையில் நெருங்கி. இங்ஙனங் கொள்ளாது கொடுங்காற் பேய்மகள் என்றியைப்பர் உரைகாரர். அது துவன்றவும் என்றதன் மேல் வந்ததனால் ஆசிரியர் கருத்தன்மை எளிதினுணரலாம். வளைந்த தூண் என்றது தன்னுள் உருண்டுவளைந்த தூண் என்று சதுர வடிவத்தூண் அல்லாமை குறித்தது. வட்டப்பறையைக் கொடும் பறை (துரைக். 524) என்பது காண்க. இவ்வாசிரியரே பெரும்

பாணாற்றிற் "கொடுநுகம்" எனநேராக உருண்ட நுகத்தடியைக் கூறுதல் காண்க. இப்பாடலிலேயே கொடுந்திண்ணை யென்று வருதல் காண்க. நெடுங்கடை என்றார் பலருண்டற்குத்தக அகன்றிருத்தல் கருதி. விருந்துண்டானாப் பெருஞ் சோற்றட்டில்—விருந்தினர் உண்ணுதலான் இல்லையாகாத பெருஞ்சோற்றினையுடைய பாகசாலை. பின்னும் பின்னுமாக்குதலான் இல்லை யாகாமை குறித்தார். ஆனுதல்—இல்லையாதல் என்று பொருள் படுதல் அறிக. "மழையான்ற அமையத்து" மழையில்லையான காலத்து எனவருதல்போலக் கொள்க. அட்டிலையும் ஒள்ளிய சுவரினையுமுடைய நல்லில் என்க. ஒள்ளிய சுவரைச் சூழவெடுத்து அதன்கண் அட்டிலும் நல் இல்லமும் அமைக்கப்பட்டதனால் இவ்வாறு கூறினார். நல் இல் என்றார் நல்லோர் பலருள்ள இல்லம் ஆதல் கருதி. உயர்திணையிருந்து பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்—இவ்வாறு உயர்ந்த திண்ணையிலிருந்து பசிய கிளிகள் பாலையருந்தி இன்சொற் சொல்லும் செழித்த ஊரென்க. கிளி மிழற்றும் செழுநகர் எனவும் கிளி பாலார் செழுநகர் எனவும் கொள்க. அட்டில் சிறிது சேய்மையின் இருத்தலால் புகையழுக்குப்படாத ஒண்சுவர் நல்லில் என்றார். கனியன்றிப் பால்உண்ண வேண்டாத கிளியும் பாலார்தல் குறித்து அந்நகரின் பான் மிகுதி காட்டினார். இனி உயர்திணையிருந்து கிளி பாலார் செழுநகர் என்றது, கிளி உயர்திணையொப்ப வீற்றிருந்து பாலுண்ணும் செழுநகர் எனினுமமையும். பேச்சுடைமையால் உயர்திணையாகச் சேரவிருத்தல் குறித்தார். தம் கருத்தை வெளிப்படுக்குஞ் சொல்வன்மை யுடையார் உயர்திணையராதல் குறிக்கொள்க. அவ்வன்மையில்லன அஃறிணையாதலுங் காண்க. தொடுதோல்—செருப்பு. தொடுதோலடியர் என்றார் சுடுபாலைநிலத்தவர் என்பது தோன்ற. துடிபடக் குழீஇ—துடி ஒலித்த அளவிற் றிரண்டு தொடுதோலடியராகிய கொடுவிலெயினர் என்க. எப்போதும் வளைந்த வில்லுடைய வேடர். கொடுமை வில் கொடுவில் எனினுமாம் துடி—அந்நிலப்பறை.

266—270. எயினர் கொள்ளையின் உண்ணுதலான் உணவில்லையான வறிய நெற்கூட்டில் உள்ளிடத்திருந்து. வளைவாய்க்கூகை வளைந்தவாயினையுடைய கூகை. உணவின்மையாற் பகற்பறவை

யாகிய காக்கையில்லை யென்றும் அப்பகையின்மையாற் பகலிற் கூகை குழறவும் என்றும் கருதினார் என்க.

"பகல்வெல்லும் கூகையைக் காக்கை" (குறள். 481)

என்றதுகாண்க. இரவில் எலியும் இன்மையால் உணவின்றிக் கூகை குழறவும். இல்லெலி வல்சி வல்வாய்க் கூகையென்பது காண்க. கிளி மிழற்றுபாலார் செழுநகர் என்றதற்கு முரண் இஃதென்றுணர்க. விருந்துண்டற்கு எயினர் கொள்ளையுண்டதும் பெருஞ்சோற்றட்டில் என்றதற்கு உணவில் வறுங்கூடும், நல்லில் உயர்திணையிருந்து என்றதற்கு வறுங்கூட்டுள்ளகத் திருத்தலும் கிளிக்குக் கூகையும் பாலார்தற்கு உணவின்றி யிருத்தலும், மிழற்றுதற்குக் குழறுதலும் முரணாக வைத்தோதுதல்காண்க. நகர் ஊர்கள் கவினழிய—மாநகரங்களாகிய ஊர்கள் அழகழிய, அருங்கடிவரைப்பின் ஊர்—அரிய காவலையுடைய மதிலை யுடைய ஊர்கள். இத்துணையும் பகைவர்நாடும் ஊரும் கவினழிதல் காட்டியபடி. பெரும்பாழ் செய்தும்—பின்னும் வளன் உண்டாகாதபடி செய்தபாழாதலிற் பெரும்பாழ் என்றார். பாழ்செய்தும் அதனாலுந்தன் சினம் அமையானாகி. அமைதல்—இல்லையாதல். மருங்கற—அப்பகைவர்க்குத் துணையாய சுற்றம் அற்றொழிய. மருங்கு—அவர் குலமெனினுமமையும்.

**271—75.** மலையகழ்க்குவன்—மலையை அகழ்தல் செய்வன். இவன் குலத்து முன்னோன் காவிரி கொணர்தற்குக் குடகக்குவடு அகழ்ந்தது நோக்கியது.

"கொங்கிற் குடகக் குவடேறுத் திழியத்
தங்கும் திரைப் பொன்னிதந் தோனும்"

(மூவருலா)

எனவும்,

"மலைகொன்று பொன்னிக் குவழிகண்ட
கண்டன்" (தக்கயாகப். 549)

எனவும் வருதலானறிக. கடல் தூர்க்குவன்—கடலைத் தூர்த்தல் செய்வன். இச் சூரியகுலத்து அயோத்தியரிறை கடல் தூர்த்துத் திருவணை கட்டியது நோக்கிற்று. இனி "மேல்கடலில், வீங்குநீர்

கீழ்கடலில் விட்டோனும்'' (விக்கிரமசோழனுலா) என்பது பற்றி மேல்கடல் குறையச்செய்த பெருவிக்கிரமத்தை இது குறிப்ப தெளினுமமையும். வான் வீழ்க்குவன்—வானத்துள்ளனவற்றைக் கீழ்வீழ்த்தல் செய்வன். இது ''விசும்பிற் றூங்கெயின் மூன் றெறிந்த சோழன்'' (சிலப். வாழ்த்து) செய்தியை நோக்கிற்று.

''வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பிற்
றூங்கு மெயிலுள் தொலைத்ததால்''

என்றார் பழமொழியினும்.

'' தூங்கெயி லெறிந்த நின்னூங்கணோர்''

என்பது புறம் (39).

வளி மாற்றுவன்—காற்றைத் தன் விருப்பப்படி யியக்கும் வண்ணம் மாற்றிக்கொள்வன். இது இவன் முன்னோன்,

'' நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளி தொழி லாண்ட''

(புறம். 66)

செய்தியை நோக்கிற்று. இவ்வாறு இவன் குலத்தோர் பலர் ஒவ்வோர் காலத்துச்செய்தன எல்லாம் இக்காலத்தே யிவனொருவனே செய்வ னென்று கண்டார் சொல்லவென்க. புறப்பாட்டில்,

''எரி நிகழ்ந்தன்ன செலவிற் செருமிகுவளவ''

எனக் கூறுதல் கொண்டு இவனே எரியாய் நிகழ்தலான் அதனை வேறு கூறினாரில்லைபோலும். அகழ்க்குவன் என்பது முதலாக வருவனவற்றைத் தன்மைச் சொல்லென்று கொண்டு இப்பாட் டுடைத் தலைவனே இங்ஙனம் இங்ஙனஞ் செய்வனென்று தான் முன்னியதுறை போகலின் என்றலும் இயையும். இவ்வடிகளின் கருத்தைப் புறப்பாட்டில்,

''வேண்டியது விளைக்கு மாற்றலை'' (38)
''வேண்டிடத்தடூஉம் வெல் போர் வேந்தே'' (41)

எனவும் இப்பாட்டுடைத் தலைவனைக் கூறியவற்றோடு ஒப்பு நோக் கிக் கொள்க. இவ்வாறு தான் நினைத்த போர்த் துறைகளிற் றட்ட றப் போதலான் இஃது,

'உன்னியது முடிக்கும் வேந்தனது சிறப்புக் கூறியது''
எ-று. (தொல். புறம். 12)

பல் ஒளியர் பணிபு ஒடுங்க—பலரால் ஒன்றுபட்ட ஒளிப்பற்றிலுள்ள வேளாளர் இவனைப் பணிந்து இவனுக்கு ஒடுங்கி யொழுகவும் என்க.

''ஜயசிங்க குலகால வளநாட்டு வட சிறுவாயில் நாட்டு ஒளிப்பற்று வாளுவ மங்கலம்''

எனப் புதுக்கோட்டைச் சாசனத்தின் (No. 145) வருதலான் இவ்வொளியரிருந்த இடன் அறியலாகும். தொல் அருவாளர் தொழில் கேட்ப-பழைய அருவாள நாட்டார் இவன் ஏவிய தொழில் கேட்டொழுகவும். தொல் அருவாளர் என்றது அருவா வட தலையாரை யெனினுமமையும். தமிழ் நாட்டினகத்துத் தெற்கட் பகுதியும் வடக்கட் குறித்தார்.

276-80. வடவர் வாட—தமிழ் நாட்டிற்கு வடக்கண்ணுள்ளவர் இவன் படை யெடுப்பன் என்று மனம் வாட எ—று.

''துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே'' (புறம் 34)

என இவன் தந்தையைப் பாடுதலான் அவனைப் போல இவனும் வரல் கூடுமென்று வடவர் வாட என்க. இனி,

''கொடியணி யேனம்''.பொடியணிந்து கிடப்ப,
வடதிசை வாகை சூடித் தென்றிசை
வென்றி வாய்ந்த வன்றூர் விடலை,
வளவ னிமிழிசை வேங்கடம் போல
..........................
நாவலொடு பெயரிய ஞாலம்
காவல் போற்றி வாழியர் நெடிதே'' (தொல். செய். 146)

எனப் பேராசிரியர் உரை மேற்கோள் வருதல் பற்றி இவ்வளவனே பன்றிக் கொடியுடைய சாளுக்கியனை வாடச் செய்தான் என்பதூஉ மாம். சாளுக்கியர் வேள்புலவரச ரென்ப.

தன்னாட்டிற்குக் குடக்கணுள்ள நாட்டார் மனங்குவியத் தன்னாட்டிற்குத் தெற்கணுள்ள பாண்டியன் வளங் கெடச் சீறி. சீறி—உள்ளத்தாற் சீற்றஞ் செய்து.

"மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே" (புறம். 42)

என இவ்வளவனை இடைக்காடனார் பாடுதலான் இவ்விருவரும் பகைஞராதல் அறிக. இப்புறப்பாட்டுப் பாண்டியனைப் பாடியதாகலாம். "வாழிவளவ" என வருதலானும்

"மென்புல வைப்பினன் னாட்டுப் பொருந"

எனப்பாடுதலானும் இனிது துணியலாம். மென்புலம் மருதமு நெய்தலும் என உரைகாரர் உரைத்ததுங் காண்க. மருதமு நெய்தலுமிக்க நாடு சோணாடாதல் காண்க. பலரையும் பன்மையாற் கூறியவர் தென்னவன் எனப் பாண்டியனை ஒருமையாற் கூறியது அவன் தனியே இவனொடு பொருதமை குறித்ததாம். மன்னர் மன்னெயில்கதுவும் மதனுடை நோன்றாள்—பகைமன்னர் நிலைத்த அரண்களை யிடிக்குஞ் செருக்குடைய வலிய முயற்சியினையுடைய

மாத்தானை மறமொய்ம்பின்—பெரும்படையின் தறுகண்மை வலியினோடு. செங்கண்ணாற் செயிர்த்து நோக்கி—செயிர்த்துச் சிவந்தகண்ணால் நோக்கி. நோக்கியதிலேயே தன் உள்நாட்டிற் குறும்பு செய்த புன்பொதுவர் வழியுடன் பொன்றுதற்கும்,

281—85 இருங்கோவேண்மான் தன் குலத்தொடு சாயாதிருக்கவும் இவ்வாறு நாட்டின் புறத்தும் நாட்டின் அகத்தும் பகையில்லையாகச் செய்தவளவில் எ-று.

"செருவேட்டுச் சிவக்குஞ் செங்கணுடவர்"

என அகத்தினும் (157) வந்தது. இயல்பாகச் சிவந்த கண்ணாற் காணப்பட்டார்க்கு வெகுளிக் குறிப்புத்தோன்ற நோக்கி. புன்பொதுவர் என்றார் புல்லினத்தாயர் ஆகலான். இனிப்பொதுவர் புல்வழிபொன்ற என்றியைத்து ஆயர்புன்னெறி கெடவென்று பொருள்கூறி அவரவர் கருதிய நன்னெறியிற் செல்ல எனக்கொள்

ளினு மமையும். இருங்கோவேள் இவனுட்டகத்துப் பிடவூரிலிருந்தவன். இவன் குலத்தொடு தலைசாயவென்க.

"இருங்கோ வேண்மா னருங்கடிப் பிடவூர்" என்பது புறம் (395)

பிடவூர் இப்பொழுது அரியலூர்ப் பற்றிலுள்ளது. இனித்தன்னுடும் ஊரும் வளம்படுத்துதல் கூறுகின்றார்.

காடு கொன்று நாடாக்கி — காடுகொல்லுதல் பாவமேனும் அதை நாடாக்குதற் பொருட்டுச் செய்தல் குறித்தார். கொன்ற பாவங்கெட ஆக்கி என்பது கருத்து. நெற்செய்யப் புற்றேயுமாறு போல நாடாக்குதற்கட்காடு கொல்லப்பட்ட தென்பதறிக. மேற் பிறநாட்டிற் செய்த போரும் இந்நாட்டிற்குத் துணையாதல் உய்த்துணர்ந்து கொள்க. கொன்று என்னும் வினையாற் பாவங்குறித்தார் என அறிக. குளந்தொட்டு வளம்பெருக்கி—அந்நாடிருந்த இடத்து நீர்நிலைகளைத் தோண்டி அவற்றின் புறவாயில் வயல்வளம் பெருகச் செய்து.

பிறங்குநிலை மாடத்துறந்தை போக்கி—விளங்கியுயர்ந்த பல நிலை மாடங்களையுடைய உறந்தையென்னுந் தன்தலைநகரை நீள வளர்த்து. "போகல் நீளல்" என்பது தொல்காப்பியம்.

286—90. கோயிலொடு குடிநிறீஇ—தெய்வங்கள் இறை கொண்ட பலகோயில்களுடன் அவற்றை வழிபடுதற்குரிய குடி மக்களையும் நிலைபெறுவித்து. இவரே பெரும் பாணாற்றிற்,

"பல்குடி கெழீஇ............
...........................
விழவு மேம்பட்ட பழவிறன் மூதூர்" என்பதனுல்,"

ஊர்க்குப் பல குடி கூறுதல் காண்க. புகுதற் கெளியவான வாயில்களையும் அவ்வாயிற் கதவிற் புழைகளையும் அமைத்து. புழை இக்காலத்துத் திட்டி வாயில் என்று வழங்கப்படும். இனிப்புழை எயிலின்றலையில் அம்பெய்தற் கமைத்த புழை யெனினு மமையும். ஞாயில் என்பது அவ்வாறெய்தவர் பகைவரான் எய்யப்படாமல்

மறைதற்குரிய சூட்டு. இதைக் குருவித் தலையென்பர். அச்சூட்டுத் தோறும் எய்தற்குரிய அம்புக் கட்டுகளை நிறுவி யென்க. புதை—அம்புக்கட்டு. பொருவேம் எனப் பெயர் கொடுத்து—விசி பிணி முழவின் வேந்தர் முன்னே இவனொடு பொரக் கடவோம் என்று பொருதற்கொத்த வீரப் பெயரைத் தாமே தமக்குக் கொடுத்துக் கொண்டு. பெயர்—வஞ்சினத் திற்றமக்குக் கூறும் பெயரென்ப. அங்ஙனங் கூறியதற்கேற்ப ஒருவேமெனப் புறக்கொடாது—உயிர் போமளவும் போர்முனையினின்று நீங்கோம் என்று சொல்லிப் புறக்கொடை தராதிருந்து. இனிக் கொடுத்த பெயர் புறக்கொடாது என்னினு மமையும். மதுரைக்காஞ்சியுள் பெயர் புறக்கொடாது என வருதலானறிக.

291—94. திருநிலை இய — வீரத்திருநிலைஇயபெருமன்னெயில் மின்னொளியெறிப்ப — பின்னே வீரத்திருநிலைபெற்ற பெரிய தலைமையையுடைய இவ்வுறந்தையரண் ஒளியெறித்தலால் மறமன்னெயில் (புறம் 40) எனப்பட்டது. தம்மொளிமழுங்கி எ—று. விசிபிணி முழவின் வேந்தர்—விசித்துப் பிணித்த முரசினையுடைய வேந்தர். முரசு பெருவேந்தர்க்குச் சிறந்தது.

"முரசு கெழுதாயத்தரசோ தஞ்சம்" (புறம் 73)

"முரசுடைச் செல்வர்" (நாலடி) முரசு கொண்டு (பதிற்.) என வருதலானறிக. இவன் பிணியகத் திருந்ததற்கு முன்னே வேந்தர் பெயர் கொடுத்துப் புறக்கொடாதிருந்து இவன் வெளிப்போந்த பின்னே இவன் மன்னெயில் ஒளி யெறிப்பக் கண்ட அளவே, தம் ஒளி மழுங்கித் தாம் சூடிய பசுமணியை இவன் கழலிற் சேர்த்திய காலினையும் என்க. பசுமணி—மரகத மணி. வேந்தர் தம்முடியை அகற்றிச் சூடிய மணி பொருத கழற்கால் என்பதும் பொருந்தும், வேந்தர் மழுங்கிச் சூடிய மணியைப் பொருதகழல் என்க. பொருதல்-இசைத்தல், சேர்த்தல்.

இவனை

"நீயே, பிறரோம் புற்றமன்னெயி
லோம்பாது கடந்தட் டவர்முடி புனைந்த

பசும்பொன் னி னடிபொலியக்
கழறைஇய வல்லாளனை வயவேந்தே'' (புறம். 7)

எனப் பாடுதலான் இதற்கேற்பக் கூறுவதே ஈண்டுப் பெரிதும் பொருந்துமென் றுணர்க.

295-301 பொற்றொடிப் புதல்வர் ஓடி விளையாடவும் மகளிர் முலை திளைப்பவும் செஞ்சாந்து சிதைந்த மார்பினையும் அரிமா அன்ன அணங்குடைத்துப்பினையும் உடைய திருமாவளவன் என்க. கழற் காற் கேற்பத் துப்பும் (வலியும்), மகளிர் முலை திளைத்தற் கேற்பப் புதல்வர்ப் பேறும் தோன்றக் கூறினர். இவற்றாற் பொருளு மின்ப முங் கூறி மேல் அவன் கோலினுந் தண்ணிய என்பதனால் அறங் கூறினரென வுணர்க.

''அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்'' (பொருநாறு. 230)
என்றார் பிறரும்

திருமாவளவன்-திருமகள் நிலைபெற்ற மாவளவன். ந-று.

''கொடி நுடங்கியானை நெடுமாவளவன்'' (புறம். 228)

என இவன் பாடப் படுதலான் இவன் பெயர் அறிக. ஈண்டுக் கூறியபடியே,

''பிறங்கு நிலை மாடத் துறந்தையோனே''
''பொருநர்க் கோக்கிய வேலன்'' (புறம். 69)

எனப் புறப்பாட்டினும் இவன் பாடப்படுதல் காண்க. நெஞ்சே நீ செல்ல நினைந்த கானங்கள் வேலினும் வெய்ய வாயின. இவள் தடமென் றோள்கள் அவன் கோலினுந் தண்ணியவாயின. ஆதலாற் றிருமாவளவன் பட்டினம்பெறினும் வாரேன் வாழிய என்க. இதன்கட் கூறப்பட்ட கிளவித் தலைவன் இத்திருமாவளவன் கோலின்கீழ் வாழ்ந்து அதன் நட்பத்தைத் துய்ப்பவனாதல் இதனா லறியலாம். இவன், அவன் கோலின் தட்பத்தினும் மிகுத்துத் தலைவி யின் றோளின் தட்பத்தைக் கூறுவது அவன் கோல் அதன்கீழ் வாழு வார் பலர்க்கும் பொதுப்படத் தட்பஞ் செய்தலும், இவள் தோள் இத்தலைவற்கே சிறந்து தட்பஞ் செய்தலும் நோக்கி யென்று நினை

கத்தகும். தோளின் தட்பம் அவள் இவனை அணைத்தலான் அறியப் பட்டதாமென்க. இனிக் கோல் தன்கண் அடங்கினார்க்குத் தட்பஞ் செய்து புலந்தார்க்குத் தட்பஞ் செய்யாமையான், அணைந்தாலும் புலந்தாலுந் தட்பஞ் செய்யும் தலைவிதோளினை மிகுத்துக் கூறினர் எனினு மமையும். இவ்வுண்மையை,

"மழைதுளி மறந்த வங்குடிச் சீறூர்ச்
சேக்குவங் கொல்லோ நெஞ்சே பூப்புனை
புயலென வொலிவருந் தாழிருங் கூந்தற்
செறிதொடி முன்கை நங்காதலி
யறிவுஞர் நோக்கமும் புலவியு மணைந்தே" (அகம். 225)

எனவரும் அகப்பாட்டடிகளானறிக. அவன் பகைவர்க் கோக்கிய வேலினும் வெய்யகானம் என்றது ஒடினாரையும் கீழ்வீழ்ந்து வணங் கினாரையும் அவன் வேல் வருத்தாதாகவும் கானம் அவரையும் மிக வருத்தும் இயல்புபற்றியென்று துணிக. மற்றிவ்வுவமைகளுள்ளே,

"கோலினுந் தண்ணிய தடமென்றோளே"

என்றதனாற் றலைவி தோளையே மிகுத்துக்கூறி தாம் எடுத்துக் கொண்ட இப்பட்டினப்பாலைப் பாட்டுத் தலைவன் கோலினைத் தணித்துக் கூறினாராலெனிற் கூறுவேன். இவ்வாசிரியர் கிளவித் தலைவன் வாயில் வைத்துக்கூறியது இப்பாட்டுடைத்தலைவன் கோல் தட்பமேயுடைய தென்பதாம்.

"உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங்காலை" (தொல். உவமவியல்)

என்ற விதியால் உயர்ந்ததாகிய கோலினையே தலைவி தோட்கு உவ மங்கொண்டானென்று கூறினர். மற்று அவ்வுயர்ந்த கோலினுந் தண்ணியதோள் என்றதனால் தலைவிதோளை மிகுத்துக் கூறியது எல்லாவுயிர்க்கும் பொதுமைத்தாகிய இவ்வுலகத்தின் காமவின்பத் தின் சிறப்பினை உணர்த்தவேண்டி என்க. வள்ளுவனாரும்,

"தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு"

என்று மிகுத்துக் கூறியது காண்க. ஆண்டுத் தாமரைக் கண்ணா னுலகந்தமிலின்பத்தினும் தலைவியின் தோட்டுயிலே இனிதென்று கூறியதனால் அந்தமிலின்பம் இவ்வின்பத்திற்குத் தணிந்ததாகாதவாறுபோல ஈண்டுங்கொள்க.

"ஓரீஇக் கூறலு மரீஇய பண்பே" (தொல். உவம. 33)

என்பதனால் உவமையை இவ்வடிக்கு நோக்கென்று கொள்க. இதுவே கவிமரபென்பது,

தொல்காப்பியனார்,

"அந்தமில் சிறப்பி னாக்கிய வின்பந்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே"

(தொல். பொருளியல். 49)

என்றதனானுணர்க.

அந்தமில் சிறப்பு - இறுதியில்லாத வீடு; அதன்கண் உளதாகிய நிரதிசயவின்பம் தலைவியொடு கூடியதன்கண் வருதலாகக் கூறலும் வழுவாகாது முன்னை ஆசிரியர் வகுத்துக்காட்டிய பழைய தன்மை என்றவாறும், எனப் பொருள்கூறிக்கொள்க. இது பற்றியே வள்ளுவர் முதலான தொல்லாசிரியரும் பின்னுள்ள தமிழ் வல்லுநரும் தாம்தாம் உயர்த்தியாகக் கருதிக்கொண்ட இன்பத்தோடுவமித்தே புணர்ச்சியின் மகிழ்தற்றுறை கூறுதலான் இவ்வுண்மையுணர்க. திருக்கோவையில்.

"அம்பலத் தண்ட ரண்டம் பெறினும்
மாறார் மழவிடையாய் கண்டிலம் வண்கதிர் வெதுப்பு
..............................................
சீறார் மரையதளிற்றங்கு கங்குற் சிறுதுயிலே" (398)

என்றது முதலாக வரும் பன்னூறிலக்கியங்கட்கும் இத் தொல்காப்பியச் சூத்திரமே இலக்கணமென்று கொள்க.

"இதுவே முத்திமற்றில்லையே" (திருவாரூர்க்கோவை. 67)

என்று பிற்காலத்தவரும் கூறுதல்காண்க. இதனால் நூலாசிரியன் பாட்டுடைத் தலைவன் குறித்த இன்பத்தையே உயர்த்திக்காட்டற்குக் கிளவித்தலைவன் வாயில்வைத்துத் தன்தலைவியின் இன்பத்

திற்குவமைகூறு முகத்தாலோ ஒரீஇக் கூறுமுகத்தாலோ ஏற்ற பெற்றி யெடுத்தாள்வதே கவிமரபென்று கொள்க. இவ்வரிய வுண்மையுணரப்படாமையான் இச்சூத்திரத்திற்கு வேறு வேறுரை யெழுந்தன வென்க. துய்க்கும் இன்பத்தையிழந்து துன்பநிறைந்த வெய்யகானம் புகுதலின் வாரேன் என்றான். எ—று. கேட்கப்படும் பேரின்பத்தின் பொருட்டும் விடற்கரிய தண்ணிய நடமென் றுளின்பம் வெய்யகானத் துன்பத்தின் பொருட்டு விடலாகுமோ என்று கருதிக் கூறினனைக் கொள்க.

"தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு"

என்பதனானுணர்க. பொருத்தபு புலமை உருத்திரங்கண்ணனார் நுண்பொருள் ததும்ப இன்சொற் புணர்த்தி யாற்றொழுக்காக இனிதியாத்த இப்பாட்டை மாட்டேற்றிலக் கணத்தாற் சிதைத் திடர்ப்படுத்தியைத்தலே வேண்டாமை உய்த்துணர்ந்து கொள்க. இனிப் பொருநராற்றுப்படையார்,

"தேனெய்யொடு கிழங்குமாறியோர்
மீனெய்யொடு நறவு மறுகவும்
.....................................
குறிஞ்சி பரதவர் பாடநெய்த
னறும்பூங் கண்ணி குறவர்சூட
.....................................
மனைக்கோழி தினைக்கவர
வரைமந்திக் கழிமூழ்க"

எனக்குறிஞ்சியும் நெய்தலும் அணுகவைத்துக் கூறினற்போலக் கூறாது இவர் இப்பட்டினப்பாலையிற் குறிஞ்சியே யில்லாமற் பாடுதல் நோக்கின் இவர் நாட்டினியல்பை உள்ளபடியே கூறும் இயல்பினரென்றுணரலாம்.

Tamil Nadu Press, Madurai—51